
Not for sale

ஜனவரி - பிப்ரவரி 2015

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



# எசேக்கியேல்

எசேக்கியேல் 18 • எசேக்கியேல் 44

நம்முடைய எச்சரிப்புக்காக எழுதப்பட்ட காரியங்கள்

சுவற்றின் வழியாக தோண்டுதல் • ஆறு ஆட்டுக்குட்டிகள்

எசேக்கியேல்

# ஆதியிலே



பெரிய தீர்க்கதரிசிகள் என்று குறிப்பிடப்படும் ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் மற்றும் தானியேல் தீர்க்கதரிசிகளில் ஒருவர் - எசேக்கியேல். (இவர்களுக்கு மாறுபட்டவர்களாக, பழைய ஏற்பாட்டின் முடிவில் 12 "சிறிய" தீர்க்கதரிசிகள் காணப்படுகிறார்கள்).

எசேக்கியேல் ஒரு ஆசாரியனாக இருந்ததினால், 20 வருடங்களுக்கு மேலாக அவர் செய்த தீர்க்கதரிசன பணியை, ஒரு முதிர்ச்சியுள்ள லேவியனாக செயலாற்றினார். எசேக்கியேல், எரேமியா தீர்க்கதரிசி வாழ்ந்த காலத்திலிருந்த இளைய தீர்க்கதரிசியும், தானியேலின் காலத்தில் வாழ்ந்த வயது முதிர்ந்த தீர்க்கதரிசியாகவும் இருந்தார்.

இந்த ஹெரால்டு பிரதியின் அட்டையில் காணப்படும், "உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு" என்ற 37-ஆம் அதிகாரத்தின் தீர்க்கதரிசனம், எசேக்கியேலின் புகழ்பெற்ற தீர்க்கதரிசனமாகும். கிறிஸ்துவின் மரணத்தில், இஸ்ரயேல் தேசம் நியாயத்தீர்ப்பைப் பெற்று, 1845 வருடங்களுக்குப் பின் வாழ்ந்தவர்கள், 1878-ஆம் வருடத்திலிருந்து அவர்கள் தேசம் திரும்பியதிலிருந்து, சொல்லப்பட்ட இந்தத் தீர்க்கதரிசனம் படிப்படியாக நிறைவேறிக்கொண்டு வருகிறது. அதற்குப்பின், தேசம் திரும்பிய இஸ்ரயேலை வட திசையிலிருந்து வந்து தாக்கும் கோகுவைக்குறித்த விவரங்களையும், அப்பொழுது தேவன் இஸ்ரயேலுக்குச் சார்பாகக் குறுக்கிடும் காரியங்களையும்குறித்து எசேக்கியேல் 38 மற்றும் 39-ஆம் அதிகாரம் கூறுகிறது.

எசேக்கியேல் புஸ்தகத்திலுள்ள மற்ற அதிகாரங்கள் இந்த மூன்று அதிகாரங்களைப்போல அதிகமான சத்தியங்களைக்கொண்டிருப்பதினாலும், அதிகமாக ஆராயப்படாததினாலும் இந்த மூன்று அதிகாரங்களும், இந்தப் பிரதியில் அதிமாக சம்பாஷிக்கப்படவில்லை.

"எசேக்கியேல் 18" என்ற தலைப்பிலுள்ள கட்டுரையோடு இந்தப் பிரதி துவங்குகிறது. பாரம்பரியமாக, பிதாக்களின் பாவங்கள் பிள்ளைகளிடம் விசாரிக்கப்படும் என்று அர்த்தங்கொண்டுள்ள பிரபலமான பழமொழி - "பிதாக்கள் திராட்சக்காய்களைப் புசித்தார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயிற்று" - என்று இந்த அதிகாரத்தில் காணலாம். இக்காரியம் மாற்றப்படும் என்று தேவன் எசேக்கியேலிடம் கூறினார். நன்மையானாலும் சரி, தீமையானாலும் சரி, அவரவர் தன் தன் நடத்தைக்கேற்ற அனுபவங்களைப் பெறுவார்கள். கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சியில் இது முழுமையாக நிறைவடையும். இந்தக் கட்டுரையானது, இதன் பொருளைத் தெளிவுப்படுத்துகிறது.

தொடர்ந்து சபை, திரள் கூட்டம், முற்பிதாக்கள் மற்றும் உலகம் போன்ற வெவ்வேறு வகுப்பார், இராஜ்யத்தில் எவ்வாறு செயல்படுவார்கள் என்பதை "எசேக்கியேல் 44" என்ற கட்டுரை ஆழமாகக் கண்ணோக்குகிறது. இந்த வகுப்பார் மத்தியில் காணப்படும் பரஸ்பர கிரியைகளின் பல விவரங்கள் ஊடுருவக்கூடியதை இந்தக் கட்டுரையில் விவாதிக்கப்படுகிறது.

"நம்முடைய எச்சரிப்புகளுக்காக எழுதப்பட்ட காரியங்கள்" மற்றும் "சுவற்றின் வழியாகத் தோண்டுதல்" என்ற தலைப்புகளில் காணப்படும் கட்டுரை, நமக்குத் தேவையான திருத்தங்கள், கட்டளைகள் மற்றும் எச்சரிப்பான முக்கியமான பாடங்களைத் தருகிறது. இஸ்ரயேல்களின் ஒழுங்கற்ற பழக்கங்களுக்கு விரோதமாகக் கொடுக்கப்பட்ட நேரடியான குற்றச்சாட்டுகளினால் எசேக்கி யேல் தீர்க்கதரிசனம் நிறைந்திருக்கிறது. நாம் இப்படிப்பட்ட காரியங்களுக்கு இணங்காமல் இருப்போமா? நம்முடைய வாழ்க்கையிலும், பழக்கவழக்கத்திலும் காணப்படும் ஆவிக்குரிய "விக்கிரகாரா தனையைக்" குறித்து அப்போஸ்தலனாகிய யோவான் நம்மை எச்சரிக்கவில்லையா? இந்தப் பாடத்தில் காணப்படும் அறிவுறுத்தக்கூடிய நுணுக்கமான வார்த்தைகளை நம்முடைய இருதயத்திற்கு எடுத்துச் செல்வோம். எசேக்கியேல் கொடுக்கும் எச்சரிப்புகள், கடந்துபோன நாட்களில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல.

இறுதியாக, "ஆறு ஆட்டுக்குட்டிகள்" என்ற தலைப்பானது, ஆயிரவருட ஆட்சியில் இந்த உலகம், பழைய ஏற்பாட்டின் நீதிமான்கள் மற்றும் இஸ்ரயேல் தேசத்தோடு எசேக்கியேல் 46-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட காணிக்கைகள் எவ்வாறு சம்மந்தப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி ஆராய்கிறது. இந்த மூன்று வகுப்பாரும் ஆயிரவருட ஆட்சியில் செலுத்தக்கூடிய வித்தியாசமான காணிக்கைகளைக்குறித்து இந்தக் கட்டுரை விவரிக்கிறது. அதற்குப்பின் அடிப்படையான இந்த மூன்றுவிதமான காணிக்கைகளும் பழைய ஏற்பாட்டில் ஒன்றோடொன்று எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறது.

எசேக்கியேல் தீர்க்கதரிசியிடமிருந்து ஆயத்தம் பண்ணப்பட்ட பாடங்களை நம்முடைய வாசகர்கள் ஆழமாகக் கருத்தில்கொண்டு சிந்திப்பதற்கு அதிகமாகக் கவனம் செலுத்துவார்கள் என்று நாம் நம்புகிறோம்.

**ஜனவரி / பெப்ரவரி 2015**


**எசேக்கியேல் 18** 39

நான்கு வகுப்பார்

**எசேக்கியேல் 44** 43

அதிபதிகள், ஆசாரியர்கள் மற்றும் லேவியர்கள்

**நம்முடைய எச்சரிப்புக்காக எழுதப்பட்ட காரியங்கள்** 53

தெளிந்த அறிவுள்ள பாடங்கள்

**சுவற்றின் வழியாகத் தோண்டுதல்** 58

நாம் அபாய நிலையில் இருக்கிறோமா?

**ஆறு ஆட்டுக்குட்டிகள்** 63


எசேக்கியேல் 46:1-13

**தீர்க்கதரிசனத்தில் இன்று** 72

. . . . நான்கு வகுப்பார்

# எசேக்கியேல் 18

"பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்னும் பழமொழியை நீங்கள் இஸ்ரவேல் தேசத்தைக்குறித்துச் சொல்லுகிறது என்ன?" (எசேக்கியேல் 18:2)



George Duhamine

எசேக்கியேல் 18-ஆம் அதிகாரத்தில், ஒரு கேள்வி, ஒரு வாக்குத்தத்தம் மற்றும் ஒரு சவாலைப் பயன்படுத்தும் வழியாக பிதாவாகிய தேவன் இஸ்ரயேல் தேசத்திற்கு தம்முடைய செய்தியை அறிவித்தார்.

**(1) கேள்வி**

"பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்னும் பழமொழியை நீங்கள் இஸ்ரவேல் தேசத்தைக்குறித்துச் சொல்லுகிறது என்ன?" (எசேக்கியேல் 18:2).

எசேக்கியேலின் நாட்களில் இப்படிப்பட்ட ஒரு பழமொழி பிரபலமாக இருந்ததைக் கற்பனை செய்வது கடினமாக இருக்கிறதல்லவா? இஸ்ரயேலர்கள் தங்களுடைய தேசத்திலிருந்து வலுக்கட்டாயமாகக் குடிபெயர்க்கப்பட்டு, அந்நிய தேசத்தில் சிறை வைக்கப்பட்டனர். இஸ்ரயேல் ஜனங்கள் சொந்த துர்கிரியைகளினாலேயும், அவர்கள் "பிதாக்கள்" செய்த தவறுகளினால், இப்படிப்பட்ட சூழ்நிலைகள் நிலவியது என்று தீர்க்கதிரிசிகள் மூலமாக உரைக்கப்பட்டது (எடுத்துக்காட்டாக:- எரேமியா 2:5; 3:25; 7:25).

கூடுதலாக, ஏதேன் தோட்டத்தில் ஆதாமினுடைய கீழ்ப்படியாமையினால், மற்ற தேசங்களோடு வியாதிகளையும், மரணத்தையும் சுதந்தரித்தார்கள் என்று பழைய ஏற்பாட்டின் காலத்தில் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டது. பல வருடங்களுக்குப்பின் ஈடிணையற்ற இயேசுவின் பலியின் மரணத்தின் மூலமாகக் கிடைத்த நன்மையை அப்போஸ்தலனாகிய பவுல், பறைசாற்றி ரோமர் 5:18-ஆம் வசனத்தைக் கூறி, "ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரேநீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று" என்று இந்த நியாயத்தீர்ப்பை அடிப்படையாகக்கொண்டுள்ள தெய்வீக நீதியை அவர் மிகத் திறமையாக விவரித்தார்.

எப்படியிருந்தாலும், அதன் துவக்கத்தை கருத்தில்கொள்ளாமல் அல்லது இந்தப் பழமொழி எவ்வளவாக இஸ்ரயேலில் பயன்படுத்தப்பட்டதோ, வருங்காலத்தில் தேவனுடைய மனித சிருஷ்டிகளுக்குச் சில முக்கியமான போதனைகளுக்காக ஒரு முன்னுரையைப்போல இது கொடுக்கப்பட்டது.

இந்தப் பழமொழி எரேமியாவின் சமகாலத்திய புத்தகத்திலும் காணப்படுகிறது. "பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்லமாட்டார்கள். அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான்; எந்த மனுஷன் திராட்சக்காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும்" (எரேமியா 31:29-30).

வருங்காலத்தில் தேவன் இந்த மனுக்குலத்தோடு தொடர்புகொள்வதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள வரிசையான வாக்குத்தத்தங்களைக்குறித்து 31-34 வசனங்களில் எரேமியா தொடர்ந்து கூறுகிறார். இவைகளனைத்தும் இணைக்கப்பட்டு, "ஒரு புதிய உடன்படிக்கை" (வசனம் 31) என்று அழைக்கப்படுகிறது. இந்த வாக்குத்தத்தங்கள் எபிரெயர் 8-10 அதிகாரங்களில் மேற்கோள் காட்டப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளது. வனாந்தர பிரயாணத்தில் இஸ்ரயேல் ஜனங்களோடு ஸ்தாபிக்கப்பட்ட பழைய உடன்படிக்கையை ஒரு புதிய உடன்படிக்கை மேற்கொள்ளும் என்று எபிரெயரின் அதிகாரங்கள் கூறுகிறது. இந்த விவரங்கள், இனி வரக்கூடிய காலத்தில், தேவனோடு மனுக்குலம் ஒப்புரவாகக்கூடிய ஒரு காலத்தைக்குறித்து விவரிக்கிறது.

**(2) வாக்குத்தத்தம்**

"இனி இஸ்ரவேலில் இந்தப் பழமொழியைச் சொல்வது இல்லை என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார். இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்; தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது; பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்." (எசேக்கியேல் 18:3-4)

**எசேக்கியேல் 18-ஆம் அதிகாரத்திலுள்ள நான்கு வகுப்புகள் (A,B,C,D)**

| | |
|---|---|
| **வகுப்பு - A** எசேக்கியேல் 18:5-9 - பழைய ஏற்பாட்டு நீதிமான்கள்<br>**வகுப்பு - B** எசேக்கியேல் 18:14-17 - தேவனுடைய இராஜ்யத்தில் பூமிக்குரிய வாழ்க்கையைப் பெறக்கூடியவர்கள். | **வகுப்பு - C** எசேக்கியேல் 18:10-13 - இராஜ்யத்தில் இசைவாக இணங்காதவர்கள்.<br>**வகுப்பு - D** எசேக்கியேல் 18:18 - ஆயிரவருட ஆட்சியின் முடிவில் புரட்சி செய்பவர்கள். |

| **வகுப்பு** | | | | **விவரங்கள்** |
|---|---|---|---|---|
| | | C | | களவு செய்தவர்கள் |
| | | C | | இரத்தம் சிந்தினவர்கள் |
| | | | D | ஜனங்கள் மத்தியில் நன்மையல்லாததைச் செய்தவர்கள் |
| A | B | C | | பர்வதத்தின்மேல் புசித்தவர்கள் (அல்லது புசியாதவர்கள்) |
| A | B | C | | இஸ்ரயேலரின் விக்கிரங்களுக்கு நேராக கண்களை ஏறெடுத்தல் (அல்லது கண்களை ஏறெடுக்காதவர்கள்) |
| A | B | C | | மற்றவரின் மனைவியை சீரழிப்பது (அல்லது சீரழிக்காமல் விட்டுவிடுவது) |
| A | B | C | | அடகு பொருட்களைத் திரும்பக் கொடுக்க மறுத்தல் (அல்லது கொடுத்தல்) |
| A | B | C | D | கந்துவட்டிக்குக் கடன்கொடுத்தல் அல்லது கொடாதவர்கள் எளியோரையும், தரித்திரரரையும் ஒடுக்குபவர்கள் அல்லது ஒடுக்காதவர்கள் |
| A | B | C | D | கலகமூட்டி சகோதரரை வீணாக்குதல் அல்லது வீணாக்காதவர்கள் |
| A | | | | நீதியுள்ள |
| A | | | | நீதி மற்றும் நியாயத்தை நடப்பித்தல் |
| A | | | | தூரஸ்திரீயோடு உறவை தவிர்த்தல் |
| A | | | | அக்கிரமத்திலிருந்து தன்னுடைய கையை விலக்கிக்கொள்ளுதல் |
| A | | | | மனிதர்களுக்கிடையே உண்மையான நியாயத்தீர்ப்பை |
| | B | | | நிறைவேற்றுதல்தந்தைகளின் பாவங்களைக் கண்டு உணர்ந்து அதைத் தவிர்க்கக்கூடியவர்கள் |
| A | B | | | நிர்வாணத்தை வஸ்திரத்தால் மூடுதல் |
| A | B | | | பிதாவின் வழிகளில் நடத்தல் |
| A | B | | | தேவனுடைய நியாயத்தீர்ப்புகளைக் கைக்கொள்ளுதல் |

பொதுவான பழமொழியைத் தள்ளுபடி செய்வதற்கு பழைய சட்டங்கள், மறுபடியும் எழுதப்படும் என்று தேவன் இங்கு வாக்களிக்கிறார். பிதாக்களைப்போல, குமாரர்களின் மேலும் அவர் அக்கறையுள்ளவராக இருந்ததினால், இந்த அடிப்படையான வாக்குத்தத்தம், அவரால் மாற்றப்பட்டது. முந்திப் பெற்ற அனுபங்களைக்காட்டிலும், மிகச் சாதகமான சூழ்நிலைகளில், தனிப்பட்ட முறையில் ஜனங்கள் அனைவரும் நியாந்தீர்க்கப்படுவார்கள். இந்த ஒரு சாதகமான சூழ்நிலையைக்குறித்து ஏசாயா 35-ஆம் அதிகாரம் விவரிக்கிறது. "அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்" (வசனங்கள் 8, 10). கால போக்கில் அவர்கள் மரித்தால், அது அவர்களின் சொந்த மீறுதலினிமித்தமாக இருக்குமே தவிர அது ஆதாமின் கீழ்ப்படியாமையின் பலனாக இருக்காது.

**(3) சவால்**

தனி மனுஷரைக்கொண்டு நான்கு வகுப்பாராக இஸ்ரயேல் மற்றும் முழு மனுக்குலத்தையும் குறித்து விவரம் சொல்லப்படுகிறது. புது உடன்படிக்கையின்போது இயேசு மற்றும் சபையினால் மத்தியஸ்தம் செய்யப்படும்போது வாழும் பூமியிலுள்ள முழு மனுக்குலம் அந்த நான்கு பகுதிகளில் உள்ளடக்கப்படுவார்கள். இந்த நான்கு வகுப்பாரின் விதிகளும், தேவனுடைய வாக்குத்தத்தின் நிறைவேற்றத்தை வெளிப்படுத்தும். அதாவது, பழைய பழமொழியாகச் சொல்லப்பட்ட வார்த்தைகள், ஆபிரகாமின் மாம்ச சந்ததிக்கும், இனி எப்பொழுதுமே நடைமுறைப்படுத்தப்படாது. இந்த நான்கு வகுப்பார்கள் என்னவென்றால்:-

**வகுப்பு -A** - இந்தக் கால பகுதியில் பூமியில் பிரவேசிக்கக்கூடியவர்கள், நித்திய ஜீவனைப் பெறுவதற்குப் பாத்திரவான்களாக முன்னதாகவே நிரூபிக்கப்பட்டிருப்பார்கள் (5-9 வசனங்கள்).

**வகுப்பு - B** - இந்தக் காலத்தில் சாதகமான சூழ்நிலையில், முழுமையாகக் கீழ்ப்படிபவர்கள் நித்திய ஜீவனைப் பெறுவார்கள் (14-17 வசனங்கள்).

**வகுப்பு - C** - சாதகமான இராஜ்யத்தின் சூழ்நிலையிலும் கீழ்ப்படியாமையில் நிலைத்திருப்பவர்கள் அக்காலத்தில் அழிக்கப்படுவார்கள் (10-13 வசனங்கள்).

**வகுப்பு - D** - இவர்கள் சாதகமான சூழ்நிலையில், வெளிப்புறமாக மட்டுமே கீழ்ப்படிவதைப்போல காட்சி அளிப்பவர்கள். இவர்களும் முடிவில் அழிக்கப்படுவார்கள் (வசனம் 18).

இஸ்ரயேலுக்கும், யேகோவா தேவனுக்கும் இடையில் முதலில் ஸ்தாபிக்கப்பட்ட நியாயப்பிரமான உடன்படிக்கைக்கு ஏற்றவாறு, இந்த நான்கு வகுப்பாரும் அவர்களின் கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமையின் அடிப்படையில் வேறுபடுத்தப்படுவதை எசேக்கியேல் 18-ஆம் அதிகாரத்தில் காணப்படுகிறது. ஒவ்வொரு வகுப்பாருக்கும் இந்த அதிகாரப்பூர்வமான இந்த உத்தரவை எந்தவிதத்தில் பொருத்தப்படுகிறது என்று தீர்க்கதரிசியால் கொடுக்கப்பட்ட காரியமானது, ஒவ்வொரு வகுப்பாரும் அடையாளம் கண்டுபிடிப்பதற்கு ஏதுவாக இருக்கிறது. ஒவ்வொரு வகுப்பாரும் ஜீவனைப் பெறுவதற்குப் பாத்திரமாக இருப்பதை (பாத்திரமல்லாமலும் இருப்பதை) ஆராய்வதற்கு வேறொரு அதிகாரப்பூர்வமான உத்தரவின் வரிசை பயன்படுத்தப்படுகிறது. இதன் விவரங்கள் மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

**வகுப்பு - A**

நித்தியஜீவனைப் பெறுவதற்குப் பாத்திரவான்கள் என்று முன்னதாகவே கண்டுபிடிக்கப்பட்டவர்கள், பூமியின்மேல் இந்தக் கால பகுதியில் நுழைவார்கள் (5-9). இரண்டு வகுப்பாரில் ஜீவனுக்குப் பாத்திரவான்களாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு வகுப்பார் இவர்கள் (A மற்றும் B). "அவனே நீதிமான்; அவன் பிழைக்கவே பிழைப்பான்" (எசேக்கியேல் 18:9) என்பதே இவர்களைக்குறித்த தேவனுடைய நியாயத்தீர்ப்பாகும்.

சுவிசேஷ யுகத்தின், முந்தய காலத்தில் தங்களுடைய விசுவாசத்தின் வழியாக, "நற்சாட்சிப் பெற்றவர்கள்" "பிதாக்கள்" என்று எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்ட இந்த வகுப்பாரைப்பற்றி வாசிக்கிறோம். "இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" (எபிரெயர் 11:13, 40).

இவர்கள் மட்டுமே நீதியுள்ளவர்களாகக் கண்டுபிடிக்கப்பட்டதால் தங்களுடைய விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டார்கள். இந்த நான்கு வகுப்பாரில், இவர்கள் மனுஷர் மத்தியில் உண்மையான நீதியை நிறைவேற்றின தனித்துவமானவர்கள். தங்களுடைய பரிசுத்தம் (6), நீதி (7), துர்குணத்தை ஒழித்துவிட்டு (8), தேவனுடைய பிரமாணங்களைக் காத்துக்கொண்டது (9). இதினிமித்தம் பாராட்டைப் பெற்றார்கள்.

**வகுப்பு - B**

கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்திற்கு சாதகமான சூழ்நிலைகளுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்ததினால் இவர்கள் நித்தியஜீவனைப் பெற்றார்கள் (எசேக்கியேல் 18:14-17). ஜீவனைப் பெறுவதற்கு இரண்டு வகுப்பாரில் இவர்கள் இரண்டாவது வகுப்பினர். (A மற்றும் B) "அவன் தன் தகப்பனுடைய அக்கிரமத்தினிமித்தம் சாகாமல் பிழைக்கவே பிழைப்பான்." இதுவே இவர்களைக்குறித்த தேவனுடைய தீர்ப்பு. பாவம் மற்றும் தீமையின் அனுபவத்தை மனுக்குலம் பெறும்போது, இந்தப் பழமொழியை இரத்து செய்பவர்கள் இவர்கள்.

இந்த வகுப்பு ஒரு குறிப்பிட்ட குணத்தில் தனித்துவமாகக் காணப்படுகிறது. இவர்கள் கண்டு, சிந்தித்து, தங்களுடைய பிதாக்களின் பாவங்களைவிட்டு ஓய்ந்தவர்கள். இவர்கள் இந்தப் பூமியின்மேல் அசைவாடிக்கொண்டிருந்த தீமையின் அனுமதியிலிருந்து முழுமையாகப் பலனடைந்தவர்கள்.

**வகுப்பு - C**

இவர்கள் இராஜ்யத்தின் சாதகமான சூழ்நிலையிலும் கீழ்ப்படியாமையில் தரித்திருப்பவர்கள் (எசேக்கியேல் 18:10-13). இவர்கள் ஜீவனைப் பெறுவதற்கு தகுதியற்ற இரண்டு வகுப்பாரில் ஒரு வகுப்பார் (C மற்றும் D). "அவன் சாகவே சாவான்; அவன் இரத்தப்பழி அவன்மேல் இருக்கும்" (18:13) என்பதே இவர்களைக்குறித்த ஆண்டவருடைய நியாயத்தீர்ப்பு.

இவர்கள் தீர்க்கதரிசியின் வார்த்தைகளைக் கேட்பதற்கு மறுப்பவர்கள். "அந்தத் தீர்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராத படிக்கு நிர்மூலமாக்கப்படுவான்" (அப்போஸ்தலர் 3:22-23). பூமிக்குரிய இராஜ்யத்தைக் குறித்து ஏசாயா விவரிக்கும்போது, (65-ஆம் அதிகாரத்தில்) இந்த வகுப்பாரைக்குறித்து 20-ஆம் வசனத்தில், "நூறு வயது சென்ற பாவி" என்று குறிப்பிடுகிறார். "இரத்தப்பழி மற்றும் வட்டிக்கு வாங்குதல்" என்ற வார்த்தைகள் - இவர்கள் விடாப்பிடியாக பாவத்தில் நிலைத்திருப்பதை அடையாளப்படுத்துகிறது.

**வகுப்பு - D**

பூமியின்மேல் சாதகமான சூழ்நிலைகள் காணப்படும்போது, மேற்புறமாக மட்டுமே, கீழ்ப்படிவதைப்போல தோற்றம் அளிக்கக் கூடியவர்கள் முடிவிலே அழிக்கப்படுவார்கள் (18:18). இவர்களும் ஜீவனைப் பெறுவதற்குத் தகுதிப்பெறாத இரண்டு வகுப்பாரில் (C மற்றும் D) ஒரு வகுப்பார். "அவன் தன் அக்கிரமத்திலே சாவான்" என்பதே இவர்களைக்குறித்த தேவனுடைய நியாயத்தீர்ப்பாகும்.

இந்த வகுப்பாரைக்குறித்து நம்முடைய ஆண்டவராம் இயேசு வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் என்ற உவமையில் பேசியிருக்கிறார் (மத்தேயு 25:31-46). பரலோக ஆளுநர்களால், புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தம் செய்யப்படும்போது, நீதியான வெளித்தோற்றத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் ஆடுகளே இவர்கள் (C வகுப்பாரைப்போல இவர்கள் வெளிப்படையாக பாவம் செய்வதில்லை. வெளிப்படுத்தல் 20:7-9-ஆம் வசனங்களில் பதிவு செய்யப்பட்டபடி, "ஆயிர வருட" ஆட்சியின் முடிவில், "பரிசுத்தவான்களின் பாளையத்திற்கு" விரோதமாக இவர்கள் எழும்பி தங்களுடைய உள்ளத்தின் சுயநலமான நிலையை வெளிப்படுத்தும்வரையில் இவர்கள் நீதிமான்களைப்போல இருப்பார்கள்.

எசேக்கியேல் 18-ஆம் அதிகாரத்தில் இந்த வகுப்பாரைப்பற்றி இரண்டு குறிப்பிடும்படியான பாவங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. உவமையில் சொல்லப்பட்ட வெள்ளாடுகளைப்போல இவர்கள் எளியோரிடமும், ஏழைகளிடமும், இரக்கமற்று நடப்பவர்கள். மேலும் தங்களுடைய சகோதரர்களை தங்களுடைய முரட்டுத்தனத்தினால் கெடுக்க முயற்சிப்பவர்கள். (கலகத்தின்போது அவர்களின் முடிவு) ஜனங்கள் மத்தியில், இந்த வகுப்பார் மட்டுமே, நன்மை செய்யாதவர்கள் என்று இவர்களைப்பற்றி சொல்லப்படுகிறது.

**முடிவுரை**

எசேக்கியேல் 18-ஆம் அதிகாரத்தின் மீதி வசனங்களில் எசேக்கியேல் மற்றும் இஸ்ரயேல் ஜாதிக்கும் இடையிலுள்ள சம்பாஷணைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில், தேவனுடைய வாக்குத்தத்தங்களைக்குறித்த நீதிமொழிகள், இக்காலத்து, தேவனுடைய திட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் (அறியாதவர்கள்), தொடர்ந்து பாவம், தீமை, வியாதி மற்றும் மரணத்தின் அனுமதியை எண்ணி, தங்களுக்குள்ளே முழு ஆர்வத்துடன் தொடர்ந்து அறியாமையிலும், குழப்பத்திலும் ஆழ்ந்திருக்கிறார்கள்.

"அவர் அப்புறம் போகையில் பிறவிக் குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள். இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான். பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது. நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்" (யோவான் 9:1-5). இயேசு அந்தப் பார்வையற்ற மனுஷனை சொஸ்தமாக்குவதற்குச் சற்று முன்பு, மனுக்குலத்தின் இக்கால பாடுகளுக்கான விளக்கங்களைத் தேடுபவர்களுக்குச் சிறந்த ஒரு பதிலை சீஷர்களுக்கு அளித்தார். "அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்" (யோவான் 9:3).

(இந்தக் கட்டுரையைப்போல ஆழமான அர்த்தங்களைப் பழைய ஏற்பாட்டின் புத்தகங்களில் ஆராய்வது எப்போதும் நம்முடைய கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது. இந்த அண்டசராசரத்தின் மிகச் சிறந்த மனதையுடையவர் வேதாகமத்தில் பல ஆழமான காரியங்களை அமைத்து வைத்திருக்கிறார். "காரியத்தை மறைப்பது தேவனுக்கு மகிமை, காரியத்தை ஆராய்வதோ இராஜாக்களுக்கு மேன்மை" இந்தக்காரியங்களைத் தேடிச்செல்லும்போது, கண்டிப்பாக பல விளக்கவுரைகளை நாம் காணலாம். எசேக்கியேல் 18-ஆம் அதிகாரத்தில் மனுக்குலம் நான்கு வகுப்புகளாகப் பிரிக்கப்படுவதை அனைத்து பதிப்பாசிரியர்களும் அறிவுறுத்துவதில்லை.

அதிபதிகள், ஆசாரியர்கள் மற்றும் லேவியர்கள்

# எசேக்கியேல் 44



David Stein

"அப்பொழுது கர்த்தர் என்னைநோக்கி: மனுபுத்திரனே, கர்த்தருடைய ஆலயத்தின் சகல நியமங்களையும் அதின் சகல சட்டங்களையுங்குறித்து நான் உன்னோடே சொல்வதையெல்லாம் நீ உன் மனதிலே கவனித்து, உன் கண்களினாலே பார்த்து, உன் காதுகளினாலே கேட்டு, பரிசுத்தஸ்தலத்தினுடைய எல்லா வாசற்படிகளின் வழியாய் ஆலயத்துக்குள் பிரவேசிப்பதும் அதிலிருந்து புறப்படுவதும் இன்னவிதமென்று நீ ஆலோசித்துப் பார்த்து" (எசேக்கியேல் 44:5).

தீர்க்கதரிசியாகிய எசேக்கியேலுக்குக் காண்பித்த ஆலயத்தைப்பற்றிய தரிசனத்தின் ஒரு பகுதி, எசேக்கியேல் 44-ஆம் அதிகாரமாகும். மகிமையடைந்த மேசியாவின் கீழ், ஆயிரவருட ஆட்சி எவ்வாறு செயல்படும் என்பதை, 40-ஆம் அதிகாரம் துவங்கி புத்தகத்தின் முடிவுவரை கொடுக்கப்பட்டுள்ள பல விவரங்கள் சித்தரிக்கிறது.

பலிபீடம் பரிசுத்தமாக்கப்பட்டு இப்போது ஜனங்கள் தகனபலி செலுத்தவும், சமாதான பலிகளைச் செலுத்தவும் பலிபீடம் ஆயத்தமாகி விட்டது என்ற அறிவிப்போடு அதற்கு முந்தய அதிகாரம் நிறைவடைகிறது. கிறிஸ்து மற்றும் சபையின் பலி முழுமையடைந்து இந்த உலகம் ஒப்புரவாக்கப்படுவதற்கு ஆயத்தமாவதை இக்காரியம் அடையாளப்படுத்துகிறது. இந்த அற்புதமான காட்சியைக் காண்பதற்கு எசேக்கியேலை அழைத்து வந்த தூதன் இப்போது வெளிப்படுத்தலின் அடுத்த நிலையைக் காண்பிப்பதற்கு அழைத்துச் செல்லுகிறார்.

44-ஆம் அதிகாரத்தை நான்கு பகுதிகளாக நாம் பிரிக்கலாம்:

- பகுதி 1 - வசனங்கள் 1-3
- பகுதி 2 - வசனங்கள் 4-9
- பகுதி 3 - வசனங்கள் 10-14
- பகுதி 4 - வசனங்கள் 15-30

**பகுதி - 1**

**வசனம் 1 -** "பின்பு, அவர் என்னைக் கிழக்குக்கு எதிரே பரிசுத்த ஸ்தலத்துக்குப் புறவாசல் வழியே திரும்பப்பண்ணினார்; அது பூட்டப்பட்டிருந்தது." (எசேக்கியேல் 44:1). சுவிசேஷ யுக பலிகள் நிறைவடைந்தது மற்றும் பரம அழைப்பும் நிறைவடைந்தது. அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையில் மரணபரியந்தம் இயேசுவைப் பின்பற்றுவதற்கு, கிழக்கு வாசல் வழியாகவே அழைப்படுகிறார்கள். இந்த வாசல் அடைப்பட்டது. இது அழைப்பு நிறைவடைந்ததை அடையாளப்படுத்துகிறது. வெற்றியடைந்த பரலோக பரிசாகிய ஆசாரியத்துவத்தையும், இராஜரீகத்தையும் பெற்றுக்கொள்ளும்படி சபை கிழக்கு வாசல் வழியாகப் பிரவேசித்தார்கள்.

"[எசேக்கியேல்] முதலில் ஆலயத்தைப் பார்த்தார். அதற்குப்பின் ஆண்டவருடைய மகிமை ஆலயத்தின் கிழக்கு வாசல் வழியாகப் பிரவேசித்ததையும், ஆண்டவருக்குப் பின்னாக கதவு அடைப்பட்டதையும் அவர் கண்டார். பத்து கன்னிகைகளின் உவமையில் நம்முடைய ஆண்டவர் சித்தரிப்பதுபோல, யுகத்தின் முடிவில் கதவு அடைப்படுவதை இது அடையாளப்படுத்துகிறது. கதவு அடைப்படும், ஆண்டவருடைய மகிமை ஆலயத்திற்குள் பிரவேசிக்கும்... கதவுகள் அடைப்படும்போது வாசற்படியிலிருந்து தண்ணீர் புறப்பட்டு வருகிறதைக் கண்டார்கள். ஆண்டவருடைய மகிமை ஆலயத்தில் பிரவேசியாமல் இருக்கும் வரைக்கும், சபை மகிமை அடையாமல் இருக்கும் வரைக்கும், கதவு அடைப்படாத வரைக்கும், ஜீவதண்ணீர் புறப்படாது என்று இங்குத் தெளிவானப் பாடம் கொடுக்கப்பட்டுள்ளது" (R3623).

கிழக்கு வாசல் வழியாகப் புறப்பட்டு வருகிற ஜீவதண்ணீரை சகோதரர் ரஸல் கண்டபோது, சபை கிழக்கு வாசல் வழியாகப் பிரவேசித்தவுடன், எசேக்கியேல் 47-ஆம் அதிகாரத்தில் சித்தரித்ததுப்போல, இந்த உலகத்தின் ஒப்புவரவாக்குவதற்குத் தேவைப்படும் மீட்புக்குரிய ஆசீர்வாதத்தை ஆவிக்குரிய இராஜ்யம் கொடுக்கும் என்பதை அவர் உறுதிப்படுத்தினார்.

**வசனம் 2 -** "அப்பொழுது கர்த்தர் என்னைநோக்கி: இந்த வாசல் திறக்கப்படாமல் பூட்டப்பட்டிருக்கும்; ஒருவரும் இதற்குள் பிரவேசிப்பதில்லை; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இதற்குள் பிரவேசித்தார், ஆகையால் இது பூட்டப்பட்டிருக்கவேண்டும்." அடைப்படும் பரம அழைப்புக்குரிய வாசல் இனி ஒருகாலமும் திறக்கப்படாது என்று தேவன் தாமே இங்குப் பிரகடனம் செய்கிறார். பந்தயப் பொருளை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் அனைவருக்கும் இது தெளிவாக விளங்கும். யுகத்திற்கானாலும் சரி, தனிப்பட்ட நபருக்கானாலும் சரி, காலம் இப்போது

வரையறுக்கப்பட்டுள்ளது. ஆகவே, நம்முடைய காலத்தை ஞானமாகப் பயன்படுத்துவதற்கு நம்மை நாம் ஆராய்ந்து பார்த்துக்கொள்வோம்.

**வசனம் 3 -** "இது அதிபதிக்கே உரியது, அதிபதி கர்த்தருடைய சந்நிதியில் போஜனம்பண்ணும்படி இதில் உட்காருவான்; அவன் வாசல் மண்டபத்தின் வழியாய்ப் பிரவேசித்து, மறுபடியும் அதின்வழியாய்ப் புறப்படுவான்."

யார் அந்த "அதிபதி?" இயேசு ஈடுபலி கொடுப்பதற்கு முன் தேவனை சேவித்த பழைய ஏற்பாட்டு விசுவாசமுள்ள நீதிமான்கள், காணக்கூடாத ஆவிக்குரிய இராஜ்யத்தின் காணக்கூடிய பிரதிநிதிகளாக இந்தப் பூமியில் ஆட்சிபுரிவார்கள். இயேசுவின் ஊழியம் வரைக்கும், "இடுக்கமான வழி" திறக்கப்படாததினால், இவர்கள் அதற்குள் பிரவேசிக்க முடியாமற்போனது. இவர்கள் எவ்விதமான பரிசுக்கு நம்பிக்கையுள்ளவர்களாக இருந்தார்கள்? மரணபரியந்தம் விசுவாசமுள்ளவர்களாக இருந்ததினால், பரிபூரண மனுஷர்களாக இந்தப் பூமியல் உயிர்த்தெழுவார்கள். ஆனால் மீதியுள்ள மனுக்குலம், "பரிசுத்தமான பெரும்பாதையான வழியில்" நடக்கும்போது, படிப்படியாகப் பரிபூரணத்தை அடைவார்கள். ஆனால் பழைய ஏற்பாட்டு நீதிமான்கள், "மேலான உயிர்த்தெழுதலைப்" பெறுவார்கள் (எபிரெயர் 11:35).

எசேக்கியேல் புஸ்தகத்தில் "அதிபதி" என்ற பதவி 45-ஆம் சங்கீதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள பிரதிபலிப்பாகக் காணப்படுகிறது. 1 முதல் 9 வசனங்களில் இயேசுவைப்பற்றியும், 10-15 வசனங்களில் சபையைப் பற்றியும் குறிப்பிட்ட பின் 16-ஆம் வசனத்தில், "உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் **பிரபுக்களாகவைப்பீர்**" (அதிபதிகள்) என்று கூறப்படுகிறது.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் பழைய ஏற்பாட்டு நீதிமான்கள் அனைவரும், "பிதாக்களாக" இருந்தார்கள். மீதியுள்ள மனுக்குலத்தோடு இந்தப் "பிதாக்களுக்கும்" இரட்சிப்பு தேவைப்படுகிறது. இவர்கள் இராஜ்யத்தில் முதலில் உயிர்த்தெழக்கூடிய, "இராஜ்யத்தின் புத்திரராக" இருப்பார்கள். இவர்கள் பரலோக இராஜ்யத்தின் இராஜாக்களில் காணக்கூடிய இராஜரீகமான பிரதிநிதிகளான "பிரபுக்களாக " இருப்பார்கள். ("கர்த்தராகிய நான் அவர்களுக்குத் தேவனாக இருப்பேன், என் தாசனாகிய தாவீது அவர்கள் நடுவில் அதிபதியாயிருப்பார்; கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன்." இங்கு தாவீதும் ஒரு அதிபதியாக குறிப்பிடப்படுகிறார். நிச்சயமாக அவரும் ஒரு முற்பிதா ). (எசேக்கியேல் 34:24; 37:25).

இந்த "மண்டபம்" "வாசலுக்கு" மிக அருகாமையில் உள்ளது. பரிசுத்த ஸ்தலத்திற்குள் பழைய ஏற்பாட்டின் முற்பிதாக்களுக்கும் ஆட்சி செய்யும் "கிறிஸ்துவுக்கும்" இடையிலுள்ள நெருங்கிய தொடர்பை இது காட்டுகிறது. "மண்டபத்தில்" அதிபதி அமர்ந்து, "அப்பத்தைப்" புசிப்பார். "அதற்கு இயேசு: நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு என்றார்." பூமிக்குரிய இராஜ்யத்தில், இந்த ஆசீர்வதிக்கப்பட்ட வகுப்பார் தேவனுடைய சித்தத்தைச் செய்வதை இச்சம்பவம் உருவகமாகக் காட்டுகிறது.

## பகுதி - 2

**வசனம் 4 -** "பின்பு அவர் என்னை வடக்கு வாசல்வழியாய் ஆலயத்தின் முகப்பிலே அழைத்துக்கொண்டுபோனார்; இதோ, கர்த்தருடைய ஆலயம் கர்த்தருடைய மகிமையால் நிறைந்ததை நான் கண்டு, முகங்குப்புற விழுந்தேன்." வடதிசை, யேகோவா தேவனுடைய இராஜரீகமான வல்லமையுள்ள இருப்பிடத்தைக் குறிப்பிடுகிறது. லூசிபரின் புரட்சியைக்குறித்து விவரிக்கும்போது இதே கருத்து குறிப்பிடப்படுகிறது. "நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; **வடபுறங்களிலுள்ள** ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே" (ஏசாயா 14:13-14). இது அடையாளமான மொழியில் பேசப்பட்டாலும் வடதிசை தேவனுடைய சிங்காசனத்தைக் குறிப்பிடப்படுவது தெளிவாகிறது. ("வெற்றிடத்தில் வடபுறத்தை அவர் விரித்தார்; காற்றிடையே உலகைத் தொங்கவிட்டார்" - திருவிவிலியம் யோபு 26:7).

தரிசனத்தில் எசேக்கியேல் வடதிசையிலுள்ள வாசலுக்கும் அழைத்து வரப்பட்டார். அங்கு ஆலயத்தை தேவனுடைய மகிமை நிரம்பிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். அந்தத் தரிசனத்தால் அவர் வெற்றியடைந்ததினால் அவர் முகங்குப்புற விழுந்தார். தேவனுடைய நியாயத்தீர்ப்பையோ அல்லது தேவனுடைய மகிமையையோ காணக்கூடிய நீதியுள்ளவர்களின் பொதுவான செயல்கள் இப்படியாகவே இருக்கும். தேவனோடு ஆபிரகாம் பேசுகையில் இப்படியாகவே அவர் செயல்பட்டார் (ஆதியாகமம் 17:3). தேவனுக்கு எதிராக கலகம்

செய்ததைக் கண்ட மோசேயும் இப்படியாகவே நடந்துகொண்டார் (எண்ணாகமம் 16:4). யேகோவா தேவனுடைய தூதனிடம் பேசிக்கொண்டிருப்பதை உணர்ந்த யோசுவாவும் இப்படியாகச் செயல்பட்டார் (யோசுவா 5:14).

**வசனம் 5** - "அப்பொழுது கர்த்தர் என்னைநோக்கி: மனுபுத்திரனே, கர்த்தருடைய ஆலயத்தின் சகல நியமங்களையும் அதின் சகல சட்டங்களையுங்குறித்து நான் உன்னோடே சொல்வதையெல்லாம் நீ உன் மனதிலே கவனித்து, உன் கண்களினாலே பார்த்து, உன் காதுகளினாலே கேட்டு, பரிசுத்தஸ்தலத்தினுடைய எல்லா வாசற்படிகளின் வழியாய் ஆலயத்துக்குள் பிரவேசிப்பதும் அதிலிருந்து புறப்படுவதும் இன்னவிதமென்று நீ ஆலோசித்துப் பார்." ஆலயத்தைப்பற்றி ஒரு பிரமிக்கத்தக்க தரிசனத்தை எசேக்கியேல் கண்டார். இந்தத் தரிசனம் பரலோக இராஜ்யத்தில் பல விவரங்களை அடையாளமாகச் சித்தரிப்பதினால், அந்த ஆலயத்தின் நுழைவாயில்கள் மற்றும் வெளியேற்றப்படும் வழிகளைக் குறித்த ஒழுங்குகளைப்பற்றி அதிகக் கவனம் செலுத்தும்படிக்குச் சொல்லப்பட்டது. ஆசரிப்புக்கூடாரத்தின் தரிசனத்தை மோசே கண்டபோதும், இப்படிப்பட்ட ஒரு கட்டளையை அவரும் பெற்றார் என்ற காரியம் நம்முடைய நினைவுக்கு வருகிறது. "மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு" (யாத்திராகமம் 25:40).

தெய்வீக திட்டத்தின் விவரங்களை மிக ஜாக்கிரதையோடும், கவனத்தோடும் பார்க்க வேண்டுமென்று புது சிருஷ்டிகளுக்கு ஒரு பாடத்தை இக்காரியம் கற்பிக்கிறது. "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2 தீமோத்தேயு 2:15) என்று தெளிவாக நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

**வசனம் 6** - "இஸ்ரவேல் வம்சத்தாராகிய கலகக்காரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் செய்த சகல அருவருப்புகளும் போதும்."

முழு இஸ்ரயேல் தேசமும் கலகக்காரர்களாக இருந்தபோதிலும், குறிப்பாக ஆசாரியத்துவம் அடிப்படையான மத பொறுப்புகளைப் பெற்றிருந்ததினால் அவர்கள் குற்றஞ்சாட்டத்தக்கவர்களாக இருந்தனர். எசேக்கியேலின் காலத்தில், நேபுகாத்நேச்சார் பட்டணத்தை அழிப்பதற்கு சற்றுமுன், அரசியல் ஆளுநர்களோடு ஆசாரியத்துவமும் கெடுக்கப்பட்டது. யேகோவா தேவனை தூய்மையாக தொழுதுகொள்வதற்கு இவர்கள் ஜனங்களை சரியானப் பாதையில் நடத்தாமல், பரிசுத்தமான பொறுப்புகளைத் தட்டிக்கழித்தார்கள். தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கான நேரம் வந்தது. சுவிசேஷ யுகத்திலுள்ள நிஜமான ஆசாரியத்துவத்திற்கும் இது உண்மையாகப் பொருந்தும். சுவிசேஷ யுக சபையின் ஒரு பகுதியும் ஓரளவுக்கு அவிசுவாசமுள்ளவர்களாக இருக்கிறார்கள். இந்தத் தீர்க்கதரிசனம், இக்காரியத்தையும், அதன் விளைவுகளையும் விவரமாகச் சொல்லுகிறது.

**வசனம் 7** - "நீங்கள் எனக்குச் செலுத்தவேண்டிய ஆகாரமாகிய நிணத்தையும் இரத்தத்தையும் செலுத்துகையில், என் ஆலயத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கும்படி விருத்தசேதனமில்லாத இருதயமும் விருத்தசேதனமில்லாத மாம்சமுமுள்ள அந்நிய புத்திரரை என் பரிசுத்த ஸ்தலத்துக்குள் இருக்கிறதற்காக அழைத்துக்கொண்டுவந்தீர்கள்; நீங்கள் செய்த எல்லா அருவருப்புகளினாலும் அவர்கள் என் உடன்படிக்கையை மீறினார்கள்."

பரிதாபமாகத் துவங்கப்பட்ட இந்த வளர்ச்சியை முதலாம் நூற்றாண்டு சபையும் கண்டது. அப்போஸ்தலனாகிய பவுல் முன்னறிந்தவராக எபேசு சபையின் மூப்பர்களை எச்சரித்தார். "ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்" (அப்போஸ்தலர் 20: 28-30).

பவுல் இதைக்குறித்து மீண்டுமாக தெசலோனிக்கேயருக்கு எழுதினார். "எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது. அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவனென்ன

ப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான். நான் உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா? அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு, இப்பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே. அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது; ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது" (2 தெசலோனிக்கேயர் 2:3-7).

அப்போஸ்தலர்கள் மரித்துப்போன பின்பு உறுதியற்ற சத்தியம் வந்தது. சபையின் மூப்பர்கள், சத்தியத்தின் உபதேசங்களில் மிக உறுதியோடு நின்று எந்த கோட்பாடுகளுக்கும் விட்டுக்கொடுக்காமல் இருந்தால் வெளியேயிருந்து எந்தவொரு தீமையான பாதிப்புகளும் உள்ளே பிரவேசிக்க முடியாது. ஆனால் பலவீனமான மூப்பர்கள் பொறுப்பேற்றபோது, இந்த உலகத்தின் கறைபிடித்த துன்மார்க்கமானப் பாதிப்புகள் சபைக்குள் ஊர்ந்தது. காலபோக்கில், உடன்படிக்கையற்ற "ஓநாய்கள்" வல்லமைகளைப் பெற்றுக்கொண்டனர். இவர்களே சுவிசேஷ யுகத்தில் பரிசுத்த ஸ்தலத்திற்கு வந்த "அந்நியர்"ஆவர்.

**வசனம் 8 -** "நீங்கள் என் பரிசுத்த வஸ்துக்களின் காவலைக் காவாமல், உங்களுக்கு இஷ்டமானவர்களை என் பரிசுத்த ஸ்தலத்திலே என் காவலைக் காக்கிறதற்காக வைத்தீர்கள்." சுவிசேஷ யுக ஆசாரியத்துவத்தின், பரிசுத்தமான சில அங்கத்தினருடைய பாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பரிதாபமான குற்றச்சாட்டு. தேவனுடைய மந்தையைக் "காத்துக்"கொள்ளும் பரிசுத்தமான பொறுப்பை புறக்கணித்தவர்கள் இவர்கள்.

**வசனம் 9** - "கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேல் புத்திரரின் நடுவில் இருக்கிற சகல அந்நிய புத்திரரிலும், விருத்தசேதனமில்லாத இருதயமும் விருத்தசேதனமில்லாத மாம்சமுமுள்ள அந்நிய புத்திரன் ஒருவனும் என் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிப்பதில்லை." அர்பணிக்கப்பட்ட ஆசாரியத்துவத்திற்கும், இஸ்ரயேல் அல்லது அந்நியர்களுக்குமுள்ள வேறுப்பாட்டை யேகோவா தேவன் இங்கு நிழலாகக் காட்டுகிறார். நிஜத்திலும் இந்த வேறுபாட்டைக் காணலாம். ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு தங்களை அர்ப்பணித்து, இயேசுவைப் பின்பற்றக்கூடியவர்கள், தங்களுடைய எஜமானனுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பார்கள். சுவிசேஷ யுகத்தில் அர்ப்பணிக்காத தூய ஆவியைப் பெறாத, தவறான களைகள் அதில் பிரவேசிப்பதில்லை.

இயேசு, மத்தேயு சுவிசேஷத்தில் இந்த வகுப்பாரைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே!உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" (மத்தேயு 7:21-23). இந்த "அந்நிய" வகுப்பார், பரலோகத்திலுள்ள பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதில்லை. இவர்கள் தவறான கிறிஸ்தவர்கள் என்று கண்டறியப்பட்டு புறக்கணிக்கப்படுவார்கள்.

**பகுதி 3**

**வசனம் 10** - "இஸ்ரவேல் வழிதப்பிப்போகையில், என்னைவிட்டுத் தூரமானவர்களும், என்னைவிட்டு வழிதப்பித் தங்கள் நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றினவர்களுமாகிய லேவியரும் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள்." நாம் இப்போது "லேவி" வகுப்பினருடைய பாவங்களைக்குறித்து மையப்படுத்துகிறோம். நிழலில், லேவியர்கள் ஆசாரியர்களாக இருக்கவில்லை. ஆனால் அவர்கள் ஆசாரியர்களுக்கு ஊழியக்காரர்களாக இருந்தார்கள். நிஜத்தில் இதுவும் உண்மையே. ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட அனைவரும், "முற்றும் ஜெயங்கொண்டவர்கள்" வகுப்பாராக மாறுவதற்கு முழு வாய்ப்புக் கொடுக்கப்படுவதே இதில் இங்குக் காணப்படும் வேறுபாடாகும். ஆயினும், நிஜமான லேவியர்கள் தங்களுடைய உடன்படிக்கையின் பொருத்தனையை நிறைவேற்றாமல், பரலோகப் பிதாவின் சித்தத்தைச் செய்யாத ("திரள் கூட்டத்தாரை")அடையாளப்படுத்துகிறார்கள்.

கிறிஸ்தவ பொறுப்புகளை, முழுமையாகப் புறக்கணித்ததின் நிமித்தமாக குற்றமுள்ள திரள் கூட்டத்தாரின் ஒரு பகுதியைக்குறித்த சில

சித்திரங்களை இதில் காணலாம். இவர்களின் பாவம் விக்கிரக ஆராதனையே. தேவனை ஆராதிப்பதற் குப்பதிலாக, வேறெந்தக் காரியத்தை வைத்தாலும் அது விக்கிரக ஆராதனையாகும். இஸ்ரயேல் சோரம்போன காரியத்திற்கு இக்காரியம் ஒப்பிடப்படுகிறது. நிழலான இஸ்ரயேல் பல வழிகளை அருவருக்கத்தக்க நெறிதவறி போனதைக்குறித்து நாம் முன்னதாகவே பார்த்தோம். அதுபோல, சுவிசேஷ யுக சபையாகிய நிஜமான இஸ்ரயேலரும், தவறுகளுக்குள்ளும் நெறிதவறிப்போனதை திரள் கூட்டத்தார் சத்தியத்திலிருந்து விலகிப்போவதற்குப் பரிசுத்தமானவைகளைப் பரிசுத்தமாகக் காத்துக்கொள்ளாததே காரணமாகத் தோன்றுகிறது. "அவர்கள் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள்."

இப்படியாக, பயன்படுத்தப்பட்ட இந்த வார்த்தைகள் நமக்கு ஆர்வமூட்டுகிறது.லேவியரின் புத்தகத்தில் இதைப் பல நிலைகளில் காணலாம். எடுத்துக்காட்டாக, லேவியராகமம் 16-ஆம் அதிகாரத்தில், ஒப்புரவாக்கும் நாளின் கட்டளைகளில், பொதுவாக இஸ்ரயேலரின் பாவங்கள் தலையில் சுமத்தப்பட்ட போக்காடு திரள்கூட்டத்தாரை, அடையாளப்படுத்துகிறதை அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்கள். "அவன் இப்படிப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் ஆசரிப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் பிராயச்சித்தஞ்செய்து தீர்ந்தபின்பு, உயிரோடிருக்கிற வெள்ளாட்டுக்கடாவைச் சேரப்பண்ணி, அதின் தலையின்மேல் ஆரோன் தன் இரண்டு கைகளையும் வைத்து, அதின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லாப் பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு, அவைகளை வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேல் சுமத்தி, அதை அதற்கான ஆள்வசமாய் வனாந்தரத்துக்கு அனுப்பிவிடக்கடவன். அந்த வெள்ளாட்டுக்கடா அவர்களுடைய அக்கிரமங்களையெல்லாம் தன்மேல் சுமந்துகொண்டு, குடியில்லாத தேசத்துக்குப் போவதாக; அவன் அந்த வெள்ளாட்டுக்கடாவை வனாந்தரத்திலே போகவிடக்கடவன்" (20-22).

நம்முடைய எசேக்கியேலின் பாடத்தில் உறுதியான இணைகள் இங்குக் காணப்படுகிறது. பலிகள் முழுமைப்பெற்று, ஜனங்களின் காணிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பலிபீடம் ஆயத்தமானதை எசேக்கியேல் 43-ஆம் அதிகாரத்தில் நாம் பார்த்தோம். உயிருள்ள ஆட்டை அவர்கள் வெட்டுவதற்கு முன்பாகவே, பரிசுத்த ஸ்தலம் மற்றும் ஆசரிப்பு கூடாரத்தின் ஒப்புரவாகுதலின் பலிகள் முடிந்துவிட்டதை 20-ஆம் வசனம் குறிப்பிடுகிறது. "அவர்கள் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள்" என்று லேவியர்களைக் குறித்து சொல்லப்படுகிறது. "அவர்கள் தங்களுடைய எல்லா அக்கிரமங்களையும் சுமப்பார்கள்" என்று உயிருள்ள ஆட்டைப்பற்றி சொல்லப்படுகிறது. குறிப்பாக, "ஆரோன் ஆசரிப்புக் கூடாரத்துக்குள் வந்து, தான் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கும்போது, உடுத்தியிருந்த சணல்நூல் வஸ்திரங்களைக் களைந்து, அங்கே வைத்துவிட்டு," (லேவியராகமம் 18:23) என்று கூறப்படுகிறது.

**வசனம் 11** - "ஆகிலும் அவர்கள் என் ஆலயத்தின் வாசல்களைக் காத்து, என் ஆலயத்தில் ஊழியஞ்செய்து, என் பரிசுத்த ஸ்தலத்திலே பணிவிடைக்காரராயிருப்பார்கள்; அவர்கள் ஜனங்களுக்காகத் தகனபலிகளையும் மற்றப் பலிகளையும் செலுத்தி, இவர்களுக்கு ஊழியஞ்செய்கிறதற்கு இவர்கள் முன்பாக என் பரிசுத்த ஸ்தலத்திலே பணிவிடைக்காரராயிருப்பார்கள்."

இந்த வசனம் எதிர்பாராத சிந்தனைகளை நமக்குத் தருகிறது. சபையைத் தவறானப் பாதையில் வழிநடத்தின பொறுப்பில் பங்கெடுத்த தினாலும், விக்கிரக ஆராதனையினிமித் தமும் பாரமான தண்டனையை நாம் எதிர்பார்த்து இருந்திருக்கலாம். ஆனால் அதற்குப்பதிலாக தேவனுடைய இராஜ்யத்தில் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் உதவியாளர்களாக இந்த வகுப்பாருக் குப் பொறுப்புகள் கொடுக்கப்படுகிறது. அவர்களு டைய பாரமான தீர்ப்பு தள்ளுபடி செய்யப்படாது. தேவனுடைய அதிருப்தியை யும், நியாயத்தீர்ப்பையும் குறித்து அடுத்த வசனம் நமக்கு நினைப்பூட்டுகிறது.

**வசனம்** 12 - "அவர்கள் இவர்களுடைய நரகலான விக்கிரகங்களுக்கு முன்பாக நின்று இவர்களுக்கு ஊழியஞ்செய்து, இஸ்ரவேல் வம்சத்தாரை அக்கிரமத்தில் விழப்பண்ணின படியினால், நான் என் கையை அவர்களுக்கு விரோதமாய் உயர்த்தினேன், அவர்கள் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்." தேவனுடைய கரம் அவர்களுக்கு எதிராக இருந்தது!

நிழலான லேவியர்கள் எவ்வாறு தங்களுடைய துர்குணத்தை சுமப்பார்கள் என்று எசேக்கியேல் தெளிவாக விவரிக்கவில்லை. ஆயினும், இவர்களின் வேலையைக்குறித்து மற்றொரு வசனத்தில் இந்தக் கண்ணோட்டத்தைக் காணலாம். "ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை

ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்" (வெளிப்படுத்தல் 7:14-15) என்று கூறுகிறது.

இப்படியாக, திரள் கூட்டத்தார் தங்களைச் சுத்திகரிப்பதற்கு மிகுந்த உபத்திரவத்தின் வழியாகச் செல்ல வேண்டியதாக இருக்கிறது. ஆண்டவரின் ஒழுங்கின்படி அவர்கள் தூய்மைப்பட்டபின், "தேவனுடைய ஆலயத்தில் இரவும் பகலும் அவரைச் சேவிப்பார்கள்." அல்லது, எசேக்கியேல் எழுதுகிறபடி - "என்னுடைய பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியக்காரர்களாக இருப்பார்கள்."

**வசனம்** 13 - "அவர்கள் எனக்கு ஆசாரியராய் ஆராதனை செய்யும்படி என் சமீபத்தில் வராமலும், மகா பரிசுத்தமான ஸ்தலத்தில் என் பரிசுத்த வஸ்துக்களில் யாதொன்றையும் கிட்டாமலும் இருக்கவேண்டும், அவர்கள் தங்கள் இலச்சையையும் தாங்கள் செய்த அருவருப்புகளையும் சுமக்கக்கடவர்கள்." இங்குப் பெரிதான நியாயத்தீர்ப்பு நடக்கிறது. திரள் கூட்டத்தார் தங்களூடைய கிரீடத்தைத் தொலைத்துவிட்டார்கள். எவ்வளவு பெரிய பயங்கரம்! எவ்வளவு பெரிய நஷ்டம்! ஆசாரியரின் பொறுப்பிலிருந்து நித்தியத்திற்கும் இவர்கள் தள்ளப்பட்டார்கள். தேவனுடைய கரத்திலிருந்துப் பெற்றுக்கொள்ள வேண்டிய அற்புதமான விலையேறப்பெற்ற பரிசை, இனி ஒருபோதும் பெற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு அவமானத்திற்குரிய ஒரு நஷ்டம் அடைந்தார்கள்.

**வசனம்** 14 - "ஆலயத்தின் சகல வேலைகளுக்கும் அதில் செய்யப்படவேண்டிய எல்லாவற்றிற்கும் நான் அவர்களை அதில் காவல்காக்கிறவர்களாயிருக்கக் கட்டளையிடுவேன்." ஆனாலும் நிஜமான லேவியர்களாகிய திரள் கூட்டத்தார் மீட்கப்படுவார்கள். அவர்களின் ஆவிக்குரிய வேலைகள் அல்லாத கிரியைகள் முற்றிலுமாக எரிக்கப்பட்டாலும், அக்கினியின் வழியாக அவர்கள் மீட்கப்படுவார்கள் (1கொரிந்தியர் 3:15). சபை மனுக்குலத்தைச் சீர்படுத்துவதற்கு உதவி செய்யும்படியான கிருபை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. எவ்வளவு தாராளமான மனதுடைய தேவன்!

**பகுதி** 4

**வசனம்** 15 "இஸ்ரவேல் புத்திரரே, என்னைவிட்டு வழிதப்பிப்போகையில், என் பரிசுத்த ஸ்தலத்தின் காவலைக் காக்கிற சாதோக்கின் புத்திரராகிய லேவியரென்னும் ஆசாரியர்களே எனக்கு ஆராதனைசெய்ய என் சமீபத்தில்சேர்ந்து, நிணத்தையும் இரத்தத்தையும் எனக்குச் செலுத்த என் சந்நிதியில் நிற்பார்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்."

சுவிசேஷ யுகத்தில் வளர்ச்சியடையக்கூடிய நிஜமான ஆசாரியர்களாகிய விசுவாசமுள்ள லேவியரைக்குறித்து நாம் இப்போது பார்க்கலாம். இவர்கள், "சாதோக்கின் குமாரர்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். "சாதோக்கு" என்பதற்கு நீதி அல்லது நியாயம் என்று பொருள். ஜெயம் பெற்ற விசுவாசமுள்ளவர்களை அடையாளப்படுத்துவதற்கு, சாதோக்கு என்ற பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்காரியம் நம்மை தாவீது மற்றும் சாலொமோனின் ஆட்சிக்குத் திரும்பக் கொண்டு வருகிறது.

தாவீது இராஜா உடன்படிக்கைப் பெட்டியை எருசலேமுக்குள் கொண்டுவருகையில் அங்கு சாதோக்கு இருந்தார் (1 நாளாகமம் 15:11, 14). தாவீதுக்கு எதிராக தன்னுடைய குமாரன் அப்சலோம் புரட்சி பண்ணும்போது, சாதோக்கு தாவீதுக்கு விசாவாசமுள்ளவராக இருந்தார் (2 சாமுயேல் 15). அந்தப் புரட்சி முடிந்தபோது, எருசலேமில் தாவீதை வரவேற்பதற்குச் சாதகமான சூழ்நிலையைப் பாதுகாப்பதற்கு சாதோக்கு ஒரு கருவியாகச் செயல்பட்டார் (2 சாமுயேல் 19:11-14). இறுதியாக, சாலொமோனை இராஜாவாக அபிஷேகிப்பதற்கு தாவீது சாதோக்கை நியமித்தார் (1 இராஜாக்கள் 1). சாலொமோனின் ஆட்சி காலத்தில், சாதோக்கு பிரதான ஆசாரியனாக நியமிக்கப்பட்டார். (சாலொமோனின் ஆலயத்தில், சாதோக்கு முதல் பிரதான ஆசாரியராக இருந்தார் என்று வரலாற்று ஆசிரியர் ஜோசபஸ் எழுதுகிறார்.)

"ஆசாரியர்கள், லேவியர்கள், சாதோக்கின் குமாரர்கள்" - நிஜமான சாலொமோனாகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையான ஆட்சியில் விசுவாசமும் உண்மையுமான, ஜெயம் பெற்ற சபை என்று இவைகள் அனைத்துமே அடையாளப்படுத்துகிறார்கள் என்று பரிந்துரைக்கிறது.

அதற்கு அவர்கள், "காவலைக் காப்பார்கள்" என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், அவர்கள் பெற்றிருந்த உறுதியினால், இவர்கள் தேவனோடு நெருங்கிய ஐக்கியங்கொள்வதற்கு முழுமையாக அனுமதிக்கப்படுவார்கள். அவர்களின் பக்தி வைராக்கியமுள்ள ஊழியத்தின் விளைவாக, "கொழுப்பையும்" அவர்கள் உடன்படிக்கை செய்தபடி

மரண பரியந்தம் தங்களுடைய ஜீவனை ஒப்புகொடுத்தப்படியால் இரத்தத்தையும் பலி செலுத்துவார்கள். தங்களுடைய சிருஷ்டிகரோடு இந்த மனுக்குலத்தை ஒப்புரவாகும்படிக்கு இவர்கள் இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் பணி புரிவதற்கு இவர்கள் நன்கு தேர்ச்சிப் பெற்றவராக இருக்கிறார்கள்.

**வசனம் 16** - "இவர்கள் என் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிப்பார்கள்; இவர்களே எனக்கு ஆராதனை செய்ய என் பீடத்தைக் கிட்டிவந்து, என் காவலைக் காப்பார்கள்." மீண்டுமாக, தேவனோடு கொண்டுள்ள விலையேறப்பெற்ற ஐக்கியத்தில், விசுவாசமுள்ள பணிக்குரிய பரிசை தேவன் மறுபடியும் வலியுறுத்துகிறார். எல்லா சிருஷ்டிகளிடமும், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும்படியாக இவர்கள் விலையேறப்பெற்ற சிறப்புரிமையைப் பெற்றிருப்பார்கள்.

**வசனம் 17** - "உட்பிராகாரத்தின் வாசல்களுக்குள் பிரவேசிக்கிறபோது, சணல்நூல் வஸ்திரங்களை உடுத்திகொள்வார்களாக; அவர்கள் உட்பிராகாரத்தின் வாசல்களிலும், உள்ளேயும் ஆராதனை செய்கையில், ஆட்டுமயிர் உடுப்பைத் தரிக்கலாகாது."

பிரகாரத்தின் உள்ளே இருக்கும் வாசலுக்குள் பிரவேசிப்பது, தெய்வீக திட்டத்தில் அழியா மகிமைக்குள் வருவதற்கு ஒப்பாக இருக்கிறது. அதற்குப் பின் அவர்கள் இயேசுவின் நீதியினால் தங்களை மூடிக்கொள்ள வேண்டிய அவசியம் இராது. ஏனெனில், அதற்குப்பின் அவர்களுடைய சொந்த நீதியில் அவர்கள் நிலைநிற்பார்கள். அவர்கள் அணிந்திருக்கும் வெண் வஸ்திரம் அவர்களின் தனிப்பட்ட பரிசுத்தத்தை அடையாளப்படுத்துகிறது (வெளிப்படுத்தல் 19:8).

"ஆட்டுமயிர் உடுப்பைத் தரிக்கலாகாது." வெப்பத்தைத் தனக்குள்ளே தேக்கி வைத்துக்கொள்வதில் கம்பளி சிறப்பானது. அது வேர்வையை உண்டு பண்ணும். வேர்வையை உண்டுபண்ணக்கூடிய எந்த வஸ்திரத்தையும், அவர்கள் அணியமாட்டார்கள் என்று அடுத்த வசனத்தில் நமக்குச் சொல்லப்படுகிறது. ஒருவேளை, சபை இறுதியாக தேவனுடைய இளைப்பாறுதலில் முழுமையாகப் பிரவேசிப்பதை இது சித்தரிக்கக்கூடும்.

மகிமையடைந்த சபை இனி எந்த காரியத்திற்கும் கவலைப்பட்டு, சிரமப்பட்டு, உபத்திரவப்பட வேண்டிய அவசியமில்லை என்பதை இது பொருள்படுத்துகிறது. சபை வகுப்பார், தாங்கள் பெற்ற பாவ நிவர்த்தி செய்யும் அனுபவங்களின் வழியாக முழுமையாக தேர்ச்சிப் பெற்றதினால், அவர்களுக்காக வரும் எந்த ஒரு பிரச்சனையையும், அமைதியோடும், சாந்தத்தோடும் அன்போடும் கையாளுவார்கள்.

கம்பளியைத் தடை செய்வதில் மற்றொரு பாடமும் இருப்பதற்கு வாய்ப்புண்டு. அதாவது, மிருகங்களின் பலிகள் நிறுத்தப்பட்டதையும் இது அடையாளப்படுத்தலாம். இராஜ்யத்தின் மத்தியஸ்தற்குரிய வேலைகளில், பாவங்களை நிவர்த்தி செய்யும் வேலைகளினால் அனுபவங்கள் கொடுக்கப் படுவதனிமித்தம், எந்த மிருகங்களும், பலி பொருளாகப் பயன்படுத்தப்படக்கூடாது.

**வசனம் 18** - "அவர்களுடைய தலைகளில் சணல்நூல் குல்லாக்களையும், அவர்களுடைய இடைகளில் சணல்நூல் சல்லடங்களையும் தரிக்கவேண்டும்; வேர்வையுண்டாக்கத தக்கதொன்றையும் அரையில் கட்டலாகாது." இவர்கள் ஆசாரியர்களுக்கு உதவியாளர்கள் என்றும், இவர்களுக்கு இன்னும் இயேசு தலையாக இருக்கிறார் என்றும் அவர்களின் தலையில் காணப்படும் சணல்நூல் தலைப்பாகைக் காட்டுகிறது. சணல்நூல் நீதியை அடையாளப்படுத்துவதினால், கிறிஸ்துவே அவர்களின் தலைமை என்று அவர்கள் அறிவிக்கிறார்கள்! இறுதியாக, அவர்கள் தேவனுடைய தலைமையின் கீழ்க் காணப்படு கிறார்கள். "ஸ்திரீயானவள் தேவனை நோக்கி ஜெபம்பண்ணுகையில், தன் தலையை மூடிக்கொள்ளாமலிருக்கிறது இலட்சணமாயிருக் குமோ என்று உங்களுக்குள்ளே நிதானித்துக் கொள்ளுங்கள்." (1கொரிந்தியர் 11:13)

சணல்நூல் காற்சட்டை - ஆசாரியனுடைய வஸ்திரத்தின் ஒரு பகுதியாக உள்ளது. ஆனால் இக்காரியத்தில் இனி பலி செலுத்துவதற்காக அல்ல, மாறாக ஜனங்களிடமிருந்து அதைப் பெற்றுக்கொள்வர். இதற்கு முந்தய வசனத்தில் குறிப்பிட்டபடி, இந்த ஊழியம் "கடுமையானது" அல்ல. மாறாக, தேவனுடைய மகிமையில் இறுதியான ஓய்வில் நடத்தப்படும் ஊழியம் ஆகும்.

**வசனம் 19** - "அவர்கள் வெளிப்பிராகாரமாகிய புறமுற்றத்திலே ஜனங்களிடத்தில் போகும்போது, அவர்கள் தங்கள் ஆராதனைசெய்யும் சமயத்தில் உடுத்தியிருந்த தங்கள் வஸ்திரங்களைக்கழற்றி, அவைகளைப் பரிசுத்த அறைவீடுகளில் வைத்து, வேறே வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளக்கடவர்கள்; தங்கள் வஸ்திரங்களாலே ஜனங்களைப் பரிசுத்தப்படுத்தலாகாது."

உடை மாற்றம் காரியமானது ஒரு ஆர்வமூட்டும் நிகழ்வைக் காட்டுகிறது. இந்த ஆசாரியர்களின்

ஊழியத்தின் உடைகள் இராஜ்யத்தின் மகிமையை அடையாளப்படுத்துவதினால், உடைகளை மாற்றுவது, அவர்கள் பெற்ற ஊழியத்தின் மற்றொரு கோணத்தைக் காட்டுகிறது. இந்த ஆசாரியர்கள் ஜனங்கள் இருக்கும் பிரகாரத்திற்குச் செல்லும்போது இந்த மாற்றம் ஏற்படுகிறது. மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால், அவர்கள் ஜனங்களை சந்திக்கும்போது அவர்கள் வேறு உடைகளைத் தரித்திருந்தார்கள். மகிமையடைந்த சபை வகுப்பார், ஜனங்களோடு தொடர்புகொள்வதற்கு, அவர்கள் சரீரத்தில் வருவதற்கு வாய்ப்புண்டு என்பதை இது கூறலாம். ஆனால் இதற்கான அவசியமென்ன? கண்ணுக்குப் புலப்படும் இராஜ்யத்திலுள்ளவர்கள் பூமிக்குரிய தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு நீதிமான்களாகிய முற்பிதாக்கள் அங்கு இருப்பார்களே?

"தங்கள் வஸ்திரங்களாலே ஜனங்களைப் பரிசுத்தப்படுத்தலாகாது" என்ற இந்த வசனப் பகுதியைச் சற்று கவனியுங்கள். இந்த உடை மாற்றம் தேவனுடைய இராஜ்யத்தில், ஜனங்களைச் சுத்திகரிப்பதற்காக பயன்படுத்தப்படவில்லை என்பதைக் கூறுகிறது. இந்த உடை மாற்றம், ஜனங்களைச் சுத்திகரிக்காவிட்டால் வேறெந்த நோக்கத்திற்காக உடை மாற்றப்படுகிறது? இதற்கான பதிலுக்கு நாம் 25-ஆம் வசனத்திற்குக் கடந்து செல்லலாம்.

**வசனம் 25** - "தகப்பன், தாய், குமாரன், குமாரத்தி, சகோதரன், புருஷனுக்கு வாழ்க்கைப்படாத சகோதரி என்னும் இவர்களுடைய சவத்தினால் அவர்கள் தீட்டுப்படலாமேயல்லாமல், அவர்களில் ஒருவனும் செத்த ஒருவனிடத்தில் போய்த் தீட்டுப்படலாகாது."

மரித்தோரோடு தொடர்புகொள்ளும்போது நிழலான ஆசாரியர்கள் தங்களை அசுத்தப்படுத்திக்கொள்ளாமலிருக்க வேண்டும் (லேவியராகமம் 21-1, 21). ஆனால், இங்கு இந்தக் கட்டளை, சில விதிவிலக்கோடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நெருங்கிய குடும்பத்திற்கு இது விதிவிலக்கானது. நிஜத்தில் பரிபூரணத்தை மனுக்குலம் அடைவதற்கு முன் மரித்தோர், பெரும்பாதையான வழியில் ஜீவனைப் பெறும்படி, பரிசுத்தத்தை நோக்கிச் சென்றுக்கொண்டிருப்பார்கள்.

ஆகவே, 19 மற்றும் 25-ஆம் வசனங்களை இணைத்துப்பார்க்கும்போது, வெற்றியடையும் சபையின் அங்கத்தினர் பரலோக வாழ்க்கைக்காக விட்டுவந்த தங்களுடைய நெருங்கிய குடும்ப அங்கத்தினரோடு தொடர்பு வைத்துக் கொள்வதற்கான அனுமதி கொடுக்கப்படும் என்று நாம் கருதுகிறோம். இதில் நியாயமான காரணத்தையும், நீதியையும் காணலாம். ஏனெனில், பூமியிலுள்ள மற்ற குடும்பங்கள், தனிப்பட்ட நபர்களாக மீண்டும் கூட்டிச் சேர்க்கப்பட்டிருப்பார்கள். ஆனால் சபையின் குடும்பங்களுக்கு இடையில் மிக நெருங்கிய கூட்டிச்சேருதல் இராது. ஆகவே, பரலோக பரிசைப் பெற்றுக்கொண்டவர்கள் ஓரளவுக்கு நம்முடைய குடும்பங்களோடு கூடுவதற்கு ஒரு விசேஷித்த வாய்ப்புக் கொடுக்கப்படுவதைப்போல காணப்படுகிறது. நாம் இனி மனிதர்களாக இராதபோதிலும், தனிப்பட்ட நிலையில் அவர்களுக்காக நாம் கொண்டிருக்கும் அன்பே தவிர இதற்கான காரணம் வேறொன்றுமில்லை.

இது முற்றிலும் ஒரு தனிப்பட்ட ஒழுங்காக இருப்பதினால், தேவனுடைய இராஜ்யத்தின் ஒழுங்குகளின்படி இந்த உலகத்தைச் சுத்தகரிக்கக்கூடிய செயல்முறையில் இதற்கு எந்தவிதமான பங்கும் இல்லை.

**வசனம் 20** - "அவர்கள் தங்கள் தலைகளைச் சிரையாமலும், தங்கள் மயிரை நீளமாய் வளர்க்காமலும், தங்கள் தலைமயிரைக் கத்தரிக்கக்கடவர்கள்." தங்களுடைய பொருத்தனைகளுக்கு ஏற்ற விசுவாசத்தைக் காண்பிக்கும் பொருட்டு வயதான நசரேயர்கள் தங்களுடைய மயிரைக் கத்தரிப்பதற்கு அனுமதிக்காததுபோல, மகிமையிலுள்ள ஆசாரியர்கள் தங்களுடைய உடன்படிக்கைக்கு நித்தியமான விசுவாசத்தை வெளிப்படுத்தக்கூடியவர்களாக இருப்பார்கள். அவர்கள் தங்களுடைய தலையை சிரைத்துக்கொள்ளமாட்டார்கள் - இது தேவனுடைய சித்தத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுத்ததற்கு மற்றொரு அடையாளமாக இருக்கிறது. தங்கள் மயிரை நீளமாய் வளர்க்காமல் என்ற காரியம், தங்களுடைய ஊழியத்தில், தேவ சித்தத்தை செய்வதில் உள்ள அர்ப்பணிப்பைக் காட்டுகிறது.

**வசனம் 21** - "ஆசாரியர்களில் ஒருவனும், உட்பிராகாரத்துக்குள் பிரவேசிக்கும்போது, திராட்சரசம் குடிக்கலாகாது." நிஜமான ஆசாரியத்துவம் அவர்களின் திறன்களை எப்போதும் முழுமையாகக் கட்டுப்பாட்டில் வைத்து, தங்களுடைய பொறுப்புக்களை தெளிந்த அறிவோடு நிர்வகிப்பார்கள்.

**வசனம் 22** - "விதவையையும், தள்ளிவிடப்பட்டவளையும் அவர்கள்

விவாகம்பண்ணாமல், இஸ்ரவேல் வம்சத்தாளாகிய கன்னிகையையாகிலும் ஒரு ஆசாரியனின் மனைவியாயிருந்த விதவையையாகிலும் விவாகம் பண்ணலாம்."

பொதுவாக, ஸ்திரீகள் மற்றும் மனைவிகள் தெய்வீக வாக்குத்தத்தங்கள் அல்லது உடன் படிக்கைகளை அடையாளப்படுத்துவார்கள். கன்னிகைகள் இனி நிறைவேற வேண்டிய வாக்குத்தத்தங்கள் அல்லது உடன்படிக்கைகளை அடையாளப்படுத்துவதாகவும், விதவைகள் நிறைவேறாத உடன்படிக்கைகளையும் அல்லது வாக்குத்தத்தங்களையும் அடையாளப்படுத்துவ தாகக் கருதுகிறோம். ஆகவே இந்த இராஜரீகமான ஆசாரியத்துவம், தேவனுடைய வாக்குத்தத்தங் களை முழுமைப்படுத்தி, இந்தப் பூமிக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவார்கள்! பூமியிலுள்ள முழு குடும்பங்களையும் ஆசீர்வதித்து, அவர்களைத் தங்களுடைய சிருஷ்டிகரோடு மீண்டும் ஒப்புரவாக்கி, அவர்களை ஆசீர்வதிக்கக்கூடிய ஆபிரகாமின் உடன்படிக்கைக்குரிய சந்ததியாக இருப்பார்கள்.

**வசனம் 23** - "அவர்கள் பரிசுத்தமானதற்கும் பரிசுத்தமல்லாததற்கும், தீட்டானதற்கும் தீட்டல்லாததற்கும் இருக்கும் வித்தியாசத்தை என் ஜனத்துக்குப்போதித்து, அவர்களுக்குத் தெரியப்பண்ணக்கடவர்கள்."

மனுக்குலத்திற்கான சபையின் நோக்கத்தை வேதாகமத்திலுள்ள இந்த வசனப் பகுதி மிகத் தெளிவாக விவரிக்கிறது. இவர்கள் நீதியைக் கற்பித்து இறுதியில், மனப்பூர்வமாக விருப்பமுள்ளவர்களின் இருதயத்தில், இந்த நித்தியமான பிரமாணங்களை எழுதி, நித்திய ஜீவனைப் பெறுவதற்குப் படிப்படியான ஆயத்தத்தைச் செய்வார்கள். இந்தப் பிரமாணங்களை நாம் மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதற்கு முன், நாம் அவைகளை கற்றுக்கொள்வதே நமக்கு இதில் காணப்படும் தனிப்பட்ட பாடமாகும்,

**வசனம் 24** - "வழக்கிருந்தால் அவர்கள் நியாயந்தீர்க்க ஆயத்தமாயிருந்து, என் நியாயங்களின்படி அதைத் தீர்த்து, என்னுடைய பண்டிகைகளில் எல்லாம் என் நியாயப்பிரமாணத்தையும் என் கட்டளைகளையும் கைக்கொண்டு, என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தமாக்கக்கடவர்கள்."

மகிமையிலுள்ள சபை, பூமியில் நியாயாதிபதிகளாக இருப்பார்கள். தேவனுடைய இராஜ்யத்தின் நீதியுள்ள பிரமாணங்களை அவர்களுக்குக் கற்பித்து கட்டாயமாக செயல்படுத்துவார்கள். பழங்காலத்து இஸ்ரயேலர்கள் வருஷத்திற்கு மூன்றுமுறை பண்டிகைகளைக் கொண்டாடி தேவனைத் தொழுதுகொண்டு அவருக்குள் மகிழ்ச்சியாக இருந்தார்கள். அதுபோல, தேவனுடைய இராஜ்யத்திலும், தேசிய அளவிலான பண்டிகைகள் கொண்டாடப்பட்டு, பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களுக்காக நன்றியறிதலான காணிக்கைகளை ஏறெடுத்து, ஒருவருக்கொருவர் தேவனுடைய அன்பிலே ஏவப்படுவார்கள். அந்த இராஜ்யத்தில் கொண்டாடப்படும் ஒரு பண்டிகை தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டுள்ளது.

பின்பு, எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த எல்லா ஜாதிகளிலும் மீதியான யாவரும் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ளும்படிக்கும், கூடாரப்பண்டிகையை ஆசரிக்கும்படிக்கும், வருஷாவருஷம் வருவார்கள். அப்பொழுது பூமியின் வம்சங்களில் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ள எருசலேமுக்கு வராதவர்கள் எவர்களோ அவர்கள்மேல் மழை வருஷிப்பதில்லை (சகரியா 14:16-17).

**வசனம் 25** - "தகப்பன், தாய், குமாரன், குமாரத்தி, சகோதரன், புருஷனுக்கு வாழ்க்கைப்படாத சகோதரி என்னும் இவர்களுடைய சவத்தினால் அவர்கள் தீட்டுப்படலாமேயல்லாமல், அவர்களில் ஒருவனும் செத்த ஒருவனிடத்தில் போய்த் தீட்டுப்படலாகாது." இது 19-ஆம் வசனத்திற்கு தொடர்புடையதாக விவாதிக்கப்பட்டது.

**வசனம் 26** - "அவன் சுத்திகரிக்கப்பட்டபின்பு, அவனுக்கு ஏழுநாள் எண்ணப்படவேண்டும்." மகிமையிலுள்ள சபை எந்தவிதத்திலும் எப்போதும் சுத்திகரிக்கட வேண்டிய அவசியமில்லா திருக்கிறது. ஆகவே, மகிமையடைந்த சபை அங்கத்தினர், மனித குடும்பத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டாலும், அதன் பலன் பூரணமாக இருப்பதை இது அடையாளப்படுத்துவதைப்போல் தோன்றுகிறது. ஏனெனில், இங்கு ஏழு என்ற எண் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**வசனம் 27** - "அவன் பரிசுத்த ஸ்தலத்தில் ஆராதனை செய்யும்படி பரிசுத்த ஸ்தலம் இருக்கிற உட்பிரகாரத்துக்குள் பிரவேசிக்கிறநாளிலே, அவன் தனக்காகப் பாவநிவாரண பலியைச் செலுத்தக்கடவன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்." கிறிஸ்து மற்றும் சபையின் பாவநிவிர்த்திக்குரிய அனுபவங்கள் வழியாக அவர்களின் ஊழியங்கள் பரிபூரணமாக இருப்பதினால் பலனுள்ளதாக இருக்கும். சுவிசேஷ யுகத்தின்போது,

மாம்சத்திலுள்ள பாவத்தின் அனுபவங்களைப் பயன்படுத்தி, தங்களுடைய பாவநிவாரண பலிகளின் விவரங்களைப் புரிந்துகொண்டனர். அவர்கள் விழுந்துபோன மாம்சத்தின் விருப்பங்களைப் புரிந்துகொண்டு, தங்களுடைய எல்லாவித அனுபவங்களின் மூலமாகவும், தங்களை மிக அருமையாக ஆயத்தப்படுத்தியிருக்கிறார்கள். பூமியில் தங்களுடைய பலியின் ஜீவியங்கள், தங்களுக்குக் கற்றுக்கொடுத்த அனுபவங்களினால், இவர்களின் பணி இரக்கமும், கனிவும் நிறைந்ததாகக் காணப்படும்,

**வசனம் 28** - "அவர்களுக்குரிய சுதந்தரம் என்னவென்றால்: நானே அவர்கள் சுதந்தரம்; ஆகையால் இஸ்ரவேலில் அவர்களுக்குக் காணியாட்சியைக் கொடாதிருப்பீர்களாக; நானே அவர்கள் காணியாட்சி." தெய்வீக சுபாவத்தின் நிலையைப் பெறுவதே, சபையின் பரலோக சுதந்தரமாகும். எந்த சிருஷ்டிகளும் கொண்டிராதளவுக்கு இவர்கள் தேவனோடு நெருங்கிய ஐக்கியத்தைப் பெற்றிருப்பார்கள். இந்தப் பூமியும், அதன் சிருஷ்டிப்பும் மனுஷனுடைய சுதந்தரமாக உள்ளது. ஆனால் சிறுமந்தைக்கு தேவனே சுதந்தரமாக இருக்கிறார்.

**வசனம் 29** - "போஜனபலியையும் பாவநிவாரணபலியையும் குற்றநிவாரணபலியையும் அவர்கள் புசிப்பார்கள்; இஸ்ரவேலிலே பொருத்தனை பண்ணப்பட்டதெல்லாம் அவர்களுடையதாயிருப்பதாக." பரிசுத்தமான பெரும்பாதையில் நடக்கும் மனித குடும்பத்தின் காணிக்கைகளைச் சபை ஏற்றுக்கொள்வார்கள் (ஏசாயா 35:8). மனித குடும்பம் உண்மையில் அவர்களுடைய குழந்தைகளாக இருப்பார்கள். விடாமுயற்சியோடு, கடுமையாக உழைக்கிற பெற்றோர்களைப்போல, இவர்கள் மனித குடும்பங்களை தேவனுடைய குணத்தில் பூரணப்படும்படிக்கு, அவருடைய அறிவினால் அவர்களைப் போஷித்து தங்களுடைய முழு கவனத்தையும் பராமரிப்பையும் செலுத்துவார்கள்.

**வசனம் 30** - "சகலவித முதற்கனிகளில் எல்லாம் முந்தின பலனும், நீங்கள் காணிக்கையாய்ச் செலுத்தும் எவ்விதமான பொருள்களும் ஆசாரியர்களுடையதாயிருப்பதாக; உங்கள் வீட்டில் ஆசீர்வாதம் தங்கும்படிக்கு நீங்கள் பிசைந்தமாவில் முதற்பாகத்தையும் ஆசாரியனுக்குக் கொடுக்கக்கடவீர்கள்." மகிமையடைந்த சபை தாமே முதற்பலனானவர்கள் (ரோமர் 8:23). ஆனால் மனித இனமே பலன் தரக்கூடியது. நித்தியஜீவனைப் பெறக்கூடிய ஒவ்வொரு மனிதனும், தன்னுடைய குணலட்சணத்தின் பலனையும், கிரியைகளையும் ஆசாரியனிடத்தில் தங்களுடைய தேவனுக்காக காணிக்கையாகச் செலுத்துவார்கள். நித்திய ஆசீர்வாதங்களே இதன் பலனாக இருக்கும்.

**வசனம் 31** - "பறவைகளிலும் மிருகங்களிலும் தானாய்ச் செத்ததும் பீறுண்டதுமான ஒன்றையும் ஆசாரியர்கள் புசிக்கலாகாது." இந்தக் கடைசி வசனம், இரண்டாம் மரணத்தை அடையாளப்படுத்தக் கூடியவர்களைக்குறித்துச் சொல்லியிருக்க வேண்டும். அனைத்து மனுக்குலமும் சுயாதீனம் பெற்றிருப்பதினால், இராஜ்யத்தின் அன்பான ஈர்ப்புகளைப் புறக்கணித்து, மரிப்பதற்கு முடிவெடுத்துக்கொள்கிறார்கள். ஆகவே இப்படிப் பட்டவர்கள், "தானாய்ச் செத்ததும்" இப்படிப் பட்டவர்களுக்கு ஆசாரியர்களுடைய அங்கீகாரம் கிடைப்பதில்லை. மீதியிருக் கக்கூடியவர்கள் இறுதியான நியாயத் தீர்ப்பைப் பெற்று புறக் கணிக்கப்படுவார்கள்.

# நம்முடைய எச்சரிப்புக்காக எழுதப்பட்ட காரியங்கள்



"மனுபுத்திரனே, இந்த மனுஷர் தங்கள் நரகலான விக்கிரகங்களைத் தங்கள் இருதயத்தின்மேல் நாட்டி, தங்கள் அக்கிரமமாகிய இடறலைத் தங்கள் முகத்துக்கு எதிராக வைத்துக்கொண்டிருக்கிறார்களே; இவர்கள் என்னிடத்தில் விசாரிக்கத்தகுமா?" (எசேக்கியேல் 14:3)

Michael Colletti

இஸ்ரயேலர்கள் நெறிதவறி பாவங்கள் செய்ததினிமித்தம் கொடுக்கப்பட்ட கடிந்து கொள்ளுதலின் பாடங்களே எசேக்கியேல் புத்தகத்தில் அதிகமாகக் காணப்படுகிறது. இக்காரியங்களை இஸ்ரயேலுக்கு அறிவிப்பதற்கு எசேக்கியேலுக்கு மட்டுமல்ல, மற்றெந்த தீர்க்கதரிசிக்கும் கடினமானக் காரியமாக இருந்திருக்க வேண்டும். (சகோதரர்கள் மத்தியிலும் கூட கடிந்துகொள்ளுதலுக்கான வார்த்தைகள் சரியாகப் பெற்றுக்கொள்ளப்படுவதில்லை). ஆகவே, தேவனே இவ்வார்த்தைகளை உறுதிப்படுத்தினார். "இதோ, உன் முகத்தை அவர்கள் முகத்துக்கு எதிராகவும், உன் நெற்றியை அவர்கள் நெற்றிக்கு எதிராகவும் கெட்டியாக்கினேன். உன் நெற்றியை வச்சிரக்கல்லைப்போலாக்கினேன், கன்மலையைப்பார்க்கிலும் கெட்டியாக்கினேன்; அவர்கள் கலகமுள்ள வீட்டாரென்று நீ அவர்களுக்குப் பயப்படாமலும் அவர்கள் முகங்களுக்குக் கலங்காமலும் இரு என்றார்" (எசேக்கியேல் 3:8-9).

எசேக்கியேலின் நாட்களில், இஸ்ரயேலின் மேல்வரும் ஒவ்வொரு தண்டனையையும் மோசே முன் அறிவித்திருந்தபோதிலும் இஸ்ரயேல் நீண்ட காலமாக துணிகரமாகக் கீழ்ப்படியாமல் இருந்தனர். இங்கு ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நாம், நம்முடைய விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலிலிருந்து விழுந்துப்போகாதபடிக்கு இஸ்ரயேலின் ஆதிகால வரலாற்றில் நமக்குத் தேவையான எச்சரிப்புகளைப் பாடங்களாகக் கண்ணோக்குகிறோம்.

**மனப்பூர்வமாக வாக்களித்தல்**

புறஜாதிகளைக் காட்டிலும் இஸ்ரயேல் அதிக நன்மைப் பெற்றவர்களாக இருந்தார்கள் என்று பவுல், ரோமர் 3:1-2 வசனங்களில் குறிப்பிடுகிறார். "தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது விசேஷித்த மேன்மையாமே." தேவனுடைய ஒவ்வொரு வார்த்தைகளையும் மோசே அறிவித்தபோது, அவர்கள் கடமைக்காக அல்ல, அவர்கள் அவைகளைக் கேட்டு ஏற்றுக்கொண்டு, அது ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட வாய்ப்பு என்று கண்டு, அவைகளுக்குக் கீழ்ப்படிய ஒப்புக்கொண்டனர். "மோசே வந்து, கர்த்தருடைய வார்த்தைகள் யாவையும் நியாயங்கள் யாவையும் ஜனங்களுக்கு அறிவித்தான்; அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் ஏகசத்தமாய்: கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள்" (யாத்திராகமம் 24:3-4). இப்படியாக இஸ்ரயேல், தேவனுடைய பிரமாணங்களைக் கட்டாயமாகக் கடைபிடிப்போம் என்று மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டனர்.

சுவிசேஷ யுகத்தின் சபை அங்கத்தினரும் தேவனிடத்தில் தங்களுடைய முழு விருப்பத்தின்படியே தங்களை அவருக்கு அர்ப்பணிக்கிறார்கள். இப்போது நடக்கும் சோதனையில், நாம் அந்த பிரதிக்கினையைக் காத்துக்கொள்வோமா அல்லது பழைய ஏற்பாட்டில் அநேக இஸ்ரயேல் ஜனங்கள் விசுவாச குறைச்சலினால் விழுந்துபோனதுபோல நாமும் விழுந்துவிடுவோமா?

**கானானைத் தேடுதல்**

எண்ணாகமம் 13:1-2 - "கர்த்தர் மோசேயை நோக்கி: நான் இஸ்ரவேல் புத்திதரருக்குக் கொடுக்கும் கானான் தேசத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு; ஒவ்வொரு பிதாக்களின் கோத்திரத்திலும் ஒவ்வொரு பிரபுவாகிய புருஷனை அனுப்பவேண்டும் என்றார்." அந்தத் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி தேவன் இஸ்ரயேலரிடம் கூறினார். "பயப்படாதேயுங்கள், சோர்ந்து போகாதீர்கள்," நீங்கள் போய் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் என்று தேவன் இஸ்ரயேலர்களிடம் கூறினார்.

ஆயினும், பயம் அவர்களைக் கவ்வியது. முன்னேறிச் செல்வதற்குப்பதிலாக, அங்கிருக்கும் எதிராளிகளை மதிப்பிடுவதற்கும் அவர்கள் வேவுக்காரர்களை அனுப்புவதற்கு முடிவு செய்தார்கள். தேவைப்படும்போதெல்லாம், தேவனுடைய வல்லமையுள்ள கரம் வழிநடத்துவதை ஜனங்கள் ஒன்றுக்கு மேற்பட்டமுறை கண்டிருந்தார்கள். ஆயினும் அவர்கள் யேகோவா தேவனுடைய வார்த்தையைக்காட்டிலும் தங்களுடைய சகோதரர்களின் வார்த்தையைச் **சாதகமாக்கிக்** கொண்டார்கள்.

தேவன் அவர்களுக்குக் காரியங்களை எளிமையாக்கியிருக்கலாம். அவர்களின் பயத்தை மேற்கொண்டு அவர்களைப் பலப்படுத்துவதற்கு அவர் ஏதோ ஒரு அற்புதத்தை நடத்தியிருக்கலாம். ஆனால் தேவன் அவர்களுக்குள் **விசுவாசத்தையும், நம்பிக்கையையும்** மற்றும் **கீழ்ப்படிதலையும்** வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்று விரும்பினார். இப்படியாகவே ஆவிக்குரிய இஸ்ரயேலர்களையும் தேவன் எதிர்பார்க்கிறார். நாம் சந்திக்கக்கூடிய ஒவ்வொரு போராட்டத்தையும் அமைதிப்படுத்துவதற்குப்பதிலாக, நம்முடைய விசுவாசத்தை அவர் ஊக்குவிக்கிறார். தேவன் நம்முடைய விசுவாசத்தின் வளர்ச்சியை எதிர்பார்க்கிறார். விசுவாசத்தில் பயிற்சி பெறும்படி நாம் ஒரு போராட்டத்தைப் போராடும்போது, சகல தெய்வீக வாக்குத்தத்தங்களில் நம்பிக்கைக் கொண்டவர்களாக நம்முடைய தலைவரும் இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசுவின் உதவிகளை நாடும்போது நிச்சயமாக நாம் வெற்றியடைவோம் (2 பேதுரு 1:3-4; எபேசியர் 6:10-18; ரோமர் 8:35-39; சங்கீதம் 18:2).

பயமும், சந்தேகமும் இஸ்ரயேல் தேசத்தின் விசுவாசத்தைப் பலவீனப்படுத்தியது. ஒருவர் உடன்படிக்கை செய்தபின், இலக்கை சென்றடைவோமா என்று சந்தேகப்படும்போது, இப்படியாக விசுவாசம் பலவீனப்படும். இப்படிப்பட்டவர்கள், தேவனுடைய வார்த்தையைத் தங்களுக்குக் கற்றுக்கொடுப்பதற்கு உதவி செய்தவர்களை விட்டுவிட்டு மற்றவர்களைப்பார்த்துக்கொண்டு, சுக்கான் இல்லாத கப்பலைப்போல திரிவார்கள் (யாக்கோபு 3:4).

பயமும், சந்தேகமும் மற்ற நம்பிக்கையின் அமைப்புகளைத் தேடுவதற்கு வழி நடத்தும். இஸ்ரயேலர்கள் தேவனை சந்தேகப்பட்டதினால், அவர்களோடு இருந்தவர்களின் சாட்சிகளைப்பெற விரும்பினார்கள். "தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வோமாக" (ரோமர் 3:3-4). தேவனுடைய வார்த்தைகளில் எழுதப்பட்டிருக்கும் காரியங்கள் அனைத்தும் நமக்குண்டானக் கட்டளைகள் என்று நாம் எப்போதும் மறந்துவிடக்கூடாது (ரோமர் 15:4).

ஜனங்களுக்குக் காரியங்கள் எளிதாக்கப்பட்டால் என்ன நடக்கும்? கொடுக்கப்பட்டதைப் பாராட்டுவதற்கு வாய்ப்பிராது. ஒரு குழந்தை வளரும்போது, அவனுடைய பெற்றோர்கள் பொறுப்புகளைக் கற்றுக்கொடுக்காமல், மற்றவர்களுக்காகக் கவலைப்பட்டு அவர்களுக்கு உதவி செய்வதற்கு ஊக்குவிக்காமல், அநேக பொருட்களைக் கொடுத்து அவனை சீரழித்தால் அவன் மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாதவனாக வளருவான். மேலும் அவனுக்கு உரிமையளிக்கப்பட்டாலும், பண்புள்ளவனாக வளருவதற்கு அவனால் இயலாது. ஒரு குழந்தை வீட்டில் ஒழுக்கத்தைக் கற்றுக்கொண்டு மீதியுள்ள தன்னுடைய குடும்பத்தோடு இணைந்து வேலைகளைப் பகிர்ந்துக்கொண்டிருந்தால், பெரியவனாகும்போது எல்லாரோடும் இணங்கி, போதுமான மனநிலையோடு நம்பிக்கைக்குப் பாத்திரவானாக இருப்பான். விசேஷமாக அவன் தேவனுடைய வார்த்தைகளில் பயிற்சி பெற்றால் இந்நிலையை அடைவான் (நீதிமொழிகள் 22:6).

**தேவனுக்கு எதிரான புரட்சி**

வெளிப்படையாகவே கோராகு, தாத்தான் அபிராமோடு இணைந்து, இறுமாப்பும், நாகரீகமற்றவர்களுமானார்கள் மோசேயின் தலைமையில் இஸ்ரயேலர்கள் நடத்தப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. உடனடியாக, அதற்குப்பின் கோராகின் கீழிருந்த லேவியர்கள் மோசேயின் தலைமையை எதிர்த்தார்கள். அநேகமாக, தேவன் மோசேயிடம் கூறினதை மோசே எளிமையாகவும், நேரடியாகவும் அறிவித்தக் காரியம் அவர்களுக்குள் கடுமையான பதற்றத்தை உண்டுபண்ணியிருக்கலாம். அதற்குப்பின் உடனடியாக கோராகின் கீழிருந்த லேவியர்கள் மோசேயின் தலைமையை எதிர்த்திருக்க வேண்டும் (எண்ணாகமம் 16:1...).

இந்த நான்கு பேர்கள் மட்டும் மோசேயை எதிர்க்காமல், தங்களை நியாயமானவர்கள் என்று மோசேயிடம் நிரூபிப்பதற்கு அவர்களுக்கு அநேகர் தேவைப்பட்டார்கள். "மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடி, அவர்களை நோக்கி: நீங்கள் மிஞ்சிப்போகிறீர்கள்; சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள்; கர்த்தர் அவர்கள் நடுவில் இருக்கிறாரே; இப்படியிருக்க, கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள் என்றார்கள்" (எண்ணாகமம் 16:3). எப்படியிருந்தாலும், அவர்கள் தேவனுக்கு எதிராக கலகம் செய்துக் கொண்டிருந்தார்கள்.

மேலும், அவருடைய சுத்திகரிப்பின் வழிகள், தேவையில்லையென்று நாம் சிந்திக்கத் துவங்கினால், இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் வழிநடத்தக்கூடிய வார்த்தைகள் வெகு சீக்கிரத்தில் நம்மைவிட்டு அகன்று போகும் என்பதை எண்ணி நாம் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். கோராகு மற்றும் அவனோடு சபையிலிருந்து, "இருநூற்று ஐம்பது நபர்கள் - தேவனுடைய வேலையை

எதிர்க்கக்கூடியவர்களை அடையாளப்படுத்துகிறார்கள்." இக்காரியம் தேவனுடைய நிலைகளைத் தாழ்த்துவதாகக் கருதப்படுகிறது.

மோசே மிகத் தாழ்மையானவர். "மோசே அதைக் கேட்டபோது, முகங்குப்புற விழுந்தான்" (எண்ணாகமம் 16:4) என்று கூறப்படுகிறது. முழு சபையும் அழிக்கப்படுமோ என்று பயந்திருந்தார்கள். ஆனால், கோராகு, தாத்தான் மற்றும் அபிராமின் கூடாரங்களைவிட்டு மற்ற ஜனங்களை வெளியே வரும்படி தேவன் மோசேக்குக் கட்டளையிட்டார் (எண்ணாகமம் 16:23-26). ஆசரிப்புக்கூடார வேலைகளில் தேவன் கோராகையும் அவருடைய லேவி கூட்டத்தாரையும் ஆசீர்வதித்ததைக்குறித்து மோசே நினைப்பூட்டினார். ஆனாலும், இவர்கள் ஆசாரிய வேலைகளையும் பெற்றுக்கொள்ள முயற்சி செய்தார்கள் (எண்ணாகமம் 16:9-10). திடீரென்று பூமி பிளந்து, கோராகு புத்திரரை விழுங்கியது. தூபம் காட்டின 250 பேர்களை அக்கினி பட்சித்தது. (எண்ணாகமம் 16:30-35).

**பொறுப்பு**

தேவனுடைய பிரதிநிதியை அவமதித்த தேவனுடைய ஜனங்களில் ஒரு குழு அவருடைய பலத்த கரத்தினால் அழிக்கப்பட்டதைக் கண்ட மற்ற இஸ்ரயேல் ஜனங்கள், சற்று நிதானித்து, சிந்தித்து, நடந்த காரியங்களை விநோதமாகப் பிரதிபலித்தார்கள். இச்சம்பவம் நடந்த மறு நாளிலே, இஸ்ரயேல் ஜனங்கள் மோசே மற்றும் ஆரோனுக்கு எதிராக முறுமுறுக்கத் துவங்கினார்கள். "**நீங்கள்** கர்த்தரின் ஜனங்களைக் கொன்றுபோட்டீர்கள்" (எண்ணாகமம் 16:41). இங்கு மீண்டும் இவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிர்த்து நின்றார்கள். இந்தக் கூட்டத்தாருக்கு உடனடியாக முடிவு கட்ட வேண்டும் என்று தேவன் நேரம் தாழ்த்தாமல், மோசேயிடம் எதையும் அறிவிக்கவில்லை. என்ன நடக்குமோ என்று பயந்து மோசேயும், ஆரோனும் முகங்குப்புற விழுந்தார்கள். இவர்கள் இருவரும் குறுக்கிட்டு, அந்த வாதையைத் தடுத்தப்போதிலும், 14,000 பேர்கள் அந்த வாதையில் மரித்துப்போனார்கள் (எண்ணாகமம் 16:49).

இவர்கள் மீண்டும் முறுமுறுத்ததன் காரணமென்ன? இவர்கள் யேகோவா தேவனுடைய நீதியை அறியாதிருந்தார்கள். ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நாம், இப்படிப்பட்ட முகஸ்துதியான காரியங்களுக்கு இணங்கலாமா? வீண் பெருமை, நம்முடைய சுய தகுதியை உயர்த்தி, தேவன் நமக்கு நியமித்திராத பணிகளைச் செய்வதற்கு நம்மைத் தூண்டும் ஆர்வத்தை ஏற்படுத்துகிறது. இதற்கு கோராகு ஒரு சரியான எடுத்துக்காட்டாக இருக்கிறார். நாம் நம்முடைய பெருமையிலிருந்தும், சுய சித்தங்களிலிருந்தும் நம்முடைய இருதயத்தைக் காத்துக்கொண்டவர்களாக நாம் தேவனுடைய பக்கத்தில் இருப்போம். முரண்பாடுகள் வரும்போதெல்லாம் ஆண்டவருடைய வழியை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**நாற்பது வருடங்களின் முடிவில்**

இஸ்ரயேலர்கள் பயணித்த 40-ஆம் வருஷம் முடிவில் நம்முடைய கால அட்டவணையில் ஏப்ரல் என்று அழைக்கப்படும், முதல் மாதமாகிய ஆபிப் மாதத்தில், இஸ்ரயேலர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் நுழைந்தார்கள். அங்கு அவர்களுக்குத் தண்ணீர் இல்லை. அவர்கள் ஒரு வனாந்தரத்தில் இருந்தார்கள். அந்த இடத்தைச் சுற்றிப்பார்த்த ஜனங்களின் ஆய்வின்படி, அங்குள்ள ஜனங்கள் தாங்கமுடியாத வெப்பத்தினால் மிகவும் அசௌகரியமாகவும், மிகுந்த எரிச்சலினால் அடைந்த வேதனைகள் அவர்களை மரணத்திற்குள்ளாக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. இஸ்ரயேலர் அந்நேரத்தில் தாகத்தினால் மட்டுமே அவதிப்படவில்லை என்று தெளிவாகிறது.

இஸ்ரயேலர்கள் தங்களுடைய தலைவராகிய மோசேக்கு விரோதமாகக் கூட்டங்கூடினார்கள் என்று எண்ணாகமம் 20:3-ஆம் வசனம் கூறுகிறது. மதிப்புமிக்க தலைவர்கள் கனமுள்ள பொறுப்புகளைச் சுமக்கிறார்கள். மோசே மற்றும் ஆரோன், "கூடார வாசலுக்குச் சென்று " முகங்குப்புற விழுந்தார்கள் என்று 6-ஆம் வசனம் கூறுகிறது. யேகோவா தேவனுடைய மகிமை அவர்களுக்குக் காணப்பட்டது. ஒருவேளை ஒரு ஒளிக்கதிர் மகா பரிசுத்த ஸ்தலத்தின் கிருபாசனத்திலிருந்து தோன்றினதைக் கண்டு பயந்திருக்க வேண்டும்.

ஜனங்களைக் கூட்டிச்சேர்த்து, கன்மலையிடம் பேசும்படி மோசேயிடம் கூறினார். அங்குக் கிட்டத்தட்ட இரண்டு மில்லியன் ஜனங்களுக்கும் அதிகமான கால்நடைகளும் நின்றிருக்க வேண்டும். அவர்கள் அனைவருக்கும் தாராளமாகத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று தேவன் ஆயத்தமானார். தண்ணீர் தாகத்தினால் ஜனங்கள் மரிப்பதை தேவன் விரும்பவில்லை. அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் விளிம்பில் நின்றார்கள். ஒருகோலை (அதிகாரத்திற்கு அடையாளம்) எடுக்கும்படிக்கு தேவன் மோசேயிடம் சொன்னார் (எண்ணாகமம் 20:8). ஆரோனை, பிரதான ஆசாரியனாகவும், மோசே அவருக்கு உதவியாளருமாக தேவன் அங்கீகரித்ததை,

ஜனங்கள் நினைவுகூரும்படியாக, ஒருவேளை அது ஆரோனுடைய துளிர்த்தக் கோலாக இருந்திருக்க வேண்டும்.

மோசே கொஞ்சம் கனத்தை தானே தனக்கு எடுத்து கொண்டார் என்று எண்ணாகமம் 20:10-ஆம் வசனம் காட்டுகிறது. அவர் கன்மலையிடம் அடிப்பதற்கு அல்ல, பேசும்படி கட்டளைபெற்றார். ஆனால் மோசே மிகவும் கோபங்கொண்டவராக இரண்டு முறைகள் கன்மலையை அடித்தார். ஒரு மிகப் பெரிய ஊழியக்காரனும் தடுக்கிவிழுவார் என்பதை இது காட்டுகிறது.

மோசே செய்த தவறுக்காகவும்கூட நாம் அவரை நியாயந்தீர்க்காதபடிக்கு எச்சரிப்பாக இருக்க வேண்டும். "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" (மத்தேயு 7:16). ஆயினும் இந்த அனுபவம் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு பாடமாக உள்ளது. நம்முடைய நடத்தையிலும், விசேஷமாக அழுத்தங்கள் மத்தியிலும் நாம் மிக எச்சரிப்போடிருக்க வேண்டும்.

மோசே ஜனங்களிடம் அல்ல, கன்மலையிடம் பேசும்படி கட்டளைப் பெற்றார். ஜனங்கள் பயத்தினாலும், தாகத்தினாலும் உபத்திரவப்பட்டுக்கொண்டிருந்தார்கள். தேவன் தம்முடைய அன்பையும், பராமரிப்பையும் வெளிப்படுத்தக்கூடிய அடையாளத்தைக் கொடுக்க ஆயத்தமாய் இருந்தார். "நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்" (சங்கீதம் 103:14). தண்ணீர் சத்தியத்தை அடையாளப்படுத்துவதினால், வருங்காலத்தில் விடாய்த்திருக்கும் மனுக்குலத்திற்கு அவர் ஜீவதண்ணீரைக் கொடுப்பதை இந்தச் சம்பவத்தில் காணலாம். இப்போதும்கூட ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் தங்களைப் பலப்படுத்தக்கூடியதும், ஆத்துமாவும் திருப்தி தரக்கூடியதுமான சத்தியத்தின் தண்ணீரைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம் (சங்கீதம் 23:2)

**உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தா தேயுங்கள்**

எபிரெயர் 3:8-ஆம் வசனத்தில், சங்கீதம் 95:8-ஆம் வசனத்தைக் குறிப்பிடுகிறார். "இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்."

வனாந்தரத்தில், இஸ்ரயேலர்கள் மோசேயிடம் சண்டைப்போட்டு, தேவனுடைய வழி நடத்துதலின்மேல், விசுவாசம் குறைவுள்ளவர்களாக அவரைச் சோதித்தார்கள். நம்முடைய இடுக்கமானப் பாதையில், தேவனுடைய பிரசன்னத்தின் வழிநடத்துதலை முழுமையான விசுவாசத்தால் மட்டுமே நாம் முன்னேறிச் செல்லலாம்.

"உங்கள் இருதயங்களைக் **கடினப்படுத்தாதிருங்கள்**" என்ற வார்த்தையை பவுல் எச்சரிக்கும்போது பயன்படுத்துகிறார். ஸ்க்கெலருநோ (skleruno) என்ற கிரேக்க வார்த்தை அங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது ஒரு மருத்துவ ரீதியான வார்த்தையாகும். இரத்த குழாய்கள் உறுதிப்படுவதே இதன் பொருளாகும். சரியான இரத்த ஓட்டத்தை சரீரத்திற்குள் அனுமதிக்காமல் இது தடுத்துவிடும். அதுபோல. தேவன் விரும்பும் குணங்களை இஸ்ரயேலர்கள் தங்களுக்குள் உருவாக்குவதற்கு அனுமதிக்கவில்லை. "மண்ணோடுகளுக்கொத்த ஓடாயிருந்தும், தன்னை உருவாக்கினவரோடே வழக்காடுகிறவனுக்கு ஐயோ!" (ஏசாயா 45:9).

இஸ்ரயேலரின் மனக்கடினம், தாங்கள் கற்றுக்கொள்ள வேண்டியதை தடைசெய்தது. இஸ்ரயேலரைப்போல நாம் "சண்டைப்போடாமல்" அல்லது "முணுமுணுக்காமல்" (யாத்திராகமம் 17:2-3) இருக்க வேண்டும். நாம் தேவனை பரீட்சைப் பார்க்கக்கூடாது. "குயவனே" நம்மை உருவாக்க வேண்டும். அவரே நம்முடைய வளர்ச்சியை சோதிக்க வேண்டும். அந்தச் சந்ததியை தேவன் "அரோசித்தார்" என்று சங்கீதம் 95:10-ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். "நான் உன் கலகக்குணத்தையும் உன் கடினக் கழுத்தையும் அறிந்திருக்கிறேன்; இன்று நான் இன்னும் உங்களுடன் உயிரோடிருக்கையில், கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினீர்களே;" உபாகமம் 31:27 என்று மோசே இஸ்ரயேலரை நோக்கி கூறினார். "அவர்கள் என் வழிகளை என்றும் கற்றுக்கொள்ளவில்லை."

**"தேவனுக்குப் பயப்படுங்கள்" (1பேதுரு2:17)**

நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்று தேவன் விரும்பும் காரியங்களைக் கற்றுக்கொள்ளாமல் போனால், அதற்கு எந்தவிதமான சாக்குபோக்குக்கும் இடமில்லை. வனாந்தரத்தில் இஸ்ரயேல் ஜனங்கள் நடந்த 40 வருடங்களைச் சிந்தித்துப் பாருங்கள். 20 வயதுக்கு மேற்பட்ட இஸ்ரயேல் ஜனங்களும் மோசேயோடிருந்த வேலியர்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்குள் ஒருவரும் பிரவேசிக்கவில்லை (யாத்திராகமம் 32:26). இவர்களை மற்ற இஸ்ரயேலரிடமிருந்து வேறுப்படுத்திய காரியமென்ன? அவர்கள் தேவனை விசுவாசித்தார்கள்.

தேவன் நமக்காக காரியங்களைச் செய்வாரா அல்லது மாட்டாரா என்ற பாதுகாப்பற்ற உணர்வின் நிமித்தம் வரும் குறைவான நம்பிக்கை நமக்குள் கீழ்ப்படியாமையை உருவாக்கும். "நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள்" (யாத்திராகமம் 17:7) என்று இஸ்ரயேலர்கள் கேட்டார்கள். "விழுந்து போகும் அநேகர் முதலாவது தேவனிடம் வைத்திருக்கும் பயத்தை விட்டுவிடுகிறார்கள்" என்று சகோ ரஸல் கூறுகிறார் (R3596). இந்நிலையை நமக்கு வளர்ச்சியடையச் செய்வது மிகவும் அபாயமானது. நாம் தேவபக்தியிலும், பயத்திலும் வளர்ச்சியடைவோம். தேவன் நமக்குத் தந்திருக்கும் அற்புதமான வாக்குத்தத்தங்களைப் புரிந்து கொள்வோம். "அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; (வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே)" (எபிரெயர் 10:23).

ஒரு தேசமாக இருந்த இஸ்ரயேலர்கள், தேவன்மேல் நம்பிக்கை வைக்காததினாலும், அவரை நம்பாததினாலும், வாக்குத்தத்தங்களை நேசிக்காததினாலும் தோல்வியடைந் தார்கள். தேவன் **ஒருபோதும்** இஸ்ரயலேரிடம் பொய்யுரைத்த தில்லை. தேவனால் பொய்யுரைக்க முடியாது!

ஆபிரகாமின் சந்ததியின் வழியாக சகல தேசங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்தப்போது, நாமே அந்த வாக்குத்தத்தின் சுதந்தரவாளிகள் என்றும், நாம் தேவன்மேல் சார்ந்திருக்கலாம் என்பதைக் காட்டுவதற்கும் தேவன் ஒரு வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார். அவருடைய வாக்குத்தத்தத்தோடு தேவன் ஆணையும் இட்டார்.

"தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" (ரோமர் 15:4).

தேவனே, தீயின் ஜ்வாலையை யாம் தேடவில்லை,
மனித அறிவுக்கடங்கா குணமாக்கும் விசித்திரம் வேண்டவில்லை,
பாவத்தினால் வந்த காயத்திற்குக் களிம்பும், மருந்துமாய் நம் சுவிசேஷம் சொல்ல
சக்தி மட்டும் வேண்டுமே,
பரலோகம் பற்றின மறைக்கப்பட்ட பக்கங்களின் மீதினில் உம் சுடரொளி வீசும்,
நுண் புலமைகாண எம்மீதே உம் பேரொளி உமிழும், (நுண்புலமை= மிகநுண்ணிய புலமை)
அது எங்கள் இளமையை ஆசீர்வதித்தே எம்மை வழி நடத்தட்டும்,
ஒவ்வொரு சத்தியம் அறிய வேண்டியே திறமையை எமக்கே அங்கீகாரம் செய்யும்,
அன்பான குரலினில், கனன்றெரியும் மொழியினில் உம் இரக்கத்தின் வார்த்தைகள் மீதே
ஆச்சர்யம் கொண்ட மக்கள் பரவசமடைந்தே அலங்கரிப்பாய் அதனை அணிந்துகொள்வாரே,
புயலின் ஆழம் கடப்பதற்கான விசுவாசம் வழங்கும்,
செங்குத்தாய் தோன்றும் மலையுச்சி மீதேறவே மனவுறுதி தாரும்,
துந்தையைவிட்டே அலைந்து திரியும்
அபலையைத் தேடி விசுவாச வீட்டிற்குள் கொணர வேண்டியே,
வல்லமை மிக்க மீட்பரே, எமக்கே போதுமான பெலன் தந்திடுமே,
எம் இதயம் ஒளி வீசச் செய்யும்,எம்மையும் கூட ஒளிர்ந்திடச் செய்யும்,
உந்தன் சாயலாய் உருமாறிட வேண்டுமே,பிரகாசமாகவே ஒளிர்ந்திட வேண்டுமே,
அன்பு செய்து உம்போல் வாழ்ந்திடவே எமக்குக் கற்றுத்தாருமே,
நீர்பெற்றுக்கொண்ட பரிசதனை நாங்கள் பெற வேண்டியே எங்களுக்காய் பரிந்துரைப்பீர் எம்
ஆண்டவரே. "மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்,
துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள
ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன். சங். 19:13
என் கன்மலையும் என் மீட்பருகாகிய கர்த்தாவே, ஏன் வாயின் வார்த்தைகளும், ஏன் இருதயத்தின்
தியானமும், உமது சமுகத்தில் பிரியமாயிருப்பதாக. சங். 19:14
நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும்,
அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்." சங், 51:7

நாம் அபாயத்தில் உள்ளோமா?

# சுவற்றின் வழியாகத் தோண்டுதல்



"முப்பதாம் வருஷம் நாலாம் மாசம் ஐந்தாந்தேதியிலே, நான் கேபார் நதியண்டையிலே சிறைப்பட்டவர்கள் நடுவில் இருக்கும்போது … நான் தேவதரிசனங்களைக் கண்டேன்" (எசேக்கியேல் 1:1).

Leo Houlmont

இதைக்குறித்து நீங்கள் எப்பொழுதாவது யோசித்ததுண்டா? ஆசாரியனாகிய எசேக்கியேல் சிறைபிடிக்கப்பட்டபோது, பாபிலோனின் ஆற்றின் அருகே அழுதுகொண்டிருக்கும்போது, அச்சுறுத்துகின்ற மாபெரும் வெளிச்சத்தில், தேவனுடைய மகிமையை அவர் கண்டார். தேவனுடைய மகிமையைக் காணக்கூடிய இடம் - ஆலயம். ஆனால் எசேக்கியேல் முதன்முறையாக பாபிலோன் ஆற்றின் அருகே கண்டார்.

ஆயினும் 14 மாதங்களுக்குப்பின் எசேக்கியேல் மீண்டும் தேவனுடைய மகிமையைக் கண்டார். இந்தமுறை தரிசனம் ஆலயத்தோடு சம்பந்தப்பட்டிருந்தது. தேவனுடைய தோற்றமும் அவருடைய மகிமையும் எசேக்கியேல் முன்பு பார்த்ததுப்போலிருந்தது (எசேக்கியேல் 8:1-4). இந்தச் சூழ்நிலையில், எசேக்கியேல் ஆவியினால் எருசலேம் தேவாலயத்திற்குள் கொண்டுவரப்பட்டார். ஆனால் எசேக்கியேல் அந்த ஆலயத்திற்குள் வழக்கமாகச் செல்லும் வழியில் செல்லவில்லை. ஆலயத்தில் நடந்துகொண்டிருக்கும் சட்டத்தால் அனுமதிக்கப்படாதக் காரியங்களை வெளிப்படுத்துவதற்கு தீர்க்கதரிசி ஒரு சுவற்றை தோண்ட வேண்டியதாக இருந்தது. "என்னைப் பிராகாரத்தின் வாசலுக்குக் கொண்டுபோனார்; அப்பொழுது இதோ, சுவரில் ஒரு துவாரத்தைக் கண்டேன். அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, நீ சுவரிலே துவாரமிடு என்றார்; நான் சுவரிலே துவாரமிட்டபோது, இதோ, ஒரு வாசல் இருந்தது. அவர் என்னைப்பார்த்து: நீ உள்ளேபோய், அவர்கள் இங்கே செய்கிற கொடிய அருவருப்புகளைப் பார் என்றார்" (எசேக்கியேல் 8:7-9).

இந்தத் தீர்க்கதரிசி எசேக்கியேல் 1:3-ஆம் வசனத்தில், "ஆசாரியனாகிய எசேக்கியேல்" என்று நமக்கு அறிமுகப்படுத்தப்படுகிறார். ஆனால் அடுத்த வசனத்தில் அவர் "மனுஷ குமாரன்" என்று குறிப்பிடப்படுகிறார் (எசேக்கியேல் 8:8). ஒருவேளை அவர் காணும்போது எசேக்கியேலுக்கும் மற்ற தீயவர்களுக்கும் இடையில் வித்தியாசம் காணும்படியாக இவ்வாறு குறிபிடப்பட்டிருக்க வேண்டும். (அல்லது ஒருவேளை இஸ்ரயேலின் தலைவர்களின் பாவங்களுக்குச் சாட்சி கொடுத்தவரும், மனுஷ குமாரன் என்று அழைக்கப்பட்ட இயேசுவுக்கு முன்னோடியாக எசேக்கியேல் இருந்தபடியால், அவரை இங்கு மனுஷ குமாரன் என்று அழைக்கப்பட்டிருக்கலாம்.)

இந்த நுழைவாயிலின் வழியாக எசேக்கியேல் சுவற்றைத் தோண்டினபோது, சுவற்றில் இஸ்ரயேலர்களால் பயன்படுத்தப்பட்ட விக்கிரகங்களும், அசுத்தமான மிருகங்களும் சுவற்றின்மேல் செதுக்கப்பட்டிருந்தது. மேலும் எசேக்கியேல் அசுத்தமான உருவங்களோடு, இருட்டான அறைகளில் தூப கலசங்களோடு நின்ற இஸ்ரயேலின் வயது சென்ற எழுபது மூப்பர்களைக் கண்டார் (எசேக்கியேல் 8:10-12). அவர் முன்சென்றபோது, தம்மூஸ் என்ற தெய்வத்திற்காக ஸ்திரீகள் அழுகிறதைக் கண்டார். தேவனுடைய வீட்டின் பிரகாரத்திற்குள் எசேக்கியேல் அழைத்துவரப்பட்டார். அங்கு 25 புருஷர்கள் தங்களுடைய முதுகை ஆலயத்தின் பக்கமாகத் திருப்பி, கிழக்குப் பக்கமாகப் பார்த்து சூரியனை ஆராதித்துக்கொண்டிருந்தார்கள் (எசேக்கியேல் 8:13-18). இவை அனைத்தும் இஸ்ரயேலரின் விக்கிரக ஆராதனையான பாவச்செயல் மற்றும் முரட்டுத்தனத்தைக் காட்டுகிறது. இதற்கான தண்டனை தொடர்ந்துவரும் 9 மற்றும் 10-ஆம் அதிகாரத்தில் காணலாம்.

சில அதிகாரங்களுக்குப் பின் எசேக்கியேல் 34-ஆம் அதிகாரத்தில் இஸ்ரயேலின் தலைவர்களாகிய "மேய்ப்பர்கள்" மீண்டும் பகிரங்கமாகப் பழித்துரைக்கப்பட்டு அவர்களின் பாவங்கள் ஒவ்வொன்றாக எண்ணப்பட்டு கணக்கிடப்பட்டது. இவர்கள் பலவீனர்களைப் பலப்படுத்தாமல், வியாதியஸ்தரைக் குணப்படுத்தாமல், காயப்பட்டவர்களைக் கட்டாமலும், பசுமையான மேய்ச்சலை அவர்களுக்குக் கொடாமலும் தங்களுடைய முடிவுகளைத் தேடும்படியாக மிகக் கொடூரமாகவும், காட்டுமிராண்டித்தனமாகவும் ஆட்சி செய்தனர் (எசேக்கியேல் 34:1-6). இவர்களின் பாவத்தின் மத்தியில், குழந்தைகளையும் பலி செலுத்தினார்கள். "அவர்கள் தங்கள் பிள்ளைகளைத் தங்கள் நரகலான விக்கிரகங்களுக்கென்று பலியிட்டபின்பு,

அவர்கள் என் பரிசுத்தஸ்தலத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்க அந்நாளில்தானே அதற்குள் பிரவேசித்தார்கள்; இதோ, என் ஆலயத்தின் நடுவிலே இப்படிச் செய்தார்கள்" (எசேக்கியேல் 23:39).

**இந்தத் தரிசனங்களிலுள்ள பாடங்கள்**

இந்தப் பகுதிகளை வாசிக்கக்கூடிய பல சகோதரர்கள் இயேசு வாழ்ந்த காலத்தில் ஆவிக்குரிய வழிகளிலிருந்து தவறிப்போன இஸ்ரயேல் ஜனங்களைக்குறித்தும், அதற்குப்பின் வந்த கிறிஸ்தவ மண்டலத்தின் ஆவிக்குரிய ஒழுக்கமற்ற நடைகளைக்குறித்தும் தீர்க்கதரிசனம் எழுதப்பட்டிருப்பதாகக் கூறலாம். இது மிகச் சரியாகப் பொருந்தக்கூடியவைகளாக இருக்கிறது. ஆனால் இந்தத் தரிசனங்கள் இக்காலத்தில் நமக்கென்ன போதிக்கிறது என்று பார்க்கலாம்.

எசேக்கியேல் கண்ட தரிசனங்களில் மகிமையான ஆலயம், அதன் அமைப்பு, அளவுகள், நம்முடைய கவனத்தை ஈர்க்கின்றது. மிருகங்களின் முகங்கள், சிறகுகள், சக்கரங்கள், முள், அக்கினி, ஒளி, அறைகள், வாயில்கள், மற்றும் அளவுகள் போன்ற அடையாளங்களிலிருந்து நாம் அனைத்தையும் பெற்றிருக்க - சகலமும் ஆழந்த ஆராய்ச்சிக்கு உதவியாக இருக்கும் - இப்போது மிகத் தெளிவானதும், பயங்கரமான தரிசனத்தின் மற்றொரு பக்கத்தை மேற்பார்வை செய்ய வேண்டாம். அக்காலத்து தேவனுக்கு முன் நின்ற ஜனங்களைப்பற்றியது அவர்களின் தனிப்பட்ட பாடங்கள் நமக்கு பாதுகாப்பளிக்கக்கூடியதாக இருக்கிறது. "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" (1 கொரிந்தியர் 10:11).

இந்தப் புத்தகத்தில் நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடிய காரியம் - அச்சுறுத்தும் தேவனுடைய மகிமை மற்றும் நம்முடைய முதுகுகளை அவர் பக்கமாகத் திருப்ப முடியாதபடிக்கு, அந்த ஆலயத்தின் புனிததன்மை, அவருடைய ஆலயத்தின் பரிசுத்தத்தைக் கெடுப்பவர்களை தண்டிக்கப்படாமல் விடப்படுவதில்லை. "இஸ்ரவேல் வழிதப்பிப்போகையில், என்னைவிட்டுத் தூரமானவர்களும், என்னைவிட்டு வழிதப்பித் தங்கள் நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றினவர்களுமாகிய லேவியரும் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள்" (எசேக்கியேல் 44:10).

"பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக. ஆமென்" (1 யோவான் 5:21) என்று யோவான் எழுதும்போது, ஒருவேளை விக்கிரக ஆராதனையைப்பற்றி எசேக்கியேலின் பாடத்தை யோவான் பிரதிபலித்திருக்க வேண்டும். "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்" (அப்போஸ்தலர் 20:29) என்று பவுல் எழுதியபோது, எசேக்கியேல் 34-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட கள்ள மேய்ப்பர்களைக்குறித்த எச்சரிப்பை அவர் நினைவில்கொண்டிருக்க வேண்டும். "சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல" (1 பேதுரு 5:3) என்று பேதுரு ஆலோசனைக் கூறும்போது, எசேக்கியேல் 34-ஆம் அதிகாரம் அவர் மனதில் இருந்திருக்க வேண்டும். நல்ல மேய்ப்பரின் குணங்களைக்குறித்து இயேசு பேசும்போது, அவரும் எசேக்கியேல் 34-ஆம் அதிகாரத்தை நினைவில்கொண்டிருக்க வேண்டும் (யோவான் 10:11-16).

தேவனுடைய மந்தையை மேய்ப்பதற்கு உதவி செய்பவர்கள் பொறுப்பில் இருக்கக்கூடிய ஒவ்வொருவரும், நம்முடைய ஆண்டவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். இவர் ஓநாய்களை எதிர்த்து நின்று, பலவீனரைத் திடப்படுத்தி தொலைந்துப் போனவர்களைத்தேடி, காயப்பட்டவர்களைக் குணமாக்கி, மந்தைக்காக தம்முடைய ஜீவனையே கொடுத்தவர். நாம் இயேசுவைப்போல பிரதான மேய்ப்பர்களாக இராவிட்டாலும் - நாம் அவருடைய ஆவியினால் ஊக்குவிக்கப்பட வேண்டும். நம்முடைய வாழ்க்கையில் அவருடைய அன்பு தொலைந்துவிட்டால், "நாம் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஒரு கைத்தாளம் போலவும் இருப்போம்" (1 கொரிந்தியர் 13:1). "அவருடைய நன்மையில் நிறைந்து, அவருடைய அன்பில் தொலைந்து" என்று நாம் பாடும் பாடலுக்கு உண்மையாக இருக்க வேண்டும்.

**நம்மை நாம் சோதித்தறிதல்**

"கிறிஸ்து எனக்குள்ளே பேசுகிறாரென்பதற்கு அத்தாட்சி தேடுகிறீர்களே, நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்" (2 கொரிந்தியர் 13:3, 5) என்று பவுல் சகோதரர்களுக்கு எழுதினார். நாமும் கூட இப்படியாகவே இருக்கவேண்டும். நம்மை நாம் நிரூபித்து, நம்முடைய

நல்ல இருதயத்திலிருந்து கிரியை செய்கிறோமா, மற்றவர்களிடம் நன்மையான வழிகளில் செயல்படுகிறோமா என்று நம்மை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

கர்த்தருடைய ஆலயத்தில், அதாவது சகோதரர்கள் மத்தியில், நம்முடைய நடத்தை எப்படி இருக்கிறது என்று நாம் சுவற்றைத் தோண்டிப் பார்போம். பாரம்பரியம், போதனைகள், ஸ்தாபனங்கள், சட்டங்கள், கோட்பாடுகள் மற்றும் பழக்க வழக்கங்களை சுவற்றின் வழியாகத் தோண்டிப் பார்க்கலாம். அதில் சில அமைதி குலைச்சலானக் காரியங்களை நாம் காண்கிறோமா?

சரியான வழியில் ஆலயத்திற்குள் நோக்கும் விதமென்ன? ஆவி நம்மை அழைத்துச் செல்லும் வழியாது? நாம் எங்குத் தோண்ட வேண்டும்? நாம் அங்கு எதையாகிலும் பார்ப்பதற்கு முன், இந்தக் கேள்விகளை முன் வைக்கலாம். தேவனுடைய வார்த்தையை, "நம்முடைய பாதைக்குத் தீபமாக" ஏற்றுக்கொண்டு ஜெபிக்கிறோம். காரியங்கள் எப்படியிருக்க வேண்டும் என்று பார்த்து, அதை நாம் பார்க்கக்கூடியவைகளுக்கு ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். எழுதப்பட்ட வார்த்தைக்கு எதிரான பாதையில் தேவனுடைய பரிசுத்த ஆவி நம்மை வழிநடத்த முடியாது. "நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" (யோவான் 6:63). தேவனுடைய ஆலயத்தை அதாவது கிறிஸ்துவின் சரீரத்தைப் பொறுத்தவரையில் சில வசனக்குறிப்புகளைக் காணலாம்.

* "நாம் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்படவும்" (1 கொரிந்தியர் 12:13). இது மனித விருப்பமோ அல்லது மனித விருப்பத்தைத் திருப்தி செய்யக்கூடியதுமல்ல. ஆகவே உங்கள் மத்தியில், "பிரிவினைகளில்லாமலும்" (1 கொரிந்தியர் 1:10). "சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமலும் அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலை யாயிருக்கும்படிக்கு" (1 கொரிந்தியர் 12:25).

* "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" (1 கொரிந்தியர் 12:18). "அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது" (எபேசியர் 4:16).

* "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்" (1 கொரிந்தியர் 13:4-7). "அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்" (எபேசியர் 4:15).

* "நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்" (ரோமர் 12:6, 10).

* "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி; நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (கொலோசெயர் 3:16; ரோமர் 12:2). "நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்" (மத்தேயு 23:8).

நம்முடைய கடந்த கால நடத்தைகளையும் நம்மையும் ஆராய்ந்து பார்க்கத்தக்கதாக பயன்படுத்தபடும் கருவிகளாக இருக்கிறது. ஒரு ஊழியக்காரர் இவைகளை மட்டுமே சார்ந்த சிறிய அமைப்புகள், சகோதர,சகோதரிகள், சில நேரங்களில் சத்தியத்தையும் விட்டு கொடுக்க நேர்ந்தால், நாம் செய்ய கூடிய புத்தியுள்ள ஆராதனையிலிருந்து நழுவி விடுவோம்,

நமக்குள் அதிகமான பிரிவுகள் காணப்பட்டால் ஏதோ தவறுகள் இருக்கிறது என்று நாம் சந்தேகிக்கலாம். ஒருவேளை நம்முடைய முதுகுகளைப் பரிசுத்த ஸ்தலத்திற்குத் திருப்பியிருக்கலாம். சகோதரர்களை நாம் துண்டுத்துண்டாகப் பார்க்கும்போது - "நீ ஓலமிட்டு … அலறு … விலாவிலே அடித்துக்கொள்" (எசேக்கியேல் 21:12) என்று ஆண்டவர் கூறுகிறார் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஒருவேளை, தேவனுடைய வார்த்தைகளை ஆழமாய்ப் புரிந்துகொள்வதற்கு அவருடைய ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படியாக அந்தச் "சுருளை நீ புசித்து, இஸ்ரவேல் சந்ததியாரிடத்தில் போய் அவர்களோடே பேசு" (எசேக்கியேல் 3:1-3).

**இதற்குத் தொடர்புள்ளவைகள்**

நாம் நுழையும்போது, எது தேவனுடைய ஆலயமாகக் கருதப்படுகிறது? மற்றும் சரீர அங்கத்தினர்களை தனக்குப் பிரியம் உண்டாகும்படி, வளர்ச்சியடையவதற்கு அவர்களை அவர் பொருத்த முடியாது….. கிறிஸ்து அவர் விருப்பத்தின்படி வரங்களை நமக்கு அளிக்காவிட்டால்… சகோதரர்களின் விசுவாசத்திற்கு ஏற்றபடி அவைகளைச் செயலாற்றி….. ஒரே நபர் ஆவிக்குரிய அனைத்து வரங்களையும்…. வேண்டுமென்று கோரினால்…… சரீரம் அவருடைய சித்தத்தின்படி வளர்ந்தால்…. நம்முடைய படிப்புகளில், அங்கீகாரம் பெற்ற கேள்விகளும் பதில்களும் இருந்தால்…. ஆடுகள் அடிக்கப்பட்டு, வழிமாறி போவதைப் பார்க்கும்போது, "இதுவே தேவனுடைய சித்தம்" என்று கேட்கும்போது….. நாம் நம்முடைய பிள்ளைகளை "மரிக்க" அனுமதித்து அல்லது கிழக்கு "ஆவிக்குரிய விதத்தில்" - கிழக்கு நோக்கி ஜனங்கள் பார்த்துக்கொண்டிருப்பதைக் காணும் போதும்…. ஒரு துவாரம் இருப்பதை நாம் உறுதிப்படுத்தி கொள்ளலாம். சுவற்றைத் தோண்டக்கூடிய இடம் இதுவே என்று குறிப்பிடப் படுகிறது.

"சிறந்த வசனிப்போடாவது, ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை" என்று பவுல் கூறினார். ஆனால் அவர், "பலவீனத்திலும், பயத்தோடும், நடுக்கத்தோடும்" சகோதரர்களுக்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். இவர்கள் விசுவாசம் மனுஷ ஞானத்தைச் சார்ந்திராமல், கிறிஸ்துவைப்பற்றி சாட்சியின்மேல் சார்ந்திருந்ததே பவுலின் நோக்கமாக இருந்தது. "சகோதரரே நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப் பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன்" (1 கொரிந்தியர் 2:1-3). இந்த விஷயத்தைப்பற்றி எழுதப்படும் ஆராய்ச்சி நூல்களையும், தத்துவங்களையும் தவிர்த்து, தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அல்லது எந்த அக்கினி நம்முடைய அப்பத்தைச் சுட்டது என்று நம்மையே கேட்டுக்கொள்ளலாம் (எசேக்கியேல் 4:15).

"எல்லாம் இயேசுவே, எனக்கெல்லாம் இயேசுவே" என்ற பாடலை நாம் பாடும்போது, நம்முடைய கண்களை விக்கிரகங்களின் பக்கம் திரும்பாமல் காத்துகொள்ள வேண்டும். "அழிவுக்குரிய சமயபேதத்திற்கு எதிராக நாம் துரிதப்படுத்தப்பட்டால், அவைகள் உண்மையானதா என்று சோதித்துப் பார்க்கலாம் (1 கொரிந்தியர் 13:9). எசேக்கியேல் 34-ஆம் அதிகாரத்தில் ஆடுகள் மற்றும் மேய்ப்பர்களைப்பற்றிய விவரங்களை நாம் கவனித்து, சுத்தமான பசும்புல்வெளியில் மேய்த்து, கால்களினால் மிதிக்கப்பட்ட கலங்கலான தண்ணீரைக் கொடாமல், தெளிவான தண்ணீரைக் கொடுப்போம்.

நாம் எதைத் தேர்வு செய்ய வேண்டுமென்றும், எதைத் தேர்வு செய்யக்கூடாது என்றும், எதைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றும், எதைப் புரிந்துகொள்ளக்கூடாது என்றும் - போன்றவைகள் தேவனுடைய சித்தத்திற்கு எப்பொழுதும் இசைவாக இருப்பதற்கு வாய்ப்பில்லையென்றும், சத்தியத்தில் வழிநடத்த ஊக்குவிப்பதில்லையென்று எப்போதாவது நாம் சிந்திப்பதுண்டா? மனப்பூர்வமாக நாம் செய்யக்கூடிய தேர்வுகள், நாம் திசைக்கெட்டுப்போவதற்கு வாய்ப்பை உண்டு பண்ணுகிறதல்லவா?

இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின்மேல் ஜனங்கள் அதே விசுவாசத்தை வைத்திருக்கிறார்கள் - இரட்சிப்பு, அழைப்பு, தேர்வு, மகிமையடைதல், உயிர்த்தெழுதல் மற்றும் திரும்பக்கொடுத்தல் போன்ற இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஒரேவிதமாக விசுவாசிக்கக்கூடியவர்கள் ஒரு வார்த்தையின் விளக்கம், வசன பகுதி, நிழல் உவமை போன்ற காரியங்களினிமித்தம் தங்களையே பிரித்துக்கொள்கிறார்கள். பிரிவுக்கான நோக்கம் போதுமானதா? "சத்தியம் வீதியிலே இடறி," (ஏசாயா 59:14) என்று தீர்க்கதரிசி எச்சரிக்கிறார். சில

விடாப்பிடியான குறிப்புகள் இதற்குக் காரணமாக இருக்கக்கூடுமா?

**நன்கு அறியப்பட்டிருக்கும் பிரமாணம்**

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" (யோவான் 13:34) என்ற பிரமாணத்தை இயேசு நமக்குக் கொடுத்தார். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" (யோவான் 13:35) என்று மேலும் நம்மை ஊக்குவித்தார். "பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், பூமியிலே பேசினவருக்குச் செவிகொடுக்கமாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப்போகாமலிருக்க, பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டுவிலகினால் எப்படித் தப்பிப்போவோம்?" (எபிரெயர் 12:25). மற்றவர்கள் காண்பதற்காக இந்த ஆதாரம் இருப்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

இந்த வார்த்தைகளோடு நாம் முடிவுக்கு வரலாம் - "கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ள வைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ள வைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவை களெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்" (பிலிப்பியர் 4:8).

**கெத்செமனே**

வைகறைப் பொழுதின் மந்தமான ஒளியினிலே நான் பயணிக்கும்போதில்,
எல்லாமும் இருளாகவும், கவர்ச்சியற்றும் தோன்றுகின்றதே,
என் இரட்சகர் என் அருகிலில்லை என்றே ஆச்சர்யமாக எண்ணிடும்போதில்
வழியோ, பனியினில் ஊறி நனைந்தே காணப்படுகிறதே,
தடுமாறி நானும், செவிடாகி, குருடாகி,
என்பாரமான சுமைகள் அழுத்திடும் பாரத்தின் கீழாக நின்றேன்,
என் மனத்துன்பம் நிறைந்தே, கண்ணீர் கண்களை மறைத்து நிற்க,
அந்த முகத்திரை மறைப்பினூடே என் கிறிஸ்துவின் முகத்தைக் கூட என்னால்
பார்க்க முடியவில்லையே,
பரலோக அன்பின் உயரத்தின் மீதே கடைசியில் என்பார்வையில் அகப்பட்டதே,
அவரது முகமோ சூரிய ஒளியினில் என்றும் பிரகாசமாய் காணப்படுதே,
இப்படித்தான் நானும் அஜாக்கிரதையாய் கவனமின்றி அலைகின்ற போது,
முட்கள், நெருஞ்சில்கள் மீது கவனம்கொள்ளாமலே சென்றேன்,
அவை என் பாதங்களைக் குத்திக் கிழித்தனவே,
கடைசியில் முற்றிலும் கிழிக்கப்பட்டே,களைப்புடனே நான் கீழே விழுந்தேனே,

**எசேக்கியேல் 46:1-13**

# ஆறு ஆட்டுக்குட்டிகள்



"அதிபதி ஓய்வுநாளிலே கர்த்தருக்குப் பலியிடும் தகனபலி, பழுதற்ற ஆறு ஆட்டுக்குட்டிகளும் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவுமே" (எசேக்கியேல் 46:4).

David Rice

எசேக்கியேல் 46:1-13

எசேக்கியேல் புத்தகத்தில் ஐந்து பகுதிகள் உண்டு. (1) 1-24 அதிகாரங்கள் - பல்வேறு தரிசனங்களையும், தண்டனைகளையும் இஸ்ரயேலைக்குறித்த தீர்க்கதரிசனங் களையும் பற்றிக் கூறுகிறது. (2) 25-32 அதிகாரங்கள் - புறஜாதி தேசங்களாகிய அம்மோன், மோவாப், ஏதோம், பிலிஸ்த்தியா, தீரு மற்றும் எகிப்தைப்பற்றிக் கூறுகிறது. (3) 33-36 அதிகாரங்கள் - பிரஜைகளாகத் திரும்பிய இஸ்ரயேலர்களை விசேஷமாக இஸ்ரயேலர்களின் மூப்பர்கள்பற்றியும் கூறப்பட்டுள்ளது. இதில் சகோதர தேசமாகிய ஏதோம் இதில் அடங்குவார்கள். (4) 37-39 அதிகாரங்கள் - கோகு தாக்கியதால் இஸ்ரயேலர்களின் திரும்புதல் மற்றும் அர்மகெதோனின் பயமுறுத்தலின் வழியாக, தேவன் இஸ்ரயேலை இரட்சித்ததைக் குறிப்பிடுகிறது. (5) மீதியுள்ள ஒன்பது அதிகாரங்கள் - இராஜ்யத்தின் தரிசனத்தோடு முடிவடைகிறது.

இந்தக் கடைசி பகுதியிலிருந்து நம்முடைய படிப்புக்காகக் கட்டுரை எடுக்கப்பட்டுள்ளது. இந்த உலகத்தை இரட்சிப்பதற்காக, தேவனுடைய ஒப்புராகுதலின் வேலைகளை சாலொமோனின் ஆலயம் அடையாளப்படுத்துவதுப்போல, இந்த ஆலயத்தைப் பற்றியும் நீண்ட விவரம் கொடுக்கப் படுவதினால், இந்தத் தரிசனம் பெரும்பாலும் எசேக்கியேலின் ஆலயத்தின் தரிசனம் என்று அழைக்கப்படுகிறது. விவரிக்கப்பட்டபடி, ஆயிரவருட ஆட்சியில் மனுக்குலத்திற்கு மீண்டும் ஜீவன் அளிக்கப்படும். மற்ற அனைத்து தேசங்களும் ஜீவனுக்குரிய ஆசீர்வாதங்கள் இந்த இராஜ்யத்திற்கு பூமிக்குரிய மையமாக இருக்கும் இஸ்ரயேலிடமிருந்து பெற்றுக்கொள்வார்கள்.

### வருடத்தின் துவக்கம்

இந்தத் தரிசனம், "வருடத்தின் துவக்கத்தில்" எசேக்கியேல் சிறை பிடிக்கப்பட்ட 25-ஆம் வருடத்தில் காண்பிக்கப்பட்டதாக எசேக்கியேல் 40:1-ஆம் வசனம் கூறுகிறது. "வருடத்தின் துவக்கம்" என்று கூறப்படுகிற காரியம், இஸ்ரயேலின் சிறைப்பிடிப்பின்போது ஏழாம் மாதமாக இருந்தது. இந்நாளில் பயன்படுத்தும் அந்த மாதத்தின் பெயர் திஸ்ரியாகும். அதற்கு முன் அந்த மாதம் ஏத்தானீம் என்று அழைக்கப்பட்டது. (1 இராஜாக்கள் 8:2) திஸ்ரி என்ற வார்த்தை பாபிலோன் மாதமாகிய தாஷ்ரிதுவிலிருந்து (Tashritu) எடுக்கப்பட்டது.

"வருடத்தின் துவக்கம்" என்பது முதலாம் மாதத்தைக்குறிப்பிட வேண்டுமே என்று ஒருவர் ஆச்சரியப்படலாம். ஆனால் இதற்கு எதிரிடையாக மூன்று கருத்துக்கள் வைக்கப்படுகிறது. (1) மாதம் "ஒன்று" என்ற எண் இரண்டுமுறை வெளிப் படையாகவே எசேக்கியேல் 29:17 மற்றும் எசேக்கியேல் 30:20-ஆம் வசனங்களில் குறிப்பிடப்படுகிறது. ஆனால் மாதம் "ஏழு" என்ற எண் எசேக்கியேலில் எதற்காகவும் பயன்படுத்தப் படவில்லை. (2) யூதேயாவின் இராஜ்யத்தில் அரசாட்சி சம்மந்தப்பட்ட வருடங்கள் இலையுதிரும் காலத்திலிருந்து இலையுதிரும் காலம் வரைக்கும் கணக்கிடப்பட்டது. வசந்த காலத்திலிருந்து வசந்த காலம் அல்ல. எடுத்துக்காட்டாக, 2 இராஜாக்கள் 22:3; 2 இராஜாக்கள் 23:23 வசனங்களில் தொடர்ந்து காணப்படும் நிகழ்வுகளைப் பார்க்கும்போது, வருடத்தின் முதல் மாதம் துவக்கத்திலிருந்து வருடத்தின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை என்பது தெளிவாகிறது, (3) இந்நாள் வரைக்கும் - "ரோஷ் ஹஷானாஹ்" (Rosh Hashanah) யூத புத்தாண்டு - திஷ்ரி மாதத்தின் முதல் நாளாகும்.

எசேக்கியேலுக்கு, "வருடத்தின் துவக்கத்தில்" தரிசனம் காண்பிக்கப்பட்ட காரியம், உண்மையில் குறிப்பிடத்தக்கது. ஏனெனில், மற்ற சந்தர்ப்பத்தில் புதிய வருடத்தின் துவக்கம், தெய்வீக திட்டத்தில் ஒரு புதிய யுகத்தை அடையாளப்படுத்தும். எடுத்துகாட்டாக, ஆசரிப்புக்கூடாரத்தின் கட்டுமானம், சுவிசேஷ யுகத்தின் துவக்கத்தை அடையாளப்படுத்தும். பயணம் துவங்கி இரண்டாம் வருடத்தின், முதல் மாதம், முதல் தேதியில் (யாத்திராகமம் 40:1, 17) ஆசரிப்புக்கூடாரம் நிர்மாணிக்கப்பட்டது. சாபத்தின் முடிவையும் ஆயிரவருட ஆட்சியின் துவக்கத்தையும் அடையாளப்படுத்தும் ஜலப்பிரளயம் காய்ந்த நாள், நோவாவின் வாழ்க்கையின் 601-ஆம் வயதின் முதல் மாதத்தின் முதல் தேதியாக இருந்தது (ஆதியாகமம் 8:13).

### பாவநிவாரண நாள்

குறிப்பாக, மாதத்தின் பத்தாம் தேதியிலே தரிசனம் காண்பிக்கப்பட்டதினால் உண்மையில்

எசேக்கியேலின், "புதிய வருடம்" ஏழாம் மாதத்தில் வந்த காரியம் அர்த்தமுள்ளது (எசேக்கியேல் 40:1). இது ஒப்புரவாகுதலின் நாள். இந்த உலகத்திற்கான ஆயிரவருடத்தின் ஆசீர்வாதங்களைப்பற்றிய தரிசனம் காண்பிக்கப்பட்ட நாளும், வழக்கத்தின்படி இஸ்ரயேலின் ஒப்புரவாகுதலின் நாளும் ஒரே நேரத்தில் சம்பவித்தது எவ்வளவு நேர்த்தியாகப் பொருந்துகிறது. அதற்குப்பின் எசேக்கியேல் 47:10-ஆம் வசனத்தில் தண்ணீரோடு சம்ந்தப்பட்ட என்கேதி மற்றும் எனெக்லாயிம் என்ற பெயர்களைக் கொண்ட இடம் அங்குக் குறிப்பிடப்படுகிறது. ஆடுகள் மற்றும் காளைகள் ஆகியவைகள் சம்மந்தப்பட்ட நிரூற்றுகளாக இந்த இடங்கள் பொருள்படும். இந்த இடங்களுக்கு 2லைன் ஒப்புரவாக்குதலின் நாளுக்குத் தொடர்புள்ள பலிகள், அந்த அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடியதாக இருக்கிறது. ஒப்புரவாகுதலின் தரிசனம், மனுக்குலத்தின் திரும்பக்கொடுத்தலே,

**யூபிலி**

ஒப்புரவாகுதலின் நாள் யூபிலி சுற்றில் 50-ஆம் வருடத்தில் வந்தபோது, அந்தநாள் இன்னும் விசேஷமாக இருந்தது. அடிமைகள் விடுதலையாகவும், சொத்துக்கள் திரும்பக் கொடுக்கப்படுவதற்கு அடையாளமாக யூபிலியின் எக்காளம் அந்தநாளின் முடிவில் ஊதப்பட்டு ஊர்ஜிதப்படுத்தியது. தேவனுடைய இராஜ்யத்தில் மனுக்குலம் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, ஆதாம் தொலைத்த அனைத்தையும் திரும்பக் கொடுக்கப்படுவதை இது அடையாளப்படுத்துகிறது. ஒருவர் எசேக்கியேல் 1:1, 2 வசனங்களை எசேக்கியேல் 40:1 வசனத்தோடு ஒப்பிட்டுப்பார்த்தால், அந்தத் தரிசனம் 50 என்ற எண்ணை உடைய வருடத்தில் காணப்பட்டது. அது யூபிலி வருடமாக இருந்தது. எசேக்கியேல் 7:13-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டவைகள், யூத மத தலைவர்களால் சாட்சிகளாக ஆதரிக்கப்பட்டது. (திஸ்ரி மாதத்தின் பத்தாம் தேதி கடைசி யூபிலி வந்தது. பட்டணம் பாழாக்கப்பட்ட 14 வருடங்களுக்குப் பின் வந்தது (எசேக்கியேல் 40:1). அது அந்த வருடத்திற்கான புத்தாண்டு தினமாக இருந்தது).

**தேவனுடைய இராஜ்யம்**

ஆவியினால் எசேக்கியேல் இஸ்ரயேல் தேசத்திற்கு எடுத்து செல்லப்பட்டார் என்று எசேக்கியேல் 40:2-ஆம் வசனம் கூறுகிறது. "என்னை மகா உயரமான ஒரு மலையின்மேல் நிறுத்தினார்; அதின்மேல் தெற்காக ஒரு நகரம் கட்டியிருக்கிறதுபோல் காணப்பட்டது." அந்த உயரமான பர்வதம் தேவனுடைய இராஜ்யத்தை அடையாளப்படுத்துகிறது. ஆயிரவருட காட்சிகளைப் பார்ப்பதற்கு, யோவானும் ஒரு உயர்ந்த மலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார் (வெளிப்படுத்தல் 21:10). தெற்கிலுள்ள அந்தப் பட்டணம், பூமிக்குரிய அரசாட்சிக்குத் தொடர்புடையதாக இருக்கிறது.

இந்த அதிகாரங்களில் அறிமுகப் படுத்தப்படும் இராஜ்யத்தைப்பற்றிய காரியத்தில், பல விலையேறப்பெற்ற பாடங்கள் உள்ளது. இதில் நான்கு வகுப்பார்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். ஆசாரியர்கள் (சபை), லேவியர்கள் (திரள் கூட்டம்), பிரபுக்கள் (பழைய ஏற்பாடு நீதிமான்கள்) மற்றும் தேசத்தின் ஜனங்கள் (உலகத்தின் மனுக்குலம்). எசேக்கியேல் 47-ஆம் அதிகாரத்தில், சிங்காசனத்திலிருந்து ஒரு நதி புறப்படும் காட்சியைப்பற்றி, நாம் தெளிவான அர்த்தத்தை அறிந்திருக்கிறோம். வெளிப்படுத்தல் 22:1-ஆம் வசனம் நமக்கு நினைவுக்கு வருகிறது. எசேக்கியேலில் சொல்லப்பட்ட நதி, பலிபீடத்தின் தென்புறமாகப் பாய்ந்தது. ஜீவனுக்குரிய ஆசீர்வாதங்களுக்கான நேரம் இதுவே என்று இது குறிப்பிடுகிறது. பலபீடத்தின்மேல் செலுத்தப்பட்ட பலிகளினால், ஆயிரவருட ஆட்சியின்போது, பூமிக்குரிய இராஜ்யத்தில் பாய்ந்துவரும் ஆசீர்வாதங்களை இது அடையாளப்படுத்துகிறது. (வடக்கு தேவனுடைய திசையென்று சொல்லப்படுகிறது (ஏசாயா 14:13). பலிபீடத்தின் வடபக்கத்தில் பலி செலுத்தினார்கள் - அது தேவனுடைய திசை எண்ணப்பட்டதினால் அப்படிச் செய்திருப்பார்கள். லேவியராகமம் 1:11; எசேக்கியேல் 40:35, 39). அதற்கு எதிரிடையான திசை (தெற்கு) பூமியைக்குறிக்கும். தேவனுடைய இராஜ்யத்தை அடையாளப்படுத்தும் ஒலிவமலை வடதிசையிலும், தென் திசையிலும் இரண்டாகப் பிரிந்தது. இந்த இரண்டுப் பகுதிகளும் தேவனுடைய இராஜ்யத்திலுள்ள இரண்டு பகுதிகளான பூமிக்குரிய பகுதி (தென் திசை) மற்றும் பரலோகத்தின் பகுதி (வடதிசை) அடையாளப்படுத்துகிறது சகரியா 14:4).

எசேக்கியேல் ஆயிரம் முழங்கள் கடந்தபோது தண்ணீர் அவர் கணுக்காலை எட்டியது. அதற்குப்பின் ஆயிரம் முழம் கடந்தபோது முழங்கால் அளவு தண்ணீர் இருந்தது. அதற்குப்பின் ஆயிரம் முழம் சென்றபோது இடுப்பளவு தண்ணீர் நின்றது. அதற்குப்பின் ஆயிரம் முழம் சென்றபோது தண்ணீர் தலையை மூடியது. இதுபோல, இராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள் அனைவரையும் முழுமையாகச் சென்றடையும். 1000, 1000,1000, 1000 என்ற அளவுகள் - ஆயிரவருட ஆட்சியின்போது இந்த நதி உலகத்தைப் படிப்படியாக ஆசீர்வதிக்கும்படி பாயும். (நெகேமியா 3:13-ஆம் வசனத்தில் இதற்குத் தொடர்பான 1000 என்ற

எண்ணை எருசலேமின் மதில்கள் கட்டி முடிக்கப்பட்டதில் காணலாம்.)

**எசேக்கியேல் 46**

இப்போது எசேக்கியேல் 46-ஆம் அதிகாரத்தைக் கவனிப்போம். முதல் 13 வசனங்களைத் தியானிப்போம். தரிசனத்தின் பெரும்பாலான பகுதிகளிலிருந்தும், மற்றவர்களிட மிருந்தும், மேலே கூறப்பட்டவைகளிலிருந்தும், ஆயிரவருட ஆட்சியைப் பற்றிய எதிர்பார்ப்புகளைக் குறித்து நாம் முன்னதாகவே அறிந்திருக்கிறோம்.

**வசனம் 1 -** "கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: வேலைசெய்கிற ஆறுநாளிலும் கிழக்குக்கு எதிரான உட்பிராகாரத் தினுடைய வாசல் பூட்டப்பட்டிருந்து, **ஓய்வுநாளிலும்** மாதப்பிறப்பிலும் திறக்கப்படக்கடவது."

இந்த வாசல் தேவனை நோக்கி ஜனங்கள் செல்லுவதற்காகக் கொடுக்கப்பட்டது. ஆனால் வேலை செய்யக்கூடிய ஆறு நாட்களுக்கு இந்த வாசல் அடைக்கப்பட்டிருக்கும். 6000 வருடங்கள் அதாவது, ஆறு பாவத்தின் "நாட்களில்" மற்றும் மனுக்குலம் அனுபவித்த மரணத்தையும் அவர்கள் தேவனை விட்டுப்பிரிந்துபோன காலத்தையும் வெளிப்படையாகக் காட்டுகிறது. ஆயினும் ஓய்வுநாளில் இந்த வாசல் திறந்திருக்கும். 7-வது ஆயிரம் வருடத்தில் இந்த உலகத்தில் இருக்கும் முழு மனுக்குலமும், இதுவரையிலும் சென்றடையாத வழியில் தேவனை நோக்கிச் செல்லுவர்.

மற்றொரு நாளிலும் இந்த வாசல் திறக்கப்படும். "மாதப்பிறப்பு அன்று இந்த வாசல் திறக்கப்படும்" இது இராஜ்யத்தை அடையாளப்படுத்தும் இரண்டாவது வழியாகும். ஆனால், இந்தமுறை இது யூதர்களுக்கான ஒரு வாய்ப்பாக உள்ளது. புறஜாதியான முழு மனுக்குலமும் 6000 வருடங்களாக சாபத்தின் கீழ் இருந்தார்கள். ஆனால், மாதப்பிறப்பு, விசேஷமான இஸ்ரயேலர்களுக்குச் சம்மந்தப்பட்டதாக இருக்கிறது.

அமாவாசி மாதத்தின் முதல் நாளாயிருக்கிறது. சந்திரன் மிகச் சிறியளவில் காணப்பட்டாலும், காணக்கூடிய அளவுக்கு வளர்ச்சியடையும். இரவுக்கு இரவு அதிகமான வெளிச்சத்தையும், தேவனுடைய இராஜ்யத்தில் இஸ்ரயேலின் வளர்ச்சியின் நிலைகளையும் இது காட்டுகிறது. இவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு தேவனிடத்தில் திரும்புவார்கள். பழைய ஏற்பாட்டு நீதிமான்கள், இவர்களுக்கு உதவி செய்வதற்காக எழும்புவார்கள். இயேசு தான் அவர்களுடைய ஆசீர்வதிக்கப்பட்ட மேசியா என்று கற்றுக்கொள்வார்கள். அதற்குப்பின் "அவரைக் குத்தினவர்கள்" அவரைக் காண்பார்கள் (சகரியா 12:10; யோவான் 19:37).

இயேசுவின் முதல் வருகையில் அவர் இஸ்ரயேல் ஜனங்களால் புறக்கணிக்கப்பட்டு, பௌர்ணமி அன்று சிலுவையில் அறைப்பட்டார். இந்த ஒரு காலக்கட்டத்தில் இஸ்ரயேலர்கள் உச்சக்கட்ட கிருபையைப் பெற்ற நிலையில் இருந்ததை இது அடையாளப்படுத்துகிறது. ஆனால் ஒரு தேசமாக இயேசுவை ஏற்றுக்கொள்ளாததினால், சந்திரனுடைய அளவும், ஒளியும், மகிமையும் நாளுக்கு நாள் தேய்ந்து போனதுபோல, அவர்களின் வளர்ச்சியும் நாளுக்குநாள் தேய்ந்தது. எசேக்கியேல் 46:1-ஆம் வசனத்தில் இது எதிரிடையாகக் காணப்படுகிறது. இப்போது இஸ்ரயேலின் ஆசீர்வாதங்கள் நாளுக்கு நாள் தொடர்ந்து அதிகரிக்கும். இந்த வாசல் திறக்கப்பட்டு இயேசுவை அவர்கள் அடையாளம் கண்டுகொண்ட பின் இஸ்ரயேலின்மேல் கிருபை அதிகரிக்கப்படும்.

**வசனம் 2 -** "அப்பொழுது அதிபதி வெளிவாசல் மண்டபத்தின் வழியாய்ப் பிரவேசித்து" இந்த வசனத்தில் சொல்லப்படும் அதிபதிகள் (பழைய ஏற்பாட்டு நீதிமான்கள்) திறந்த வாசல் வழியாக தேவனிடத்தில் பிரவேசிப்பார்கள். பிரபுகள் அந்த வாசலின் நிலையண்டையில் நிற்பார்கள். ஆசாரியர்கள் தங்கள் சார்பாக தகன பலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்துவார்கள். இந்தப் பலிகளைக்குறித்த அர்த்தங்களைச் சற்று நேரத்திற்குபின் நாம் பார்க்கலாம். கிறிஸ்துவின் ஈடுபலியினால் கிடைக்கப்பெற்ற இரட்சிப்பைப் புரிந்துகொள்ளக்கூடிய காரியத்தை இந்த தகனபலிகள் அடையாளப்படுத்துகிறது என்று இப்போது நாம் மேலோட்டமான அர்த்தங்கொள்ளலாம். இந்த ஈடுபலியினிமித்தம் அவர்களுக்குள் உண்டான பரிசுத்தம், பக்தி, மற்றும் அர்ப்பணிப்பானது - தேவனுக்கு முன் நிற்பதை சமாதான பலிகள் அடையாளப்படுத்துகிறது. தேவனுடைய பிரதிநிதிகளாக ஆசாரியர்கள் இந்தக் காணிக்கைகளைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

இந்த வாசல் நாள் முழுவதும் திறந்திருக்கும் என்று வசனம் உறுதியாகக் கூறுகிறது. "அந்த வாசல் சாயங்காலமட்டும் பூட்டப்படாதிருப்பதாக." ஆகவே ஆயிரம் வருஷம் முழுவதும் விரும்புபவர்கள் உள்ளே பிரவேசிக்கலாம்.

**வசனம்** 3 - "தேசத்து ஜனங்களும் ஓய்வுநாட்களிலும் மாதப்பிறப்புகளிலும் அந்த வாசலின் நடையிலே கர்த்தருடைய சந்நிதியில் ஆராதனை செய்யக்கடவர்கள்." உலக ஜனங்கள்

அனைவருக்கும் இலவசமாக அனுமதி கொடுக்கப்படும்.

**வசனம் 4 -** "அதிபதி ஓய்வுநாளிலே கர்த்தருக்குப் பலியிடும் தகனபலி, பழுதற்ற ஆறு ஆட்டுக்குட்டிகளும் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவுமே." இந்தப் பலிகளைத் தனக்காகவும், தன்னுடைய தேசத்திலுள்ள ஜனங்களின் சார்பாகவும் இந்த அதிபதிகள் செலுத்தினார்கள் என்பது தெளிவாகக் கூறப்படுகிறது. இங்குச் சொல்லப்பட்ட, "ஆறு ஆட்டுக்குட்டிகள்" நம்முடைய பாடத்தின் தலைப்புக்கு நம்மை நேரடியாக அழைத்து வந்துவிட்டது.

இது வழக்கத்திற்கு மாறான ஒரு எண்ணாக இருக்கிறது. நியாயப்பிரமாணத்தில், அதிகப்பட்சமான பலி செலுத்தப்படும்போது, ஏழு என்ற எண்ணிக்கை பயன்படுத்தப்படும். எடுத்துகாட்டாக, ஏழு ஆட்டுக்குட்டிகளைப் பலி செலுத்தின சந்தர்ப்பங்கள் - அமாவாசி, புளிப்பில்லா அப்பம் (தினமும்), பெந்தெகொஸ்தே, எக்காளப் பண்டிகை, ஒப்புரவாகுதலின் நாள், கூடாரங்களின் பண்டிகையின் எட்டாம் நாள். ஏழு என்ற எண், நன்மையானக் காரியங்களுக்கும், ஆசீர்வாதமாக மற்றும் இலாபகரமான காரியங்களுக்கும் பொருத்தமாகக் காணப்படுகிறது.

ஏழு என்ற எண் "உடன்படிக்கை" என்ற எபிரேய வார்த்தையின் இருதயத்தில் உள்ளதாக சிலர் கூறுகிறார்கள். ஆகவே ஒருவர் தன்னைத்தானே முழுமையாக உட்படுத்திக்கொள்வதாகும். ஆதியாகமம் **21:28-**ஆம் வசனத்தின்படி, ஆபிரகாம் மற்றும் அபிமெலேக்குக்கும் இடையில் செய்யப்பட்ட உடன்படிக்கைக்கு ஏழு ஆட்டுக்குட்டிகள் கொண்டுவரப்பட்டது. ஏழு என்ற எண்ணோடு இந்த உடன்படிக்கையும் தொடர்புடையதாக இருப்பதினால் ஏழு என்ற எண்ணை ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு உட்பட்ட சத்தியப் பிரமாணத்திற்குச் சம்மந்தப்பட்டிருக்கிறது. ஒருவேளை, இதன் காரணமாகவே, ஆசீர்வாதமான தேவனுடைய திட்டத்தின் வெளிப்பாடுகள் அனைத்தும், அவருடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்துவதற்கு ஏழு என்ற எண் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் எசேக்கியேல் **46:4-**ஆம் வசனத்தில் ஆட்டுக்குட்டிகளின் எண்ணிக்கை நம்முடைய கவனத்தைக் கவரும் வகையில் வித்தியாசமானதாக இருக்கிறது - எண் ஆறு - காரணம் என்ன?

கடந்த ஆறாயிரம் வருடங்களாக பாவம் மற்றும் மரணத்தில் நீடித்திருந்த மனுக்குலம் முற்பிதாக்களின் தலைமையில், தேவனுடைய இரட்சிப்பைப் புரிந்துகொள்ள துவங்குவார்கள் என்பதே இதற்கான காரணம். ஜனங்களின் சார்பாக அதிபதிகள் "ஆறு ஆட்டுக்குட்டிகளைப்" பலி செலுத்தின காரணத்தைப் புரிந்துகொள்ளும் திறவுகோலாக முதலாம் வசனத்தில் "வேலை செய்யக்கூடிய ஆறுநாட்கள்" என்ற கருத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மற்றொரு மிருகம் அவைகளோடு பலி செலுத்தப்பட்டது - ஆட்டுக்கடா - ஆறு ஆட்டுக்குட்டிகளில் ஒன்றுக்கும், இந்த ஆட்டுக்கடாவுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? ஆண்பால், பெண்பால் என்ற வித்தியாசம் இல்லை. ஏனெனில், அனைத்துப் பலிகளும் ஆணாகவே இருக்கிறது (லேவியராகமம் **1:3, 10**). இவைகள் இரண்டுமே ஒரேவகையைச் சேர்ந்தது. வயது மட்டுமே இவைகளில் காணப்படும் வித்தியாசமாகும். ஆட்டுக்குட்டிகள் வளர்ச்சியடையாத நிலையையும், ஆட்டுகடா முழுமையாக வளர்ச்சியடைந்த நிலையிலும் உள்ளது.

முன்னதாகவே வாழ்ந்த வாழ்க்கையில் ஆவிக்குரியவிதத்தில் வளர்ச்சியடைந்த முற்பிதாக்கள் அந்த ஆட்டுக்கடாவின் பலியை அடையாளப்படுத்தும் என்று கருதுகிறோம். ஆனால், தேவனை நோக்கி வரக்கூடிய இந்த உலகத்தின் மனுக்குலம் வளர்ச்சிக் குறைவாக இருப்பதினால் இவர்களின் பலி வளர்ச்சியில் குறைவாக உள்ள ஆட்டுக்குட்டிகளை அடையாளப்படுத்த வேண்டும்.

**வசனம் 5 -** "ஆட்டுக்கடாவோடே போஜனபலியாக ஒரு மரக்கால் மாவையும், ஆட்டுக்குட்டிகளோடே போஜனபலியாகத் தன் திராணிக்குத்தக்கதாய்த்தருகிற ஈவையும், ஒவ்வொரு மரக்கால் மாவோடே ஒருபடி எண்ணெயையும் படைக்கக்கடவன்."

இங்குச் சொல்லப்பட்டுள்ள போஜன பலிகளுக்கான இரண்டு அளவுகளும் வழக்கத்திற்கு மாறாக உள்ளது. இப்படிப்பட்ட காரியங்களுக்கு நியாயப்பிரமாணத்தில் நிலையான ஒரு சூத்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. எண்ணாகமம் **15:1-12** வசனங்கள் இதைப் பதிவு செய்திருக்கிறது. "ஆட்டுக்குட்டியுடனே, ஒரு மரக்காலிலே பத்தில் ஒரு பங்கும் காற்படி எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவின் போஜனபலியைச் செலுத்தக்கடவன்.ஆட்டுக்கடாவாயிருந்ததேயாகில், பத்தில் இரண்டு பங்கானதும், ஒரு படியில் மூன்றில் ஒரு பங்காகிய எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவின் போஜனபலியையும்"

எசேக்கியேல் **46:5**-ஆம் வசனத்தில் இவைகள் இரண்டுமே வித்தியாசமாக இருக்கிறது.

எசேக்கியேலின் புத்தகத்தில் ஆட்டுகடாவுக்கான போஜனபலி ஒரு முழு மரக்காலாகும். மற்ற ஆறு ஆட்டுக்குட்டிகளுக்கு, "தன் திராணிக்குத்தக்கதாய் தருகிற ஈவையும்" தேவனிடத்தில் பிரவேசிப்பதற்குக், கற்றுக்கொள்ளக் கூடிய உலகத்தின் "இளைய" அங்கத்தினர்களுக்காகக் கொடுக்கப்படும் இரக்கமாகும். அவர்கள் வளர்ச்சியடையாததினால் எந்தவிதமான அளவுகளும் அவர்களுக்குக் கொடுக்கப்படாமல், "உங்கள் திராணிக்குத் தக்கதாக" என்று சொல்லப்பட்டது.

ஆயினும் பலபாடுகளைப்பட்டு வளர்ச்சியடைந்த தங்களுடைய விசுவாசத்தின் பரிசாக பரிபூரணமாக எழுப்பப்பட்ட முற்பிதாக்கள் அவர்கள் முன்னிருந்த நிலையைக்காட்டிலும் இன்னும் உயர்வான நிலையை வெளிப்படுத்தலாம் என்ற காரணத்தினால் அவர்கள் முழு அளவை அவர்களின் பலியோடு செலுத்த வேண்டும்.

லேவியராகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஐந்து பலிகளில், போஜனபலி ஒன்றாகும் (**1-7** அதிகாரங்கள்). தேவன் அவர்களுக்காகச் செய்த சகலத்தையும் புரிந்துகொண்டவர்களாக வெளிப்படுத்தக்கூடிய ஊழியத்தையும், பக்திவைராக்கியத்தையும், வேலைகளையும் இது அடையாளப்படுத்துகிறது. ஆகவே இது முற்பிதாக்களுக்கான அதிகபட்சமான அளவும், உலக ஜனங்கள் புதிதாகக் கற்றுக்கொள்ள துவங்கியதால் குறைவான அளவும் கொடுக்கப்பட்டுள்ளது.

**வசனம் 5** "ஒரு படி எண்ணெயோடு படைக்கக்கடவன்" இது தாராளமானதும், எண்ணாகமம் **15**-ஆம் அதிகாரத்தில் நிர்ணயிக்கப்பட்டதற்கும் அதிகமானதாக இருக்கிறது. ஒருவேளை, சரியானமுறையில் தூண்டப்பட்டவர்களுக்குத் தேவன் தம்முடைய ஆவியை அளவில்லாமல் கொடுக்கப்படுவதை இது அடையாளப்படுத்தலாம். "நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" (யோயேல் **2:28**).

**வசனம் 6 -** "மாதப்பிறப்பான நாளிலோ, அவன் பழுதற்ற ஒரு இளங்காளையையும், பழுதற்ற ஆறு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டு" ஓய்வு நாளில் செலுத்தப்படும் பலிகளுக்கும், மாதபிறப்பு அன்று செலுத்தப்படும் பலிகளுக்கும் ஒரேயொரு வித்தியாசம் உண்டு: ஒரு இளம் காளை.

இளம் காளை என்பது ஒரு காளை தான். காளைகள் நீண்ட நாள் வாழும். ஆயினும், இந்த வசனப்பகுதியில் வளர்ச்சிக்குறைவான ஒரு காளையைப்பற்றிப் பேசப்படுகிறது. அதவாது, இது வளர்ச்சியடைந்த காளையும் அல்ல, பிறந்த கன்றுக்குட்டியும் அல்ல. அது ஒரு "இளம்" காளையாக இருந்தது. மாதப்பிறப்பன்று செலுத்தப்படும் இளம் காளை குறிப்பாக ஏதோ ஒருவகையில் இஸ்ரயேலுக்குச் சம்பந்தப்பட்டிருப்பதாக தெளிவாகத் தெரிகிறது. மேலும் ஓய்வு நாளின் பலிகளை நாம் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, இந்த இளம் காளையின் பலி மட்டுமே மேன்மையாகக் காணப்படுகிறது.

இந்தப் பலி தேவனுடைய இராஜ்யத்தின் ஒழுங்குகளில் குறிப்பாக இஸ்ரயேலுக்குக் கிடைக்கக்கூடிய இடத்தைக் குறிப்பிடுவதாகத் தோன்றுகிறது. இந்த ஆட்டுக்குட்டிகள் கடந்த ஆறாயிரம் வருஷங்களாக இந்த உலக மனுக்குலம் சாபத்திலிருந்ததை அடையாளப்படுத்துகிறது. இராஜ்யம் துவங்கும்போது, தேசிய அளவில் உயர்ந்த நிலையைப் பெற்றிருக்கும் உயர்தர பலிகளை இளம் காளை அடையாளப்படுத்துகிறது. சகரியா 12:10-ஆம் வசனம், இராஜ்யத்தின் துவக்கத்தில் நிறைவடைந்தபின், இஸ்ரயேலர் மேசியாவை அடையாளம் கண்டுகொண்டு தங்களுடைய முற்பிதாக்களைப் பெற்றுக்கொண்டவர்களாக இந்தத் தெய்வீக தலையீடுதலுக்காக நன்றி செலுத்துவார்கள். பரிசுத்தமான பெரும் பாதையில் முன்னேறிச் செல்லவும், இராஜ்யத்தின் நன்மைகளை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தவும் இது உதவியாக இருக்கும்.

**வசனம்** 7 - போஜனபலியாக இளம் காளையோடே ஒரு முழு மரக்கால் மாவையும் ஆட்டுக்கடாவோடே ஒரு மரக்கால் மாவையும் (இஸ்ரயேலும், முற்பிதாக்களும்) படைக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. தேவனுக்கேற்ற கீழ்ப்படிதலிலும், இந்த உலகத்திற்கான அவர்களுடைய ஊழியமும் இந்த முழு அளவைக் காட்டுகிறது. ஓய்வுநாளைப்போலவே, மாதப்பிறப்பிலும் போஜனபலியோடு ஆட்டுக்குட்டிகளின் பலி மீதியிருந்தது. "தன் திராணிக்குத்தக்கதாய்" இந்த உலக ஜனங்கள் தங்களால் முடிந்த அளவுக்கு எவ்வளவு ஆவிக்குரிய கீழ்ப்படிதலைக் காண்பித்து வளர்ச்சியடையவார்களோ அவர்களையே தேவன் ஏற்றுகொள்வார்.

**வசனம் 8, 9** - தேவனை சந்திப்பதற்காக வரும் அதிபதி எந்த வழியில் வந்தாரோ, அதே வழியில் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற கட்டளையிடப்பட்டிருந்தது. ஆனால் அதற்கு எதிரிடையாக வடக்கு வாசலின் வழியாகப் பிரவேசித்த

ஜனங்கள் தெற்கு வாசலின் வழியாக வெளியேறவும், தெற்கு வாசலின் வழியாகப் பிரவேசித்த ஜனங்கள் வடக்கு வாசலின் வழியாக வேளியேற வேண்டுமென்று 9-ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ளது. மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால், இவர்களின் பயணம் நேராக இருக்க வேண்டும். ஒருவேளை பாவத்தின் இயல்புகளைத் தவிர்த்து, அதை மேற்கொள்ளவும், "அவர்களின் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்" (எபிரெயர் 12:13) என்று சொன்னவிதமாக இந்த உலகத்தின்மேல் விசேஷித்த கவனம் செலுத்தும்படி இந்த வசனம் குறிப்பிடலாம். அதேநேரத்தில் முற்பிதாக்கள் அனுபவத்தினால் பெற்றிருக்கும் வளர்ச்சியினால் அதிமான சுதந்திரத்தைப் பெற்றிருப்பார்கள்.

**வசனம் 10** - "அவர்கள் உட்பிரவேசிக்கும்போது, அதிபதி அவர்கள் நடுவிலே அவர்களோடேகூட உட்பிரவேசித்து, அவர்கள் புறப்படும்போது அவனும் கூடப் புறப்படுவானாக." இந்த உலகம் பரிசுத்தமாகவும், பயபக்தியோடும் கீழ்ப்படிதலோடும் தேவனிடத்தில் பிரவேசிப்பதற்கு முற்பிதாக்களின் உதவி அவசியமாகத் தேவை என்பதை இந்த வசனம் தெளிவாகக் காட்டுகிறது.

**வசனம் 11** - பல்வேறு பண்டிகைகளிலும், விசேஷித்த சந்தர்ப்பங்களிலும், போஜனபலிகளோடு குறிப்பிட்ட மிருகங்களைப் படைக்கக்கூடிய பலிகள் ஓய்வுநாள் மற்றும் மாதப்பிறப்பின் நாளின் பலியோடு இசைந்திருக்கிறது. தேவனைப் புரிந்துகொண்டபடியால், முற்பிதாக்கள் மனப்பூர்வமாக உற்சாகத்துடன் பலிகளைச் செலுத்துவார்கள் என்று 12-ஆம் வசனம் கூறுகிறது. இதில் அர்ப்பணிப்பு, பக்தி, பொறுப்புகளை அடையாளப்படுத்தும் சமாதான பலியும் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. இந்த உலகம் சமாதான பலிகள் கொடுப்பதாக வசனத்தில் எதுவும் சொல்லப்படவில்லை. கடைசியில் இந்த உலகம் பக்தியுள்ளதாக மாறிவிடும். ஆனால் இதற்கு எதிரிடையாக முற்பிதாக்கள் சமாதான பலிகளைச் செலுத்துவது, அர்ப்பணிக்கப்பட்ட முற்பிதாக்களின் ஊழியத்தையும், கீழ்ப்படிதலையும் உலக ஜனங்களிடமிருந்து பிரித்துக் காட்டுகிறது.

**வசனம் 13** - ஒவ்வொரு காலையிலும் ஆயத்தப்படுத்தப்பட்டு செலுத்தப்படும் அன்றாட தகனபலிகளைக் குறித்துப் பேசுகிறது. மாலையில் அடிக்கப்பட வேண்டிய இரண்டாவது ஆட்டுக்குட்டி காணப்படவில்லை என்பது நம்முடைய கவனத்தை ஈர்க்கிறது. ஆலயத்திலும், ஆசரிப்புக்கூடாரத்திலும், அந்தி சந்தி வேளைகளில் பலிகள் செலுத்துவது வழக்கமாக இருந்தது. அந்தப் பலிகளும் இப்போது ஒன்றாக இணைக்கப்பட்டிருப்பதைப்போல தோன்றுகிறது.

இஸ்ரயேலுக்காக (காலையிலும்) புறஜாதிகளுக்காக (மாலையிலும்) நித்தமும் இரண்டு ஆடுகளைப் பலி செலுத்துவது வழக்கமாக இருந்ததென்று சில நேரத்தில் எழுத்தாளர் நம்புகிறார். இதற்கு இசைவாக, பெந்தெகொஸ்தே ஆசீர்வாதங்கள் யூத கிறிஸ்துவர்கள்மேல் வந்தது. மாலையில் கொர்நெலியு வீட்டில் புறஜாதிகளுக்குண்டான அழைப்பு கொடுக்கப்பட்டது (அப்போஸ்தலர் 2:15; 10:3, 30). ஆனால் இராஜ்யத்தின்போது, இந்த இரண்டு வகுப்பார்களும் இணைந்துவிடுவார்கள். இஸ்ரயேலர்கள் இன்னும் இந்த உலக மனுக்குலத்தின் ஒரு பகுதியாக இருக்கிறார்கள். இவர்கள் இஸ்ரயேலின் மேசியாவை ஏற்றுக்கொண்டு இஸ்ரயேலின் புதிய உடன்படிக்கையின் கோட்பாடுகளை ஒவ்வொரு வருடைய இருதயத்திலும் செதுக்கிக்கொள்வார்கள். இப்படியாக, புறஜாதிகள் தங்களுடைய விசுவாச வீட்டில் சேருவார்கள்.

இந்த ஆட்டுக்குட்டிகளோடு படைக்கப்பட்ட போஜனபலி தனித்துவமானதாக இருக்கிறது. எண்ணாகமம் 15-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டபடி ஒரு மரக்காலில் பத்தில் ஒரு பங்கு என்பதற்குப்பதிலாக ஆறில் ஒரு பங்கு என்று இருந்திருக்க வேண்டும். இது பழக்கத்திற்கு மேலானது. ஆனால் இரண்டு இரண்டு மடங்கு அல்ல , நித்தமும் இரண்டு ஆடுகள் பலி செலுத்துவது வழக்கமாக இருந்தது, இரட்டிப்பிலிந்து அது ஒரு பகுதியாக குறைப்பது ஆறு நாள் உழைப்பையும் ஆறு ஆட்டுக்குட்டிகளையும் நமக்கு நினைவூட்டுகிறது, ஒவ்வொருவரும் புறஜாதியானாலும் சரி இஸ்ரயேல் ராஜாவானாலும் சரி 6000 வருட சாபத்திற்கு உட்பட்டவர்கள்,

இரண்டு ஆட்டுக்குட்டிளுக்குப்பதிலாக ஒரு ஆட்டுக்குட்டியின் பலி கிறிஸ்துவின் ஒரே பலி அனைவருக்கும் போதுமானது என்று காட்டுகிறது. போஜனபலியில் இரண்டு ஆட்டுக்குட்டிகள் இணைந்திருக்கும் காரியமானது, யூதர்கள் மற்றும் புறஜாதிகள் அந்த ஒரே பலியை ஏற்றுக்கொண்டு புரிந்துகொள்வார்கள் என்று பொருள்படுகிறது. அதில் ஆறில் ஒரு பங்கு என்ற கணக்கு, அனைவரும் அனுபவித்த சாபத்தை நமக்கு நினைப்பூட்டுகிறது.

**தகன பலி**

பலிகளில் முக்கியமான பலி தகனபலியாகும். தகன பலி என்றால் பொருள் என்ன? இது மற்ற பலிகளோடு எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கிறது?

தகனபலி அங்கீகரிப்பு என்பதோடு சம்பந்தப்பட்டிருப்பதாக சகோதரர்கள் மத்தியல் ஒரு கருத்துண்டு. இதற்குச் சில அஸ்திபாரம் உண்டு, ஏனெனில், சுமார் நான்கு சந்தர்ப்பங்களில், வானத்திலிருந்து அக்கினி வந்து பல பொருட்களைப் பட்சித்தது. இது லேவியராகமம் 9-ஆம் அதிகாரத்தில், ஆசரிப்புக்கூடாரம் ஸ்தாபித்தப் பின்னும், மீண்டும் ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்யும்போதும் மற்றும் பாகாலின் தீர்க்க தரிசிகளுக்குமுன் எலியா செலுத்தின பலியையும் ஒருவேளை ஆபேலின் பலியையும் இவ்வாறாக அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனாலும் இந்தக் கருத்து சற்றுத் தெளிவாக இல்லை. அங்கீகாரம் என்பதை ஏற்றுக்கொண்டாலும், அதற்குமேலாக குறிப்பாக ஏதாகிலும் உண்டா?

ஆம், இன்னும் விசேஷித்த காரியம் உண்டு. அடிப்படையாக தேவனால் ஏற்றகொள்ளக்கூடிய பலி - இயேசுவின் ஈடுபலி. இது தகன பலி, அடிப்படையாக ஈடுபலியைக்குறிக்கும். இதற்கான ஆதாரத்தைத் தொடர்ந்து காணலாம்.

வெவ்வேறுவிதமான பலிகளுக்குண்டான பிரமாணங்களை லேவியராகமத்தில் முதல் ஏழு அதிகாரங்களில் காணலாம். லேவியராகமத்தின் துவக்கத்திலே இவைகள் கொடுக்கப்பட்டுள்ளது. லேவியராகமத்தில் சொல்லப்பட்ட பலிகளைச் செலுத்த வேண்டிய விதங்களைப்பற்றிய பிரமாணங்கள் முதலில் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஏழு அதிகாரங்களும் சில புரியாத காரியங்கள் இடையில் சொருகப்பட்டதுபோல தோன்றுகிறது. யாத்திராகமத்தின் முடிவு மற்றும் லேவியராகமத்தின் துவக்கத்தைப்பற்றி தெளிவில்லாத காரியங்கள் காணப்படுகிறது. உண்மையில், யாத்திராகமம் 40-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட நாள் - ஆசரிப்புக்கூடாரம் ஸ்தாபிக்கப்பட்ட நாளாக இருந்தது. அதேநாள் லேவியராகமம் எட்டாம் அதிகாரத்தில் ஆசாரியத்துவத்தைப் பிரதிஷ்டை செய்தார்கள். அந்த ஒரேநாளில் ஆசரிப்புக்கூடாரமும் ஸ்தாபிக்கப்பட்டது. ஆசாரியர்கள் பிரதிஷ்டைப் பண்ணப்பட்டார்கள்.

ஒருவர் ஆசரிப்புக்கூடாரம் நிர்மாணித்ததைக்குறித்து யாத்திராகமம் 40-ஆம் அதிகாரத்தில் வாசித்ததை மனதில் வைத்துக்கொண்டு லேவியராகமம் எட்டாம் அதிகாரத்தை வாசித்தால், அந்த ஒருநாளில் நடந்த முழு சம்பவங்களையும் அறிந்துகொள்ளலாம். லேவியராகமத்தில் ஆசாரியர்கள் பிரதிஷ்டை செய்து, தொடர்ந்துவரும் ஏழு நாட்களில் நடக்கக்கூடிய காரியங்கள் அங்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது (லேவியராகமம் 8:33). லேவியராகமம் ஒன்பதாம் அதிகாரத்தில், எட்டாம் நாளில் செய்யப்பட்ட காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது (லேவியராகமம் 9:1). இப்போது ஆசாரியர்கள் பணிபுரிய ஆயத்தமாக இருந்தார்கள். முதலாவது ஜனங்களை ஒப்புரவாக்க வேண்டியதாக இருந்தது. ஒன்பதாம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட பலிகள் அதற்காகச் செலுத்தப்பட்டது.

16-ஆம் அதிகாரம் வருடத்திற்கு ஒருமுறை நடக்கும் ஒப்புரவாக்குதலின் நாளைப்பற்றி விவரிக்கிறது. இலையுதிரும் காலமாக இருந்தது. அந்த ஆறு மாதங்கள் யாத்திராகமம் 40, லேவியராகமம் 8 மற்றும் லேவியராகமம் 9-ஆம் அதிகாரங்களில் சொல்லப்பட்ட வேலை 3 லைன்

**பிரமாணத்தின் ஐந்து பலிகள்**

லேவியராகமம் ஒன்று முதல் ஏழு அதிகாரங்கள் ஐந்துவிதமான பலிகளை விவரிக்கிறது. மிக விவரமாக ஒருமுறையும், ஆசாரியர்களுக்குப் பொருந்தக்கூடிய சில காரியங்கள் இரண்டாவது முறை சுருக்கமாகக் கூறப்படுகிறது. இரண்டாவது முறை பலிகளைப்பற்றிக் கூறப்படும் காரியம், லேவியராகமம் 6:8 முதல் ஏழாம் அதிகாரம்வரைக்கும் காணப்படுகிறது. இந்தப் பகுதிக்கு ஒரு தெளிவான பகுப்பு (பிரிவு) காணப்பட்டிருந்தால், காரியங்கள் ஓரளவுக்குத் தெளிவாக இருந்திருக்கும்.

தகனபலி, போஜனபலி, சமாதானபலி, பாவநிவாரணபலி, குற்றநிவாரணபலி என்று ஐந்து பலிகளைக்குறித்துப் பேசப்பட்டிருக்கிறது. இந்த வரிசையில், போஜனபலி மிருகங்களின் பலி மற்றும் குற்றநிவாரணபலிகள் பாவநிவாரணபலிக்குச் சற்று நெருக்கமானது அதாவது, ஒருவர் குற்றநிவாரணபலியை விசேஷித்த பாவநிவாரணபலி என்றும் கூறுவார்கள். இப்படியாக, இந்த ஐந்து பலிகளும் மூன்று குறிப்பான மிருக பலிகளாகப் பிரிக்கப்படுகிறது - தகனபலி, சமாதானபலி, பாவநிவாரணபலி.

இவைகளை எளிமையாக மூன்று பகுதிகளாகப் பிரிக்கும்போது, அவைகளை எளிதில் ஒப்பிட்டும், வேறுபடுத்தியும் காணலாம். இரண்டும் எவ்வாறு கையாளப்பட்டது என்றும், இவைகளின் அடையாளமான அர்த்தங்களும் அறிந்துகொள்ள எளிதாக இருக்கும்.

**தகன பலி**

மற்ற இரண்டு பலிகளுக்கும் தகனபலியே அடிப்படையானது. ஒப்புவராக்குவதற்கு இதுவே பிரதானமான பலி (லேவியராகமம் 1:4). தெய்வீக திட்டத்தில் அடிப்படையான பலி - ஈடுபலி. தகனபலியை ஈடுபலியோடு இணைப்பதற்காக சில கூடுதலான காரணங்களைக் காணலாம்.

(1) பஸ்கா ஆடு ஈடுபலியைச் சித்தரிக்கிறது. பஸ்காவைக்குறித்தும், தகனபலியைக்குறித்தும் சொல்லப்பட்ட சில நிபந்தனைகள், இவ்விரண்டிற்கும் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. இரண்டு பலிகளும் ஆணாக இருக்க வேண்டும். ஆனால் சமாதானபலிக்கும், பாவநிவாரணபலிக்கும் எந்த மிருகத்தை வேண்டுமானாலும் பலியிடலாம். அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தபடி பலி செலுத்தலாம். தகனபலி, அக்கினியால் பட்சிக்கப்பட்டது, ஆட்டுக்குட்டி அக்கினியினால் சுடப்பட்டது. (மற்ற பலிகள் நீரினால் அவிக்கப்பட்டது).

(2) அதிகமாக, மீண்டும்மீண்டும் நாளுக்குநாள் நித்தமும் இரண்டு ஆட்டுக்குட்டிகள் அந்திசந்தி நேரங்களில் கொடுக்கப்பட்டது. இயேசு காலையில் சிலுவையில் அறையப்பட்டதும், மத்தியான வேளையில் மரித்தது நமக்கு நினைப்பூட்டப்படுகிறது. நித்தமும் செலுத்தப்பட்ட தகனபலிகள், கல்வாரியில் இயேசு மரித்தத்தைச் சித்தரிக்கிறது. இப்படியாக, தகனபலிகள் ஈடுபலியோடு தொடர்புடையதாக இருக்கிறது.

(3) அன்றாட பலியோடு ஈடுபலி சம்பந்தப்பட்டிருப்பதன் அடிப்படையில் தானியேல் 11:31-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும், போப் அமைப்பினால், "அன்றாடபலி" நீக்கப்பட்டு பூசைபலி ஸ்தாபிக்கப்பட்டது.

(4) "அது தன் பாவநிவிர்த்திக்கென்று அங்கிகரிக்கப்படும்படி" (லேவியராகமம் 1:4) என்று சொல்லப்படுகிறது. இது எந்த நிபந்தனைக்கும் உட்படாதது. ஏனெனில், மற்ற பலிகள் தேவனிடத்தில் நெருங்குவதற்குச் செலுத்தப்பட்டாலும் ஆட்டுகடாவோடு இது ஒத்திருக்கிறது.

(5) தகன பலி யேகோவா தேவனுக்குச் "சுகந்த வாசனையாகச்" செலுத்தப்பட்டது (லேவியராகமம் 1:9). "இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி." இயேசு தன்னையே பலிசெலுத்தினார் என்று பவுல் கூறுகிறார். சுகந்த வாசனையான மற்ற காணிக்கைகள் செலுத்தப்படும்போது இப்படியாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை.

(6) தகன பலிகள் நேரடியாக கட்டைகளின் மேல் கிடத்தப்பட்டது. "பலிபீடத்தின்மேல் அக்கினியைப் போட்டு ... அக்கினியின்மேல் கட்டைகளை அடுக்கி ... துண்டங்களையும் தலையையும் கொழுப்பையும் பலிபீடத்திலுள்ள அக்கினியில் இருக்கிற கட்டைகளின்மேல் அடுக்கிவைக்கக்கடவர்கள்" (லேவியராகமம் 1:7, 8). இந்தக் கட்டை எதை அடையாளப்படுத்தும்? இது சிலுவை மரத்தை அடையாளப்படுத்துகிறது. ஆதியாகமம் 22:6-ஆம் வசனத்தில் ஆபிரகாமும், ஈசாக்கும் பலி செலுத்துவதற்காக மோரியா மலைக்குச் சென்றபோது, "ஆபிரகாம் தகனபலிக்குக் கட்டைகளை எடுத்து, தன் குமாரனாகிய ஈசாக்கின்மேல் வைத்து" இந்தச் சம்பவம், இயேசு சிலுவை சுமந்து கொல்கொதாவுக்குச் சென்றதை நமக்கு நினைப்பூட்டுகிறது (யோவான் 19:17). அந்தக் கட்டை சிலுவையானால், அந்த பலி ஈடுபலியாகும்.

**சமாதான பலி**

மூன்று மிருக பலிகளில் அடுத்துவருவது சமாதானபலி. இது தேவனோடு சமாதானத்தைப் பெற்றிருப்பவர்களின் பக்தி, உடன்படிக்கை மற்றும் அர்ப்பணிப்பைச் செலுத்துவதாக இருக்கிறது. லேவியராகமம் எட்டாம் அதிகாரத்தில் ஆட்டுக்கடா செலுத்தப்பட்டது - சமாதானபலி. லேவியராகமம் 3:5-ஆம் வசனம், ஆரோனுடைய குமாரர்கள், "பலிபீடத்து அக்கினியிலுள்ள கட்டைகளின்மேல் போட்டிருக்கும் சர்வாங்க தகனபலியின்மீதில் போட்டுத் தகனிக்கக்கடவர்கள்; இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி." ஏனெனில், நாம் அனைவரும் சமாதானம் பெற்றிருக்கிறோம் (சமாதான பலி).

"இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்" (ரோமர் 5:1, 2).

**பாவநிவாரணபலி**

மூன்று பலிகளில் பாவநிவாரணபலியே கடைசியானது. பாவத்தைச் சுத்திகரிப்பதே இந்த பலியின் நோக்கமாகும். இது பாவத்தைத் தீர்ப்பதோ, அல்லது சாபத்தை நீக்கவதோ அல்ல. (a) அறிந்துசெய்யும் பாவத்தை நீக்குதல் மற்றும் (b) பலி செலுத்துபவரின் இருதயத்திலிருந்து பாவத்தின் இயல்புகளை நீக்குதல். "நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் **சுத்திகரிப்பது** எவ்வளவு நிச்சயம்!" (எபிரெயர் 9:13, 14).

**கிறிஸ்துவ வாழ்க்கையில்**

லேவியராகமத்தில் சொல்லப்பட்ட இந்தப் பலிகளின் வரிசையானது, விசுவாசிகள்

தேவனிடத்தில் வரும்போது செலுத்தக்கூடிய பலிகளுக்கு ஒத்திருக்கிறது. நாம் முதலில் தகனபலிகளினால் முரண்பாடுகளை நீக்கி - இது நமக்கு ஒப்புரவாகுதலைத் தருகிறது. அதற்குப்பின் நாம் நம்மை தேவனிடத்தில் அர்ப்பணித்து சமாதானபலியை செலுத்துகிறோம். அதற்குப்பின் நம்முடைய வாழ்க்கை முழுவதிலும், நம்முடைய பிரதான ஆசாரியர் நம்முடைய வாழ்க்கையின் அனுபவங்களின் வழியாகப் பாவத்தின் இயல்புகளை வெளியேற்றும்.

லேவியராகமம் 8, 9 மற்றும் 16-ஆம் அதிகாரங்களில் சொல்லப்பட்ட பலிகளின் வரிசையில் எப்போதும் பாவநிவாரணபலி, தகனபலி, சமாதானபலி காணப்படுகிறது. கடைசியிலிருந்த பாவநிவாரணபலி இங்கு முதலில் இடம் பெற்றதன் காரணம் என்ன?

ஏனெனில், தேவனுடைய திட்டத்தை எவ்வாறாக காரியங்கள் நிறைவேறும் என்ற வழியை இந்த மூன்று அதிகாரங்களும் அடையாளப்படுத்துகிறது. இயேசு தன்னைதான் யோர்தானில் பாவ நிவாரணபலியாக ஒப்புக்கொடுத்து 3 1/2 வருடங்கள் பலிபீடத்தின்மேல் தகனிக்கப்பட்டார். இந்த அனுபவத்தின் முடிவில் கல்வாரி சிலுவையில் முழுமையான தகனபலியாக நம்மை மீட்பதற்காக ஈடுபலி செலுத்தினார். அதற்குப்பின் பெந்தெகொஸ்தே ஆசீர்வாதங்களைத் தொடர்ந்து அவருடைய சீஷர்கள் சமாதான பலிகளைச் செலுத்துவதை அடையாளப்படுத்தும்படி தங்களையே அர்ப்பணித்தார்கள்.

**எசேக்கியேல் 46-ஆறு ஆட்டுக்குட்டிகள்**

எசேக்கியேல் 46-ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்ட தகனபலிகள், இந்த உலகத்தை மீண்டும் ஒப்புரவாகுவதற்கு, சாபத்தைத் தொலைப்பதற்காக இயேசு கொடுத்த ஈடுபலியை நினைவுப்படுத்துகிறது. 6000 வருடங்களாக சாபத்திலிருந்த உலகத்தின் மனுக்குலத்திற்காக, இயேசு செய்த காரியங்களைப் புரிந்துகொள்வதற்காக இந்த ஆறு ஆட்டுக்குட்டிகளும் தகனபலிகளாகக் கொடுக்கப்பட்டது.

இவைகளைச் செய்யும்போது, அவர்களின் கைகளில் இருக்கக்கூடிய எதுவாயினும், அதோடு கூட செலுத்தலாம். அடிப்படையான பழைய ஆரம்பத்தின்படி நிர்ணயிக்கப்பட்டபடி மரக்காலில் 1/10 பங்கைச் செலுத்த வேண்டிய அவசியமில்லை. தேவனோடு இணைந்திருப்பதற்கு, இந்த உலகம் பரிசுத்தமான பெரும்பாதையில் நடக்க துவங்கும்போது, அவர்களால் செலுத்த முடிந்த யாவற்றையும் தேவன் ஏற்றுக்கொள்வார்.

"நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரியதாயிருக்கிறது" (புலம்பல் 3:22, 23).

**தந்தாய் உந்தன் நாமம் வாழ்க**

எங்களின் தந்தாய், எங்களின் தந்தாய், உமது நாமத்தையாம் அறியுமுன்னமே,
ஜாதிகள் அதனைக் களங்கப்படுத்தியே, வீணாக்கினாரே,
சீற்றத்தினால் எழும் ஒளிக்கதிரால் அன்றி, விசுவாசத்தின் அணையா சுடர்களினாலே
நாங்கள் பொருத்தனை செய்திட்ட
எம் இருதயமென்னும் புனிதமான பலிபீடங்கள் எரியட்டுமே,
கடுமையான களங்கம் எம்மில் இருந்திட்டபோதிலும்,
அவை உம் திருமுகம் தனையே மறைத்திட்டபோதிலும், எங்களின் ஆத்துமாக்கள், உம்
திருமுகம் தனையே மீண்டும் நோக்கிப்பார்க்க வேண்டுமே, அன்பின் சக்தியே எம் பாதைக்கு
ஒளி வீசட்டுமே,
எம் எஜமானின் தெய்வீக திட்டம் தன்னை மனம் விரும்பிக் கற்றுக்கொள்ள மனம் தந்திடுமே,
உம்மிடமும் பரலோகத்திற்கும் அது எம்மை வழிநடத்திச் செல்லட்டுமே,
மனிதனின் ஆழந்த துன்பத்திற்காய் தேம்பியழும் பரிதாபமான எம் சகோதரர்கள்,
அவர்களின் விம்மியழும் தாழ்மையின் குரல்கள், எதிரிகளின் சீற்றமிகுந்த ஒலிகளில்
கலந்தே, சந்தேகப் புயல்களின் ஒருங்கிணைந்த நடுவினிலே,
எங்களின் இதயம் மயக்கமடைந்தே, மேகங்கள் சூழ்ந்தே காணலாகிறதே,
உமதன்பு என்னைப் பற்றிக்கொள்ளாவிட்டால், எமக்கு,
இவ்வுலகினில் வாழும் பெலனிருக்காதே, எம் வாலிபத்தில் நாம் கொண்ட
வைராக்கியம் தன்னை புதுப்பித்துத் தாருமே, எங்களின் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளுமே,
எமது பாவம் பொறுத்திடல் வேண்டுமே, உம் சிறப்புமிகு செயல்களையே செய்வதற்கும்,
பரிசுத்த வாழ்வுதனை வாழ்வதற்கும், எம்மையுமே செதுக்கிவிடும் எம் தேவதேவனே,

# மருத்துவ அதிசயங்கள்

"என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி" (சங்கீதம் 103 :2-4).

சமீப காலமாக மருத்துவ சிகிக்சையில் நிறைவேற்றப்பட்ட சில தொழில் நுட்ப ரீதியான சாதனைகளைக் கருத்துகளைக் கீழே காணலாம்.

* Retinitis Pigmentosa என்ற வியாதியினால் பாதிக்கப்பட்ட ஒரு 66 வயது நிரம்பிய, வடக்கு காரோலீனாவைச் சேர்ந்த ஒரு விற்பனையாளர், அவர் வாழ்வின் பிற்பகுதியை ஒரு குருடராய் வாழ்ந்துவந்தார். இந்த வியாதியால் அவருடைய கண்களில் ஒளி உணர்வுகளைத் தூண்டும் அணுக்கள் அழிந்துவிட்டது. ஆனால் சில நாட்களில் உயர்மின் அணுவியல் மூலம் ஒரு செயற்கை கண்களைப் பெற்று பார்வையடைந்தார். வெளிச்சத்தை வித்தியாசப்படுத்திப் பொருட்களைக் கண்டுணரும் திறமையைப் பெற்றார்.

* கொலோராடோ ஆஸ்பத்திரியில் பிறந்த குழந்தைகளில் ஒரு குழந்தை, இன்று உயிருடன் இருக்கக் காரணம், அதைப் பரிசோதித்து, அதன் மருத்துவர் அந்தக் குழந்தைப் பிறப்பதற்கு முன்பே அதன் இடது நுரையீரலில் இருந்த கட்டியை அறுவை சிகிச்சை செய்து எடுத்துவிட்டார். தொப்புள்கொடி துண்டிக்காமல், அந்தக் குழந்தையை அதன் தாயின் வயிற்றிலிருந்து எடுத்து அதற்கு அறுவை சிகிச்சை செய்தார் அந்த மருத்துவர்.

* 2010-ஆம் ஆண்டு முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்ட போலாந்தைச் சேர்ந்த மனிதர் ஒருவர், இன்று சட்டம் ஒன்றின் உபயோகத்தால் நடமாடிக் கொண்டிருக்கிறார். கத்தியினால் தாக்கப்பட்டு அவரது முதுக்கெலும்பு துண்டிக்கப்பட்டது. பல மருத்துவர்கள் இணைந்து நுகரும் தன்மைக்கொண்ட ஒரு விசேஷமான அணுவை (Olfactory ensheathing) அவர் உடம்பிலிருந்து எடுத்து, அதனை பெருக்கி அவருடைய முதுகெலும்பில் அதனைப் பொருத்தினார்கள்.

* "Advanced Melanoma" ஒரு பயங்கரமான தோல் புற்றுநோய். கண்டுபிடித்த சில மாதங்களிலேயே நோயாளிக்கு மரணம் ஏற்படும். இந்த நோயைக் குணப்படுத்த ஒரு புதிய மருந்து ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

**மருத்துவ முன்னேற்றம்**

அற்புதங்கள் இயற்கைக்கு மாறுபட்டவையல்ல. ஆனால் நமக்கு இயற்கையைப்பற்றி என்ன தெரியுமோ அதற்கு மாறுபட்டவை என்றார். அகஸ்டீன் என்பவர் பல ஆண்டுகளுக்கு முன்பே நேற்றைய அதிசயங்கள் இன்றைய மருத்துவ முன்னேற்றமாக மாறிவிட்டது என்கிறார், இதுபோன்று சில முன்னேற்றங்கள் மனிதனின் சில புரிந்துகொள்ளும் தன்மையைக்கூட மாற்றியுள்ளது. எடுத்துக்காட்டாக, Tourette's Syndrome என்ற ஒருவகை நோய் முற்காலத்தில் தெய்வ குற்றமாக எண்ணப்பட்டு அதற்கு ஏற்றார்போல் அந்த நோயாளிகள் நடத்தப்பட்டார்கள். ஆனால் இப்பொழுதோ நரம்பு சீர்குலைவால் உண்டாகும் நோய் என்று கண்டுபிடிக்கப்பட்டு, உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

1944-இல் இருதயத்திற்கான முதல் அறுவை சிகிச்சை நடைபெற்றது. 2013-இல், சுமார் 3500 இருதய மாற்று அறுவை சிகிச்சை நடை பெற்றுள்ளது. 1900-ஆம் ஆண்டில் ஜனங்கள் நிமோனியா, இன்புலூயன்சா, காசநோய் மற்றும் பல தொற்று நோயினால் இறந்து கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுதோ நோயிற்குரிய முதல் அறிகுறி தெரிந்தபின் கூட தடுப்பூசி மூலம் அந்த நோயைத் தடுக்க இயலும். நோயாளிகளின் அணுக்களையே அவர்கள் உடம்பில் செலுத்தி குணப்படுத்தும் புதிய மருத்துவமும் உண்டு. மனிதனின் வியாதிகளுக்குச் சிறந்தமுறையில் சிகிச்சை மற்றும் குணமளிப்பதுகூட இன்று பெரிதளவில் முன்னேறிவருகிறது. ஆனால் மனிதனின் பெரிய எதிராளியான மரணத்திற்கு இன்றுவரை எந்த மருத்துவமும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஒவ்வொருமுறையும் புதிய தடைகளைத் தகர்த்தெரியும்பொழுதும் அது என்றும் நிரந்தரமானது என்பதை உறுதிப்படுத்தி வருகிறது. கடந்த முப்பது வருடங்களாக, 38 மனிதர்கள் மரித்து விட்டார்கள் என்று அறிவித்தப் பின்பு, எவ்வித மருத்துவ சிகிச்சையுமின்றி, மீண்டும் அவர்கள் இருதயம் துடிக்கத் துவங்கி, அவர்கள் உயிரோடு எழுந்தார்கள்.

இதற்கு தான் லாசரல் சின்ட்ரோம் என்று கூறப்படுகிறது. சமீபத்தில் லாசரஸ் பினோமினான் என்ற திரைப்படத்தில் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்ததுபோல் சித்தரித்து, அவர்கள் பரலோகம் மற்றும் நரகத்தின் அனுபவங்களைப்பற்றி எடுத்துரைப்பதாகக் காட்டப்பட்டது. லாசரஸ் சின்ட்ரோம் பற்றி ஆராய்ச்சி செய்கையில், டிசம்பர் 2007-இல் வெளியான புத்தகம் "The Journal of the Royal Society of Medicine" அதன் ஆசிரியர் நம் வேதாகமத்திற்கு ஒத்த சில சிறப்பான முடிவுகளை எடுத்துக் கூறினார். "நாம் மிக முக்கியமாக உணர வேண்டியது என்னவென்றால் மரணம் என்பது ஒரு சம்பவம், ஆனால் ஒரு செயல்முறை... அது நேரிடும்பொழுது நாம் தொடர்ந்து உயிர் வாழ ஆதரவாய் இருக்கும் சில உறுப்புக்கள் தோல்வியடைந்துவிடுகின்றது.

வியாதிகளைக் குணமாக்கும் கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சிபற்றி எடுத்துக்கூறும் இந்த மாதிரி ஜெபம் (மத்தேயு 6:10) இன்னும் பலருக்கு ஒரு மர்மமாகவே உள்ளது. இந்த இராஜ்யம் தேவன் இந்தப் பூமியைக்குறித்து ஆபிரகாமிற்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி, இந்தப் பூமியில் வாழும் அனைத்து குடும்பங்களையும் ஆசீர்வதித்து கடற்கரை மணலைப்போல பலுகி பெருகச்செய்யும் ஆதியாகமம் 22:17. ஏசாயா, பேதுரு மற்றும் யோவான்

டஇந்த இராஜ்யத்தின் புதிய வானங்கள் மற்றும் புதிய பூமியை குறித்தே எழுதியிருக்கிறார்கள் (ஏசாயா 65:17; 2 பேதுரு 3:13; வெளிப்படுத்தல் 21:1).

ஆபிரகாமிற்கு வாக்களிக்கப்பட்ட பூமிக்குரிய பாகம் யாக்கோபிற்குக் கூறப்பட்டது. ஆதியாகமம் 28:13-14 அவருடைய வித்து அல்லது வழிமரபினர்பற்றி 14-ஆம் வசனத்தில் கூறப்படுகிறது. "உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்." இந்தப் புதிய உடன்படிக்கையைச் சார்ந்து கிறிஸ்துவின் இராஜ்யம் யாக்கோபின் வித்தை விரிவடையச் செய்து அதற்குள் எல்லா மனுக்குலத்தையும் சேர்த்துக்கொண்டு இந்தப் பூமியை நிரப்பும்.

இந்த இராஜ்யத்தின் நோக்கமே ஆதாமினால் ஏதேனை இழந்த இந்த மனுக்குலத்திற்கு மீண்டும் அதை மீட்டுத்தருவதே மீட்பு என்பது மனிதனுக்கு நித்திய வாழ்வு பரிபூரண சுகம். இந்தப் பூமியின் ஆட்சி, மற்றும் தேவனுடன் குமாரன் என்ற உறவை அளிக்கும். கிறிஸ்துவின் இராஜ்யத்தின் நோக்கம் இந்த உலகம் முழுவதும் இருக்கும். ஆதாமின் மரணம் என்ற சிறையிலிருந்து எல்லா மனிதனையும் விடுதலைச் செய்யும் (ஏசாயா 42:7; 49:9; 61:1). நிகழ்கால பூமியின் இராஜ்யம் அனைத்தையும் கரைத்துவிட்டு, மனுகுலம் அனைத்தையும் ஒரு தனி புனித இனமாக உருமாற்றிவிடும் (சங்கீதம் 2:9; தானியேல் 2:44; வெளிப்படுத்தல் 2:27). தேவனின் அறிவு எல்லோருக்கும் அறிவிக்கப்படும் (எரேமியா 31:34; ஏசாயா 11:9; ஆபகூக் 2:14).

கிறிஸ்து மற்றும் சபையின் மூலம் செயல்பட்டுக்கொண்டிருக்கும் தேவனின் ஆற்றல் உடைந்த எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துவிடும். முதலில், ஆதாமிற்காக கிறிஸ்துவின் ஈடுபலியின் மகிமை, எல்லா மனுக்குலத்தின் மீதும் செயல்முறைப்படுத்தப்பட்டு ஆதாமின் சாபத்திலிருந்து அவனை விடுதலையாக்கும். அதோடு ஆதாமின் மரணமும், அந்த மரணத்தின் நிகழ்வுகளும் ஒரு முடிவிற்கு வந்துவிடும். இதனால் கிறிஸ்து மற்றும் சபையார் அனைவரும், கல்லறையில் இருக்கும் எல்லோரையும் உயிரோடு எழுப்பி, கிறிஸ்துவின் வார்த்தையைக் கேட்டு நீதியைக் கற்றுக்கொள்வார்கள் (யோவான் 5:28-29).

கிறிஸ்துவின் இராஜ்யத்தில் எல்லா வியாதிகளும் குணமாகும். ஒருவரும் அவன் நோயாளி என்று கூறமாட்டான். ஏனென்றால், அவனுடைய நோய்கள் எல்லாம் குணமாகிவிடும் (ஏசாயா 33:24). மனிதனை ஆட்கொள்ளும் கொள்ளை நோய்களான முடக்குவாதம், பார்வையற்றத்தன்மை, தொற்று நோய், இருதய நோய், மரபு சார்ந்த நோய்கள்போன்ற எல்லா நோய்களும் குணமாகும். ஏனென்றால், இவையெல்லாம் ஆதாமின் சாபத்தால் வந்தது.

மனுக்குலம் கல்லறையிலிருந்து கிறிஸ்து கொடுக்கும் சரீரத்தோடு வரும், எவ்வித நோயினாலும், ஆதாமின் சாபத்தாலும் பாதிக்கப்படாத ஒரு புதிய சரீரமாக வெளியே வருவார்கள் (1 கொரிந்தியர் 15:38-40). சாபம் மனுக்குலத்தைவிட்டு அகன்ற பிறகு இராஜ்யத்தைப்பற்றின உண்மையும் நீதியும் எல்லோருக்கும் தெளிவாகப் புரியும். விரும்பினோர் இந்த நற்செய்தியை இருதயத்தில் தாங்கினவர்களாய், அதனை நடைமுறைப்படுத்தி பக்தியின் பாதையில் முன்னேறிச் செல்வார்கள் (ஏசாயா 35:8).

ஆனாலும் ஒவ்வொருவரும் கல்லறையிலிருந்து வரும் அந்நாளில், அவர்கள் வாழ்நாளில் உருவான அதே விழுந்துபோன குணத்துடனே வருவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் மரணம் ஏற்படும் முன்னிருந்த அவர்களின் எண்ணம், பண்பு, குணம் எல்லாம் சுயநலமாகவும் குறைபாடு உள்ளதாகவுமே காணப்படும். இந்தக் குணங்களையெல்லாம் மாற்றிவிட்டு அதற்குள் ஒரு பரிபூரண மனிதனின் இருதயத்தைப் பொருத்துவது இராஜ்யத்தின் வேலையாகும். ஆனால் அம்மனிதர்கள் அதனைக் கற்றுக்கொள்ள ஆர்வம் காட்டி, அதற்குக் கீழ்ப்படிந்தால் மட்டுமே இவை நிகழும் (எசேக்கியேல் 11:19-20).

### இராஜியத்தின் ஆசீர்வாதம்

இராஜ்யத்தின் ஆசீர்வாதமானது, இந்த மனுகுலத்தின் மீது தேவன் வைத்திருக்கும் அளவற்ற அன்பைப் பிரபலிக்கும் ஓர் அளவுகோல். அது எல்லா மனிதனின் மீதும் ஊற்றப்பட்டு, ஒவ்வொரு தனிமனிதனின் கல்லான இருதயத்தையும் உருக்கிவிடும். ஏசாயா கூறும்பொழுது, இந்த ஆசீர்வாதமானது, இதுவரை மனுக்குலம் கண்டிராத ஒரு பெரிய விருந்து என்று விவரிக்கிறார் (ஏசாயா 25:6-8). அந்த ஆசீர்வாதத்திற்கு வரும் மறுமொழியாவது, "அக்காலத்திலே: இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும்" (ஏசாயா 25:9).

இந்த இராஜ்யம், மனுக்குலம் அனைத்திற்கும் தேவனுடைய குணங்களை திரும்பக்கொடுக்கும். அதில் அவர்களின் இருதயம் பரிசுத்தம் பெற்று தேவனின் அன்பாலும் ஆவியின் கனிகளாலும் நிரப்பப்படும். கீழ்ப்படியாமையால் நிகழும் பின்விளைவுகளையெல்லாம் ஒவ்வொரு நபரும் பாவத்தின் அனுபவங்களைக் கற்றுக்கொள்வார்கள். இனி மரணம் என்பதே இருக்காது. ஏனெனில், கீழ்ப்படியாமை என்ற அந்த எண்ணம் இனிமேல் மனிதனின் இருதயத்திலிருந்து தூக்கி எறியப்படும். மனிதன் மீண்டும் இந்தப் பூமியை ஆளுகை செய்வான். தேவன் மனிதனுக்காக உண்டாக்கிய ஆட்சி (சங்கீதம் 8:5-8) ஆசீர்வாதங்களின் கூற்றாய் இருக்கும். தேவனை கண்டிப்பாக எல்லோரும் மகிமைப்படுத்துவார்கள் (சங்கீதம் 67:3-7).